ஔம்

# பாபாஜி கீதை

(கிரியா)

ஆசிரியன் :

சா. அ. அ. ராமய்யா, எம். ஏ.

முன்னுரை :

வீ. டீ. நீலகண்டன்.

விலை அணா 6/-

ஜயந்தி வெளியீடு.


# அர்ப்பணம்

கார்த்திகை தீபத்தன்று யோகதீபமாகிய கிரியா பாபாஜி இம்மண்ணுலகை அலங்கரித்தார். ஜயந்தி யன்று இவ்விதழ் அவரது கமலபாதங்களில் சமர்ப்பிக் கப்படுகிறது. பாபாஜி ஞானச்சுடர் காட்டுத்தீபோன்று உலகெங்கும் பரவட்டும் !

சா. அ. அ. ராமய்யா

## சா. அ. அ. தெய்வானை ஆச்சி

ஞாபகார்த்த மலர்



கிரியா பாபாஜி



ஸ்ரீமதி சா. அ. அ.
தெய்வானை ஆச்சி

கிரியா பாபாஜி ரகசியம் வெளியீடு : 1

ஒளம்


# பாபாஜி கீதை

(கிரியா)

சா. அ. அ. ராமய்யா.

விலை அணு 6/-
தபால் செலவு வேறு

ஜயந்தி வெளியீடு:
30-XI-52



வி. டீ. நீலகண்டன்



சா. அ. அ. ராமய்யா,

# முன்னுரை

## கிரியா பாபாஜி கீதா ரஹஸ்யம்

அத்விதீயமான பிரம்மத்தை விளக்கிச்சொல்ல ஆயிரம் நாப்படைத்த ஆதி சேஷனாலும் முடியாதென்று வேதங்களே முறையிடும் பொழுது, அத்வைத நூல்களை அநுசரித்து எழுததத்துணிந்தது சத்குரு கிரியா பாபாஜியின் அநுகிரஹத்தால் சாதிக்க முடியாததெதுவுமில்லையென்ற திடநம்பிக்கையேயாம். நாக்கின் பெருமையை எடுத்துரைக்க நாக்கன்றி வேறு எநத அங்கத்துக்கும் சக்தி இல்லாததுபோல் பிரம்மத்தை விளக்க பிரம்மத்தால்தான் முடியும். உயிருடன் கூடிய உடமபினையுடைய மனுஷ்யனின் நாக்கின் காரியமே வாக்கு ஆகுமேயல்லாது, உடலினின்று பிரித்தெடுத்த நாக்குக்குப் பேசும் சக்தி கிடையாது. அதேபோல் நிர்க்குணப் பிரமமத்தின் சக்தியைச் சப்தப் பிரம்மத்தினின்றுதான் அறியக்கூடும். (பிரமமபிந்து உபநிஷத்). மனிதனே சப்தம் பிரம்மமாகிய நடமாடும் தெய்வம். ஆதம ஞானமாகிய பராசக்தி இவனிடத்தில் தானிருக்கிறது. 'தேஹமே தேவாலயம். சுத்தமான ஜீவனே சிவன். உமியினால் மூடியிருக்கும் பொழுது நெல். உமிபோனல் அரிசி. அதுபோல் கர்மபந்தமிருக்கும் போது ஜீவன்; பந்தம் போனல் சிவன்.' இந்நூலும (பின்னர் வரக்கூடிய நூல்களும்) மனிதனுடைய தேக வாசனை, லோக வாசனைகளை நீக்குவதுடன் சாஸ்திர வாசனையாகிய பரோக்ஷ ஞானத்தையுமடக்கச்செய்து அபரோக்ஷ ஞானசித்தியையுடைய உபகாரமாகுமெனக்கருதி, இவைகளை (அடியேனும், எனது மற்றொரு பாகமாகிய ஸ்ரீ சா. அ. அ. ராமய்யா அவர்களும்) கிரியா பாபாஜியின் ஆஞ்ஞையின்படி ஆஸ்தீகர்களுக்கு சொற்ப விலையில் வினியோகஞ்செய்ய வெளியிடுகிறோம்.

### சத்யம்

ஜீவன், ஈஸ்வரன் என்ற இரு பக்ஷிகள் சரீரத்திலிருக்கின்றன. ஜீவன் கர்மபலனை அநுபவிக்கிறது. ஈஸ்வரன் சாக்ஷியாக இருக்கிறார். சச்சிதானந்த பிரம்மமே சத்யம். கடாகாசம், மடாகாசம், மஹாகாசம் ஆகிய மூன்றிலும் வித்தியாசமில்லாததுபோல் ஜீவேஸ்வர பிரம்மங்களில் வித்யாசமே கிடையாது.

நாமரூபங்கள் கற்பனையேதான். ஒவ்வொரு தொழிலும் வாழ்க்கைக்கு அவசிய மானதால், ஏற்றத்தாழ்வு என்பதே கிடையாது. தொழில் முடிந்ததும் ஸ்நானம் செய்வதாலும், சுத்த உடை தரிப்பதாலும், பரிசுத்த ஆகாரம் உட்கொள்வ தாலும், நான்கு ஆஸ்ரமங்களில் ஒன்றான தன்னுடைய ஆஸ்ரமத்துக்கு மாறாமலிருப்பதாலும், இகத்திலும், பரத்திலும் சுகத்தை அடையலாம். அது சிற்க, கைலயங்கிரியில், பரமசிவன் தன் சக்தியுடன் கொலுவீற்றிருக்கிறார். சிஷ்யம் முன்னால் படுத்திருக்கிறது. முருகன் ஒருபுறமும், கணபதி ஒரு புறமும் அமர்ந்திருக்கின்றனர். மயிலும் மூஷிகமும் அவரவர் பக்கம் உள்ளன. கணங்கள் கூடியிருக்கின்றனர். சங்கம், பேரிகை, வாங்கா, சேமக்கலம், மத்தளம் முதலிய வாத்தியங்கள் ஒலிக்கின்றன. வாத்தியகோஷம் மெதுவாக நிற்கிறது. 'ஹர ஹர மஹாதேவா,' என்ற கோஷம் கேட்கிறது. சங்கரனது நெற்றிக்கண்ணினின்று ஒரு ஜோதி புறப்படுகிறது. அந்த ஜோதியின் மஹிமை யைதான் எல்லோரும் அறியவேண்டும். அதற்கு கிரியா பாபாஜியின் பூர்ண கருணைகடாக்ஷம் வேண்டும். ஆத்மஞானத்தின் மஹிமைக்குக் கிரியா பாபாஜி ஓர் உன்னத சிகரம். உலகத்தில் மனிதன் அடையும் வெற்றிகளுக்குள் ஆத்ம ஞானமே தலை சிறந்தது. இந்த ஆத்மஞானமே எல்லோரையும் ஸ்தம்பிக்கச் செய்வது. இவர்களின் உலக வாழ்க்கைத்தன்மையை அறவே ஒழித்து இவர்கள் இதயகுகையில் ஞானவிளக்கை சதா சர்வகாலமும் பெருஞ்சோதியாக ஜ்வலிக்க செய்வது இந்த ஆத்மஞானமே தன் ஹிருதய குகையில் ஆத்மாவைத் தரிசித் தவன் யாவர் உள்ளத்திலும் உள்ள ஆத்மாவாக ஆகிவிடுகிறான்.

**ஈஸ்வரனே பாபாஜி**

இப்புத்தகத்தில் இந்த அற்புத சக்தியைப்பற்றி அநேக விவரங்கள் தரப் பட்டிருக்கின்றன. இக்கோயில்களிலிருந்துதான் கிரியா பாபாஜி பிரகாசிக் கின்றார். இங்கிருந்துதான் ஆத்மீகத்துறையில் கைத்தூக்கி விடுகின்றார். இங்கிருந்துதான் இவனுக்கு மோக்ஷத்துக்கு வழிகாட்டுகிறார். ஈஸ்வரனே (பாபாஜியே) குருவாக வந்து நம்மை ஆட்கொள்ளுகிறார். அவருடைய அந்தராத் மாவிடமிருந்து வந்த வார்த்தைகளே எனக்கும், எனது மற்றொரு பாகமாகிய ஸ்ரீ ராமய்யா அவர்களுக்கும் ஊக்கத்தையும் உற்சாகத்தையும் அளித்து இப் பெரிய காரியத்தைச் செய்து முடிக்க சக்தியையும் அளித்தது. கிரியா பாபாஜியின் உத்திரவு 'பணியாற்றுக, அன்பு செய்க, தியானம் செய்க, உண்மையுணர்க' எங்கள் இருவரையும் படுத்தப் படுக்கையிலிருந்து எழுப்பியது. சத்குரு வின் கிருபையினால் மனிதன் ஒரு தெய்வீக உயிரென்றும், அவனிடம் கடவுள் தன்மையுண்டென்றும் அறிந்து நாம் இறைவனது அறிவொளியினாலே இயங்கி வாழ்கின்றோம்; மிகவும் உயர்வான தெய்வீக உணர்ச்சி எல்லோரிடமும் மறைவாக உள்ளது என்பதை நன்குணர்ந்தோம். பனித்துளியை உருண்டை வடிவமாகச் செய்வது இறைவனது (பாபாஜியின்) ஆணையே. மிகச்சிறிய தாழ்வாரத்திலும், அற்பப் பிராணியிடத்திலும், மிகவும் நுட்பமான உயிரணுவிலும், உயிர்ப்பைத்தந்து

நிற்பது அவருடைய ஆன்மாவே, காயரும்பு மலர்வது அவரது சக்தியாலேதான் கடவுளைப்பற்றிய அறிவுக்குறைவே வாழ்க்கையிலுள்ள துயரத்திற்கும், உலகிலுள்ள குழப்பம், துன்பங்கட்கும் ஆணிவேர். அவரைப்பற்றிய (பாபாஜியைப் பற்றிய) அறிவைக்கொண்டு, அவரது அருள் ஒளியிலேயே நமது அன்றாட நடவடிக்கைகளைகொண்டு செலுத்துவதிலேயே உண்மையான சுகமும், வாழ்க்கையின்பமும் அடங்கியுள்ளன. வாழ்க்கையைப்பற்றிய அறிவறிந்த தத்துவக் கொள்கைதான் மக்கள் வாழ்க்கையிலுள்ள எல்லாத் தீமைகட்கும் நிகரற்ற மருந்து. அதுவே மணிமந்தர ஔஷதம். எந்த பரமபுருஷனின் அணுவானது சகலபுவனங்களிலும் பரந்து அவற்றைத்தாங்கி நிற்கின்றதோ அவரிடம் கொண்ட நம்பிக்கையும், பற்றுமே தற்காலம் உலகமுழுதும் மக்களைத்தொடர்ந்து பிணித்துள்ள அச்சம், துன்பங்கட்கு உயர்ந்த மருந்தாகும். ஆதலின், அறிவின் பொருட்டு வாழ்க்கையைப்பற்றிய ஓர் அறிவுத்தத்துவத்தை தேடிக்கொண்டு ஒளிபெற முயலுங்கள். கடவுளிடம் நம்பிக்கைக் கொள்ளுவது மட்டும்போதாது; அதனை வலுப்படுத்திக் கொள்ளுங்கள். உங்களிடம் வெறுக்கத்தக்கனவிருப்பின், அவைகளைக் களைந்து கடவுளைக்காண அவாவுங்கள். வளர்ச்சியுறுக, பல்வகையிலும் பெருக்கமுறுக, தெய்வீக வாழ்க்கை கொள்கைகளை நடைமுறைக்குக் கொண்டுவாருங்கள். உங்களிடம் உள்ள உண்மை யொளியையோ, உள்ளும் புறம்பும் உள்ள கடவுள் உலகத்தையோ, அற்ப ஆசைகளாலும், உணர்ச்சிகளாலும் மறையாமற் பார்த்துக்கொள்ளுங்கள். ஆண்டுதோறும் புத்திசாலியாகவும், பெருந்தன்மையுடையவராகவும், தெய்வ உணர்வுள்ளவராகவும் வளர்ந்து வாருங்கள். விரிந்ததாகவும், தூய்மையும், தெய்வத் தன்மையும் வாய்ந்து குற்றமற்றதாகவும் உமது வாழ்க்கை இருக்கட்டும். ஒவ்வொரு துறவியும், அறிஞனும் நிறுவித்துள்ளபடி நீங்கள் அனைவரும் கடவுளின் திருவுருவங்களே; விளக்கி நில்லுங்கள். ஒவ்வொரு தத்துவ சாஸ்திரி, சித்தன் என்ற இவர்களது வாழ்க்கை இவ்வுலக வாழ்க்கையில் எவரும் டம்பத்தை—படாடோபத்தை—காட்டியதோடு ஒவ்வொருவர் அகத்திலிருந்து அவரவரை ஆட்டி நிற்கும் இறைவனையும், அவன் எள்ளுக்குள் எண்ணெய்போல் எங்கும் நிறைந்திருக்கும் தன்மையையும், மறுமையுண்மையையும் காட்டி நிற்கின்றது. இத்தகைய உயர்ந்த ஆண்மக்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி துறவிகளாகவோ, ஞானிகளாகவோ, தத்துவ சாஸ்திரிகளாகவோ, தெய்வீக வீரர்களாகவோ, வளர்ந்து பூரண ஆற்றலும், அமைதியும், மகிழ்ச்சியும் நிறைந்த வாழ்வை யெய்துவீராக.

## இராச பாட்டைகள்

சில உண்மையான தெய்வீகச் செயல்கள், அருளோடு கூடிய மனம், சேவை செய்யும் கை, சில நிமிஷங்களேனும் ஜெபம் செய்தல், இறைவனது தெய்வ சம்பந்தமான அம்சங்கள், சிறிது பொழுதேனும் தியானம், தூய்மையான உள்ளம், உறுதியான எண்ணம், பொறுமை, விடாமுயற்சி—

இவைகளே நிரந்தரமான அமைதிக்கும், அழியாத இன்பத்திற்கும் இராஜ பாட்டைகள் என்ற நேர் வழிகளாகும். எல்லாம் வல்ல கிரியா பாபாஜி உங்களுக்கு ஆரோக்கியத்தையும், நீண்ட ஆயுளையும், அமைதியையும், இன்பத்தையும், தெய்வீக அருளையும், தெய்வீகத்தன்மையையும் அருள்வாராக. சர்வ சக்திமானான அவ்விறைவன் உங்களுக்கு ஆன்ம வளர்ச்சிக்கான பலவற்றை அருள்புரிவாராக. உங்களைச் சுற்றியுள்ள இறைவனுடைய ஒளியும், அன்பும், இன்னும் மேலும் மேலும் பொருந்தி விளங்குவதாகுக.

ஔம் தத் ஸத் ஔம்; ஔம் சாந்தி, சாந்தி, சாந்தி!!!

நெ. 9. சூரம்மாள் சந்து
எழும்பூர், மதராஸ்-8.

**வி. டி. நீலகண்டன்.**

# சரிதம்

யோகம் என்ற சொல் சங்கமம் எனப் பொருள்படும்; அதாவது ஜீவாத்மன் பரமாத்மனாகிய கடவுளுடன் ஐக்கியமாவதற்கு ஏதுவான புராதன விஞ்ஞான கலையே யோகம். ஆரியருக்கு முன் பாரத நாட்டில் குடியிருந்த திராவிடர்கள் இக்கலையைப் பயின்றனர் என்பதற்குச் சான்றுளது.

**கிரியா யோகம்**

மோகின்ஜோ—டாரோ குழிவெட்டு பொருள்களில் சில உருவங்கள் யோகாசனத்திலிருப்பதைக் காண்கிறோம். மேலும் திராவிடர் சிவச்சின்னமாகிய லிங்கத்தைப் பூஜித்தனர். சிவன் யோகமூர்த்தி என்பதைப் பலர் அறிவர்.

அடுத்தது மாப்பெரும் ஆரிய படையெடுப்பு. ஆளவந்தவர் ஆளப்பட்டனர்; பாரத சமரச சாகரத்தில் இரண்டற கலந்தனர். இவ்வாரியர் யோக விஞ்ஞானத்தைத் திராவிடர்களிடம் கற்றிருக்கவேண்டும்; தம் புத்திநுட்பத்தின் மூலம் அவ்விஞ்ஞானத்தை அபிவிருத்தி செய்திருக்கவும் கூடும். ஹிந்து மறையாகிய பகவத் கீதையில் [அத்.IV. செ. 1, 2] யோகம், ஜோதிமய வைவஸ்வதனர் நீதி சாத்திரத்தை வகுத்த மநுவிற்குச் சொல்ல; மநுசூரிய வம்ச இக்ஷ்வாகு மன்னனுக்குப் போதித்தார். இவ்வாறு பரம்பரையாக யோகம் இராஜரிஷிகளால் கற்கப்பட்டது.

ஸ்ரீ அரவிந்தர் தெளிவாகக் கூறுவதுபோல உலகில் எந்நாடும் நிரந்தரமாக ஆதிக்கம் செலுத்தியது கிடையாது. ஒவ்வொரு யுகத்திலும் ஏதேனும் ஓர் நாடு பிரபலமாக விளங்கும்; பிறகு க்ஷீணித்து மறையும். நற்காலத்தில், சத்திய யுகத்தில் அந்நாட்டின் பிரத்தியேக குணாதிசயங்கள் பிரபலமாக விளங்கும். அந்த யுகத்தில் யோகம் பட்டவர்த்தனமாக யில்லாவிட்டாலும் பெருமளவில் இந்தியாவில் அனுஷ்டிக்கப்பட்டிருக்கும். இராஜ ரிஷி ஜனகர் போன்ற யோகிகள் தேசத்தை ஆண்டனர்.

பகலிற்குப் பின் இரவு வருவது நிச்சயம்; சத்திய யுகத்திற்குப் பின் அஞ்ஞான லௌகிக காலப்பகுதி வந்தது. சக்திவாய்ந்த விஞ்ஞானமாகிய யோகத்தை துர்விநியோகம் செய்வதை அகற்றுவிட்டாலும் தீமையைக் குறைக்க யோகக் குருக்கள் அதற்குப் பல்வேறு தடைகள் விதித்தனர். சிலசமயம் அவ் விஞ்ஞானக் கலையே மறைந்து மகா நிபுணரால் புதிப்பிக்க வேண்டி வந்தது.

துவாபர யுகத்தில் கிருஷ்ண பகவான் சந்தேகமற்ற முறையில் இவ்வ ரகசிய யோகக் கலையை அர்ஜுனனுக்குப் போதித்தார் (பகவத் கீதை IV. 29; V. 27 28) பிறகு பதஞ்சலி மகரிஷி தோன்றி ஸ்லோகங்கள் இயற்றி கிரியா யோகமென்ற பெயரைப் பிரயோகித்து இவ்விஞ்ஞானக் கலையை நியமனப்படுத்தினார். இதுவே இப்போது தர்க தர்சனங்களில் ஒன்றாக விளங்குகிறது. எலிஜா, ஏசுநாதர் போன்ற தீர்க்கதரிசிகள் பதஞ்சலி இராஜயோகத்தை யொத்த முறையைக் கையாண்டுளர்.

பாரதம் மீண்டும் பலத்துறைகளிலும் புத்துயிர் பெற்று எழும்போது பாபுஜி இராமகிருஷ்ண பரமஹம்ஸர், ஸ்ரீ அரவிந்தர், ரமண மகரிஷி, மகாத்மா காந்தி பாபாஜி போன்ற மகான்கள் முன்னணிக்கு வருகின்றனர். இத்தேசிய துயிலெழுச்சியில் பாபாஜி ஆற்றிய சேவை மறைந்துபோன யோகமுறையை மீண்டும் கண்டுபிடித்துத் தெளிவாக்கியதே. அதற்கு அவர் **கிரியா** என நாமஞ் சூட்டினார். இது பாரதக் கலாசாரக் கிரீடத்தில் ஒப்பற்ற இரத்தினம்.

இச்சீரிய யோகி தமிழர் எனக்கூறினால் எத்தமிழனுக்குத்தான் மனம் பூரிக்காது. சித்தர்களுக்குப் பெயர்போன தமிழ் திருநாட்டில் தென் ஆர்காடு ஜில்லா (பரங்கிபேட்டைபோர்டோ நோவோ)யில் கி.பி. 203ல் பிராமணச் சைவக்குடும்பத்தில் எட்டாவது குழந்தையாகக் கார்த்திகை தீபத்தன்று பிறந்தார். நக்ஷத்திரம்

**பிறவிச் சோதனை**

ரோகிணி. அவரது அன்னைக்குக் கடைசி மகவு மீதிருந்த பிரியத்தைக் காட்டிலும் தம் சகோதரனிடம் அதிக பாசம் இருந்தது. ரோகிணி நக்ஷத்திரத்தில் பிறந்த எட்டாவது பிள்ளையால் அம்மான் உயிருக்கு ஆபத்தென்று யாரோ கூறினர். எப்படியேனும் சோதரன் உயிரைக் காப்பாற்ற தாய் சதியாலோசனை செய்தாள். அன்னையே பாபாஜி ஐந்து வயது பாலனாகயிருந்தபோது கூறியதுபோல, குழந்தை பிறந்த ஏழாம் நாள் ஏழு பெரிய நெல்மணிகளை வாயில் அள்ளிபோட்டாள் சிசு விக்கிச் சாகட்டுமென்பதற்காக! ஆனால் அவ்வேழு நெல்கள் அவரைக் கொல்லாது 1749 ஆண்டுகளுக்குமேல் காலனையும் காலத்தையும் பரிகசித்து நிற்கிறார்.

ஐந்தாம் வயதில் கோயில் உற்சவத்தின்போது ஒரு முகமதியன் அவரைத் திருட்டுத்தனமாக டாக்காவிற்குக் கொண்டு போனான். "நவீன விமர்சனம்" (மாடேர்ன் ரிவ்யூ) என்ற பத்திரிகையின் காலஞ்சென்ற ஆசிரியராகிய இராமனந்த சடோப்பாத்தியாயாவின் முப்பாட்டனாரின் பிதாவாகிய மூதாதையர் பாபாஜியை இரண்டு ரூபாய் கொடுத்து வாங்கினார். பின்பு இவர் காசிக்குச் சென்று மாபெரும் யோகியானார். அவரது சகோதரி மாதாஜியும் ஒரு சீரிய யோகினி. மானிட வர்க்கத்தின் துயரைக்கண்டு மனம் இளகி பல நூற்றாண்டுகளாகத் தம் உருவைக் கலைக்காது தேச ஜாதி, மதப் பேதமின்றி அரும்பெரும் உலகச் சேவை புரிந்து வருகிறார்.

ஒன்பதாம் நூற்றாண்டுவாகில் புகழ்பெற்ற அத்வைத ஆச்சாரியர் சங்கரர் கோவிந்த பகவத்பாதர்கீழ் குருகுலவாசத்தை முடித்துக்கொண்டு ஹிந்துஸ்தானத்தின் உயிர்நாடியாகிய காசிக்குச் சென்றார். அங்கு பாபாஜி அவர் முன் தோன்றி கிரியா யோக ரகசியங்களைப் போதித்தார். சங்கராச்சாரியார் பல அற்புதங்கள் செய்ததின் மர்மம் இப்போது விளங்கும்.

மத்தியகாலத்து இந்தியாவில் மதப்புரட்சி ஏற்பட்டது; அவ்வமயம் அரசாண்டது ஹிந்து - முஸ்லிம் சக்கரவர்த்தி அக்பர். பல புகழ்பெற்ற மகான்கள் பாரதத்தின் பல்வேறு பகுதிகளில் அலங்கரித்தனர். அவர்களில் ஒருவர் காசிவாசி மகாயோகி கபீர்தாஸ். அவருடைய தீக்ஷைகுரு ஒரு பக்தராகையால் கபீர்தாஸ் சிறிய யோகியாக விளங்கியது எங்ஙனமென்று பன்முறை ஆசிரியன் வியந்ததுண்டு. உண்மை யாதெனில் பதினைந்தாம் நூற்றாண்டில் பாபாஜி அவருக்குத் தீக்ஷை யளித்தார்.

"யார் வந்தாலும் யார்போனாலும்
நான் போய்கொண்டே யிருக்கிறேன்"

என ஆங்கில கவி டெனிஸனின் 'ஓடை' அமரகாவியம் பாடுகிறது. அவ்வாறே கிரியா பாபாஜி அமிர்தத்தை யுண்ட தேவர்போன்று இம் மண்ணுலகை அலங்கரித்து வருகிறார்.

**பத்ரி வாசம்**

பாரத நாட்டின் கிரீடம்போல் விளங்கும் இமயம் ஒரு தபோவனம். அக்காலம்முதல் இக்காலம்வரை நித்திய தபசிகளும் மாபெரும் யோகிகளும் அப்புனித பூமியை யலங்கரித்து வருகின்றனர். பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஓர் சுபதினத்தில் துணையற்ற யாத்திரிகர் ஒருவர் வெறிகொண்டவர் போன்று ஒரு செங்குத்தான பாறையில் ஏறிகொண்டிருந்தார். அவர் நோக்கி சென்றது எளிதில் அண்டமுடியாத ஒரு பாறைப்படலம். இந்த யாத்திரிகர் மாதக் கணக்காக சளைக்கா ஆர்வத்துடன் காலத்தையும், மரணத்தையும் வென்ற தம் பரன்முக்தரைத் தேடிவருபவர். ஓர் அசரீரி சக்தியால் தூண்டப்பட்டு சிரமத்துடன் உயர்ந்த பாறைப்படலத்தை யடைந்துவிட்டார். அங்கு கண்டது சுமார் இருபத்தைந்து வயதுள்ள சிரஞ்சீவி; பலமுள்ள சிவப்பு தேஜஸ் மேனியான்; நடுத்தர உயரமும் தேகக்கட்டுமுள்ளவர். கையில் தண்டம் (மூங்கில்தடி); நீண்ட, பளபளப்பான செம்மட்டைமயிர்; கருமை, அமைதி, பிரகாசம் நிறைந்த யோக விழிகள்; பிரத்தியேக விரிந்த மூக்கு. சுருங்க கூறின் அவரது அருமை, முன்னணி சீடர், லாகிரி மகாசயாவின் யௌவன நகல்போன்றுறிருந்தார்.

அழையா யாத்திரிகர் அன்பர்கள் குழாமில் புகுந்தார். சுவாமி கேவலானந்தரும் இரு அமெரிக்க மகான்களும் அக்கூட்டத்தில் இருந்தனர். மிக பக்தி நிரம்பிய பிரதிபையுடன் பேசினர். "ஐயா, புகழ் பாபாஜியே! தயவு செய்து அடியேனைச் சீடனாக ஏற்று அருள்க" என்று மன்றாடினர். ஆனால் குரு தம் ஆசனப்பாறைபோன்று பேச்சற்று கடுமையாக யிருந்தார். வழக்கமான சோதனை இது; ஆனால் ஔம்! அந்தோ!! யாத்திரிகர் பொறுமையை இழந்துவிட்டார்.

"கடவுள் அனுபவத்தைப் பெற தங்கள் உதவி கிட்டாவிட்டால் மலை அகாதத்தில் குதித்து உயிர்மாய்ப்பேன்", என்று பயமுறுத்தினர்.

"அவ்வாறே செய்க என்ற அமைதியான, உணர்ச்சியற்ற பதில் கிடைத்தது. இது சோதனையின் இரண்டாவது கட்டம். குருவிற்கேற்ற சீடர் சற்றும் தயக்கமின்றி தாவி ஒரு நொடியில் உயிரை மாய்த்துக் கொண்டார்.

யோகத் தியானத்தின் மூலம் கடவுள் அனுபவத்தைப் பெறுவதற்குத் தம் வாழ்க்கையைச் சமர்பித்து உயிரைத் தியாகஞ்செய்ய சாதகன் தயாராக யிருத்தல்வேண்டும் என்பது புராதன யோகக் கட்டுப்பாடு. இதனை குரு நிறைவேற்றுகிறார் என்பதைச் சீடர்கள் பலர் அறியாது இத்துயர நிகழ்ச்சியைக் கண்டு திடுக்கிட்டனர்.

"சவத்தைக் கொண்டு வருக", என்ற கட்டளை நிசப்தத்தைக் கலைத்தது. அவசரமாகச் சிலர் ஆணையை நிறைவேற்ற விரைந்தனர்; சிதறுண்ட உடல் பாபாஜியின் பாதத்தில் வைக்கப்பட்டது.

சிறிதேனும் பரபரப்பில்லாது அமைதியாகப் பேசினர். "இப்போது அவன் ஏற்கத் தகுதியுடையவன்" அவரது புனிதக் கரங்கள் சவத்தை பரிசித்தன. ஔம்! என்ன விந்தை!! சாதகன் உயிர் பெற்று எழுந்து சத்குருதேவரின் கமலப்பாதத்தில் சாஷ்டாங்கமாகப் பணிந்தார். "இனி மரணம் உம்மைத் தீண்டாது", என அன்பொழுகப் பகர்ந்தார். சாதாரண மக்கள் இவ்வமரநிலையை யடைய பல பிறவிகள் சாதனம் செய்யவேண்டும்; ஆனால் இச்சீடரோ கிரியா குருவின் கிருபையால் சில மணிநேரங்களில் அதனைப் பெற்றுவிட்டார். பாபாஜியின் அருளும் சக்தியும் நீடூழி வாழ்க. அவரது கொடுமை தோற்றமும் நன்மைக்கே.

"டேரா தண்டா உத்தாஓ (கூட்டத்தையும் தடியையும் இடம் மாற்றுக)" என்ற வழக்கமான ஆணை இனிய குரலில் கேட்டது. புது சீடருள்பட அனைவரும் சட வடிவு நீங்கி பாறைப்படலத்தினின்று மறைந்தனர்.

ஒரு பாறையினின்று மற்றொரு பாறைக்குச் செல்ல பாபாஜி கையாளும் முறைகளில் இப்புவர்லோக யோகமுறையும் ஒன்று. இவ்வாறு பல நூற்றாண்டுகளாகப் பத்ரிநாத்தின் புனித பிராஞ்சியத்தினின்று கிரியா மார்க்கத்தின் மூலம் மானிடவர்க்கம் மெதுவாக ஆனால் சந்தேகமற்ற முறையில் சம்பூர்ணத்தை நோக்கி முன்னேறுவதைச் சத்குரு பாபாஜி கவனித்து வருகிறார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டு இந்திய சரிதத்தில் ஒரு விசேஷப் பகுதி. நவீன புத்தெழுச்சி முதல் இந்திய சுதந்திர போராட்டத்துடன் ஆரம்பமாயிற்று. உன்னத கிரியா வசனாமிர்தத்தை எங்கும் பரப்ப காலம் கிட்டி விட்டது. இதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டக் கணிசமான சீவன், அவர் லாகிரி என்றழைக்கும் அருமை சீடர்.

**லாகிரி மகாசாயா**

பாபாஜி அவரிடம் முடிவில்லா ஆழ்ந்த அன்புகொண்டிருந்தார். ஒரு பிறப்பில் பல ஆண்டுகள் தம் குருவுடன் முக்கியமாகத் திரோன்கிரி மலைக்குகையில் வசித்தார். பின்பு பிராப்தத்தின் பலனாக உடலை உகுத்து சத்குருவைப் பிரிந்தார்; ஆனால் கிரியா பாபாஜி பூர்ணத் தேகியாயிற்றே மறுமை உலகிற்கும் அவரைப் பின்தொடர முடிந்தது. பல நெருக்கடிகளிலும் தாய் பூனைப்போன்று காததப்பிறகு, சிறைவாசத்திற்கு ஈடான கர்ப்பக்காலத்தை முடித்துக் கொண்டு 30-9-1828ல் வங்காள இராஜ்ஜியத்தின் நாதியா ஜில்லாவிலுள்ள முல்டாகாசிக்கும் கௌர் மோகன் லாகிரிககும் குழந்தையாகப் பிறப்பதைக் கண்டு களிப்புற்றார். அவருக்கு ஷியாம சரன் லாகிரி என்ற நாமஞ் சூட்டினர்.

நான்கு வயதிலேயே லாகிரி மகாசாயா யோகிபோன்று அமர்ந்து நாடியா மணலில் தம்மைப் புதைத்துக்கொண்டபோது இம்மை-மறுமை குரு அவரைக் கவனித்து வந்தார். இவ்வாறு 36 ஆண்டுகளுக்குமேல் கிரியா பாபாஜி அவரைப் பராமரித்து தம் அருமை சீடர் திரும்பிவரும் நன்னாளிற்குப் பொறுமையுடன் காத்திருந்தார். லாகிரி மகாசாயாவின் குகை, ஆசனி—கம்பளம், கமண்டலம்—இவற்றைக்கூட சுத்திசெய்து தயாராக வைத்திருந்தார் அன்பில் ஒப்பற்ற இச்சத்குரு.

முப்பத்து மூன்று ஆண்டுகள் உலக குடும்ப வாழ்க்கை நடத்திய பிறகு அந்த முக்கிய தருணம் வந்தது. அப்போது லாகிரி மகாசாயா தனாபூர் ராணுவ இயந்திரக்கலை இலாகாவில் அரசாங்க குமாஸ்தாவாக இருந்தார். மேல் உத்தியோகஸ்தரைப் பாபாஜி சூக்குமமாகத் தூண்ட தலைமை ஆபீஸிலிருந்து தந்தி சென்றது. இமயத்திலுள்ள இராணிகட் புது இராணுவ

ஸ்தாபனத்திற்கு லாகிரி மாகாசாயா மாற்றப்பட்டார். வேலையாளுடன் 500 மைல் பிரயாசமான பிரயாணத்தைக் குதிரை வண்டியில் முடிக்க முப்பது தினங்களாயின. அதிர்ஷ்டவசமாக அங்கு ஆபீஸ் வேலை கடினமல்ல: பெரிய மகான்களைத் தேடி புனித வனங்களிலே சுற்றித் திரிய நிரம்ப நேரம் கிடைத்தது. ஓர் நாள் மத்தியானம் சஞ்சாரம் செய்யும் போது தூரத்தில் ஒரு குரல் தம் பெயரைக் கூவி யழைப்பதைக் கேட்டு பேராச்சரியமுற்றார். துரிதமாக நடந்து திரோன்கிரி மலையை ஏறி சமமான திறந்தவெளியை யடைந்தார். மற்றொரு பிரமிப்பு காத்திருந்தது. தத்ரூபமாகத் தம்மை யொத்த அன்னியர் ( ! ) அன்புடன் வரவேற்றார்.

சுத்தக் குகை யொன்றில் களைப்பாறினார்; ஆனால் தெய்வீக அழைப்பாளரின் அடையாளம் பிடிபடவில்லை. பல்லாண்டுகள் பிரிவு, புது அனுபவங்களின் அடுக்குகள் இவை பழைய ஞாபகங்களை இருக்குமிடம் தெரியாது மறைத்தன. மிகப்பிரியமான ஆசனக்கம்பளம், குகை —இவற்றைக் குறிப்பிட்டும் பலன் இல்லை. இறுதியில் மெதுவாக நெற்றியைத் தட்டினார்: அவ்வளவு தான் ! பூர்வீக பிறவியின் இன்ப நினைவுகள் பீறிட்டுக் கொண்டு எழுந்தன. பாபாஜியை யடையாளங் கண்டு களித்து அவர் தம்மை பல ஆண்டுகள் காத்து அருள்புரிந்த விந்தையைக் கேட்டு பரவசமுற்றார்.

சத்குருவின் கட்டளைப்படி கப்பறையிலிருந்த எண்ணெயைப் பருகி கோகாஸ் நதிகரைக்கு இரவு ஓய்வெடுக்கச்சென்றார் பாறையில் படுத்தார்; தீவிர இமயக்குளிர், நதியின் அலைகள், காட்டு மிருகங்களின் ஊளை— இவைக் கிஞ்சித்தேனும் அவரைப் பாதிக்கவில்லை. சத்குருவின் எண்ணெய் யுக்தியை என்னென்பது ! நடுநிசியில் தோழன் ஒருவன் கம்பளித்துணிகள் தந்து உன்னத அரண்மனைக்கு அழைத்துச் சென்றான்; தீரா மறைந்த லௌகிக ஆசையை அகற்ற இவ்வரண்மனை சிருஷ்டிக்கப்பட்டது. அங்கு சீடர்கள் புடைசூழ யாகத்தீ கரத்தில் எரிய மகாயோகி பாபாஜி கிரியா தீக்ஷை யளித்தார்.

பொழுது விடிந்தது ; பசி வயிற்றைக் கிள்ளியது. கண்களை மூடும்படி கட்டளை பிறந்தது. மீண்டும் திறந்தபோது உன்னத அரண்மனை மாயமாக மறைந்துவிட்டது ; பழைய குகைகளிலேயே யாவரும் வீற்றிருந்தனர். அடுத்தப்படியாகப் பாபாஜி ஒரு மாயக் கிண்ணத்தில் கையிடச்செய்தார் தேவையான உணவு கிடைத்தது. தாகமெடுத்தது அதே கிண்ணம் தண்ணீர் நிரம்பியிருந்தது !

அன்று கம்பளத்தில் அமர்ந்திருந்தபோது சத்குரு அன்புகூர்ந்து தலையைத் தொட்டு ஆசீர்வதித்தார்; ஒரு நொடியில் பேரின்ப நிர்விகற்ப

சமாதி கிட்டி ஏழுதினங்கள் நீடித்திருந்தது. கடைசி நாள் பாபாஜியின் பாதத்தில் விழுந்து என்றென்றும் அவருடன் இருக்கக் கோரினர். இல்லம் மீண்டு அகத்துறவுடன் கூடிய சீரிய கிரஹஸ்த யோகியாக வாழும்படி அறிவுறுத்தி இசையச்செய்து, கிரியா யோக குரு பொறுப்பை விரிவாகப் போதித்தார்.

பாபாஜி: "கிரியா தீக்ஷையைத் தகுதியுடைய சீடர்களுக்கே அளிக்க வேண்டும். அதாவது தியான விஞ்ஞானக்கலையின் மூலம் வாழ்க்கையின் இறுதி மர்மங்களைத் தீர்க்க விரும்புவோன் கடவுளுக்காகச் சகலவற்றையும் தியாகஞ்செய்ய தயாராக இருத்தல் வேண்டும்."

"தேவகுருவே! மறைந்த கிரியா கலையை மீட்டு மானிடவர்க்கத்திற்குச் சேவைபுரிந்த நீங்கள் சீடராவதற்குறிய பலமான கட்டுப்பாடுகளைத் தளர்த்தி ஆதாயத்தைப் பெருக்கலாகாதா?" என்று லாகிரி மகாசாயா மன்றாடி, "ஆரம்பத்தில் முற்றான அகத்துறவில்லா சாதர்களுக்கும் கிரியா தீக்ஷை அளிக்க நீங்கள் அனுமதிக்கவேண்டும் முத்துயர்களில் வருந்தி வாடும் உலக மக்களுக்கு விசேஷ தயை வேண்டும். கிரியா தீக்ஷையையளிக்காவிட்டால் விடுதலையடைய முயற்சிகூட செய்யமாட்டார்கள்" என்று பரிந்துபேசினர்,

"அப்படியே யாகுக. பணிவுடன் உதவியை நாடும் எவருக்கும் நீ கிரியாவைப் போதிக்காலம், தெய்வ விருப்பம் உன் மூலம் வெளிப்பட்டது," என்று கிரியா பாபாஜி அன்புடன் அனுமதி தந்தார். லாகிரி மகாசாயாவின் கருணை நீடுழி வாழ்க !

மறுநாள், காலை நியோகத்தை நிறைவேற்ற அதிர்ஷ்டமுள்ள சீடர் அரை மனதுடன் விடைபெற்றுக்கொண்டார். அழைக்கும்போதெல்லாம் வருவதாக அன்புமிகுந்த குரு ஆறுதல் கூறினர். பத்து தினங்கள் கழித்து ஆபீஸில் இவரை வரவேற்றனர்; 'தவறுதலாக மாற்றப்பட்டது, மீண்டும் தனப்பூருக்கு அனுப்புக' என்று தலைமை ஆபீஸிலிருந்து கடிதம் வந்தது. அப்போது லாகிரி மகாசாயாவைத் தவிர வேறு எவரும் இச்சம்பவங்களின் ரகசியங்களை அறியார்.

தனப்பூருக்குச் செல்லும் வழியில் சிலதினங்கள் மோரதாபாத் வங்காளிகள் சிலருடன் தங்க நேர்ந்தது. விருந்து உபசரிப்பவர் இந்தியாவில் உண்மை மகான்கள் இல்லையே யென வருந்தினர்; மிதமிஞ்சின ஆர்வத்துடன் லாகிரி மகாசாயா சமீப இமய அனுபவத்தை விவரித்தார். பகற்கனவென பரிகசித்தனர்; நிரூபிக்கத் தம் குருவைக் காட்டுவதாக வாக்களிக்கப்பட்டது.

தனி இருட்டறையில் இரு கம்பளங்கள் வைத்து பாபாஜிக்குப் பிரார்த்தனை செய்தார்; சிறு காரியத்திற்கு அழைத்தக் குற்றத்திற்காகக் கடுமையான பார்வையுடன் பாபாஜி தோன்றினர். லாகிரி மகாசாயா மன்னிப்புகோரி மக்களில்

நம்பிக்கையூட்ட அவரைப் போகாது இருக்கும்படி வேண்டிகொண்டார். தியான குரு சம்மதித்து, "இனி தேவையுள்ளபோதுதான் வருவேன், அழைத்தபோதெல்லாம் வர இயலாதென்" நிபந்தனை விதிக்கவேண்டியதாயிற்று.

கூட்டத்தில் ஒருவர் பாபாஜி உருவத்தை வெறுமயக்கத் தோற்றமென இகழ்ந்தார்; இச்சந்தேகத்தைத் தீர்க்க எந்நேரம் பிடிக்கும்? தம் புனித உடலை தொடவும் ஹல்வா உண்டும் அவநம்பிக்கையை யகற்றி மறைந்தார். இச் சம்பவம் அவ்வங்காளிகளின் மனதில் பெரும் புரட்சி ஏற்படுத்தியதென்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

விளம்பரம் இல்லாது காசியில் லாகிரி மகாசாயா பல வருடங்கள் தங்கி தம் கடமையை நிறைவேற்றினர். சிறிது சிறுதாக சீடர், அன்பர்கள் கூட்டம் பெருகிற்று. இவ்வாறு வந்த பலரில் சிலர்: மேயித்ரா, அபோயா, அப்துல் காபூர் கான், பிரின்தா பக்த், சுவாமி பாஷ்கரானந்தா சரஸ்வதி, பாலானந்த பிரம்மாச்சாரி, காசி மகாராஜா, அவரது குமாரர் மகாராஜா ஜோடிஸ்ந்திர மோகன், அபிநாச பாபு, பகவதிசரன் கோஷ் தம்பதிகள், காசி மோனி, சுவாமி கேஸபானந்தர், பஞ்சனன் பட்டாச்சாரியா, சுவாமி பிரணவானந்தர், ராமா, ராமு, சுவாமி யுக்தேஸ்வர், காசிக்கு வரமுடியாத ஆர்வமிக்க சீடர் ஒருவருக்குக் கனவுதெரிசனத்திலேயே தீக்ஷை அளித்தார், இவ்வாறு நவீன பாரதப் புத்தெழுச்சியின்போது இமய பாபாஜியினின்று இன்பகிரியா கங்கை துக்கமும் துயரமும் நிரம்பிய மனித இல்லங்களில் பாய்ந்து பாபவிமோசனமளித்தது.

இவற்றிற்கிடையில் லாகிரி மகாசாயா சத்குருவை அடிக்கடி சந்தித்துக் கொண்டிருந்தார். இப்பெரும் பாக்கியம் இதுவரை இருவருக்குத்தான் கிடைத்திருக்கிறது. பிரயாகை கும்பமேலாவின்போது போலி ஆண்டியை மானஸீகமாகக் கண்டித்தவண்ணம் சாதுக்களுக்கிடையில் சுற்றித்திரிந்தார். சிறிது நேரத்திற்கெல்லாம் பாபாஜி ஒரு யதியின் பாதங்களை அலம்புவதைக் கண்டு வியப்புற்ருர். அவரது பாத்திரங்களைக் கழுவப் போவதாகவும் கூறினர். சத்தியவான் கிரியா பாபாஜி பணிவு என்ற சீரிய லக்ஷியத்தை எவ்வளவு அழகாகப் போதிக்கிருர்.

ஓர் இரவு சத்குரு பாபாஜி, லாகிரி மகாசாயா, சுவாமி கேபாலனந்தர், இன்னும் மற்றச் சீடர்கள் வேத யாகத்தீயைச் சுற்றி அமர்ந்திருந்தனர். திடீரென அருகாமையிலிருந்த சீடரின் நிருவாணத்தோளை கொள்ளிக்கட்டையால் மெதுவாக அடித்தார்.

லாகிரி மகாசாயா: "கொடூரம்!"

பாபாஜி: "இவ்வாறு செய்யாவிட்டால் பிராரப்தம் இவனை சுட்டெரித்திருக்கும்."

சர்வசக்தி வாய்ந்த அன்பு கரங்களைக் காயமுற்ற தோளில் வைத்தார்; சூட்டுப்புண் மறைந்தது. சத்குருவின் கருணைக்கு ஈடு இவ்வுலகில் வேறு யாதுளது?

மாபெருஞ்சித்தர் திரேலிங்க சுவாமிகளின் சீடர் பிரம்மச்சாரிணி சங்கரி மாயி ஜூ கல்கத்தா பாரக்பூர் இல்லத்தில் லாகிரி மகாசாயாவைக் காண வந்திருந்தார், சப்தமின்றி அறையில் நுழைந்து கிரியா பாபாஜி அவர்களுடன் சம்பாஷித்தார்.

நடுநிசி; ஏகாங்கி இராம் கோபால் மசும்தாரை மட்டும் உடனே காசி தசமேத் காட்டிற்குப் போகும்படி லாகிரி மகாசாயா கட்டளையிட்டார். சிறிது நேரம் அவ்வேகாந்த இடத்தில் வீற்றிருந்த இராம் கோபால் பிரமிக்கும் வண்ணம் அருகிலிருந்த பெரிய கற்பலகைத் திறக்க, மறைவுகுகையினின்று பாபாஜியின் பரவச சகோதரி, **மாதாஜி,** நொய்மை சித்தியுடன் மிதந்துவந்தார். சில விநாடிகள் கழித்து லாகிரி மகாசாயாவும் கிரியா பரமகுருவும் வடிவெடுத்துத் தோன்றினர். மூவரும் சத்குரு பாதத்தில் பணிந்தனர். பாபாஜி: "உருவை நீக்கி எல்லையற்ற சத்தியத்தில் கலப்பதாக உத்தேசம்".

மாதாஜி: (மன்றாடும் முறையில்) "குருவே! நினது திட்டத்தை சற்று அறிவேன், உடலை ஏன் உருக்கவேண்டும்?" பாபாஜி: "ஏனெனில் உருவம் அருவம் இரண்டும் ஒன்றுதானே."

மாதாஜி: "குருதேவா! ஒன்றெனில் உமது உருவத்தைக் கலைக்காதிருங்கள்."

ஔம்! தயாள குரு இசைந்தார்; அவரது திருஉருவம் சிலருக்குத் தோன்றும், கிரியா இயக்கத்தின் முதல்தர நெருக்கடி தெய்வ சகோதரியின் வேண்டுகோளால் தவிர்க்கப்பட்டது. மாதாஜிக்கு ஜே!

சம்பாஷணைக்குப் பிறகு சத்குரு மருண்ட இராம் கோபாலைச் சாந்தப்படுத்தினர். மூன்று கிரியா குருக்களும் காற்றில் மிதந்து மறைய குருதேஸ்வரர் மேருல்லா இல்லத்திற்கு திரும்பிய இராம் கோபால் மசும்தார், (இரவு பேட்டியை நன்குணர்ந்த) தம் குரு அதே சமயத்தில் வீட்டிலுள்ள சீடர்களுக்கு ஸ்தூல தேகத்துடன் அமரத்துவத்தைப்பற்றி அரியதொரு பிரசங்கம் ஆற்றினர் என்பதைக் கேள்வியுற்று வியப்படைந்தார். ஒரே சமயத்தில் இரு இடங்களில் இருக்கக்கூடிய உன்னத நிலையை லாகிரி மகாசாயா அடைந்துவிட்டதை அனுபவபூர்வமாக அறிவுறுத்தப்பட்டது.

மகாசாயாவின் முன்னணி சீடர்களில் ஒருவராகிய சுவாமி பிரணவானந்தர் தம் குருவின் கருணையால் நிர்விகற்ப சமாதி யடைந்த பிறகு விஞ்ஞான சகஜ

சமாதி(சமதர்சனம்)யுடன் உடல் இரட்டிக்கும் யோகசக்தியும் பெற்றார். இறுதியில் குறிப்பிட்ட நேரத்தில் இரண்டாவது கிரியாவின்மூலம் ஸ்தூல தேகத்தைக் கழற்றி எறிந்து, முன்கூட்டியே தெரிவித்ததுபோல், சிறிது காலம் பேரின்பத்தில் மிதந்து மீண்டும் மானிட பிறவி எடுத்து சில ஆண்டுகளுக்குப் பின்பு கிரியா பாபாஜியின் அமரக் குழாமில் புகுந்தார்.

லாகிரி மகாசாயவின் சீரிய வாழ்க்கை முடிவுறும் காலம் நெருங்கிவிட்டது. அவரது முக்கிய சீடர்களில் ஒருவராகிய ஸ்ரீ யுக்தேஸ்வரை நியோகத்தைத் தொடர்ந்து நடத்த கிரியா மூலகுரு தேர்ந்தெடுத்தார். பேரின்ப கிரியா வசனாமிர்தத்தை மேற்கத்திய நாடுகளில் பரப்ப ஆரம்ப ஏற்பாடும் செய்யப்பட்டது.

**ஸ்ரீ சுவாமி யுக்தேஸ்வர்**

குரு தூண்டுதலின்பேரில் யுக்தேஸ்வர் 1894, ஜனவரி மாதம் பிரயாகை கும்பமேலாவிற்குச் சென்றிருந்தார். மேற்கத்திய விஞ்ஞானிகளுக்கு நேரிடையாகச் சாதாரண சாதுக்கள் நடத்தும் உபயோகமற்ற வாழ்க்கையும் சப்தமும் மனதிற்கு அருவருப்பாகயிருந்தது. அவ்வாயம் கவர்ச்சியான யோகக் கண்களுடைய அன்னிய மகான் ஒருவர் அவரைக் கூவியழைத்தார். மிகத் தாழ்ந்த கங்கைநதி தீரத்தில் சுற்றி அமர்ந்திருந்த கர்பீரமான சீடர்களைப் பொருட்படுத்தாது யுக்தேஸ்வரைத் தழுவிக்கொண்டார். எவ்வளவு அன்பு! இம்மகான் கிரியா பாபாஜியே; வந்தவர் பரபரப்பில்லாது நடந்துக்கொள்ளவே தம்மைக் காட்டிக்கொள்ளாதிருந்தது.

ஸ்ரீ யுக்தேஸ்வர் ஓர் நாள் சன்யாசியாவரெனக் குறிப்பிட்டார். பல ஆண்டுகள் உருண்டோடின; இவ்ஹேஸியம் பலித்தது, கதையில் அன்னப் பறவை பாலையுண்டு நீரைப் புறக்கணிக்குமெனச் சொல்லப்படுகிறது; அவ்வாறே நன்மையைக் கவனித்து தீமையை யகற்றவேண்டும்; பலருடைய குறைகளுக்காக மேலா சாதுக்கள் யாவரையும் குறைகூறுவது சரியல்ல என்று புத்திபுகட்டினர்.

அடுத்தது தொன்றுதொட்டச் சாதனம்—கர்மம் பிரச்சனையைப் பற்றி பேச்சு எழுந்தது; இதனை கிழக்கு—மேற்கு போராட்டமெனவும் கூறலாம். உலக நியோகத்தைத் தம் லக்ஷியமாகக்கொண்ட பாபாஜி, கிரியா யோகத்தின் மூலம் கிழக்கு—மேற்கு ஒற்றுமை இயக்கத்திற்குப் பாடுபடவேண்டுமென ஆர்வமிகுதியுடன் கூறினர். மேற்கத்திய நாடுகளில் கிரியா வசனாமிர்தத்தைப் பிரசாரம் செய்ய முதல் நவீன நியோகியாகப்போகும் சீடனைப் பழக்க அவரிடம் அனுப்புவதாகக்கூறி, ஹிந்து—கிறிஸ்துவ மதங்களின் அடிப்படை ஒற்றுமையை விளக்கும் சிறிய புத்தகமொன்று இயற்றும்படி கேட்டுக் கொண்டார். லாகிரி மகாசாயாவிற்குச் செய்தியுடன் முக்கிய சந்திப்பு

முடிவடைந்தது. இது கிரியா இயக்கத்தில் ஒரு நன்னுள்; அன்று கிரியா பாபாஜியின் பேரின்ப வசனுமிர்தத்தை உலகின் பல்வேறு பகுதிகளுக்குப் பரப்ப உத்தம திட்டம் வகுக்கப்பட்டது. கிரியா சத்குருவும் அவரது நியோகமும் செழித்து ஓங்குக! மறுதினமே ஸ்ரீ யுக்தேஸ்வர் காசிக்கு விரைந்தோடி தம் குருவிடம் இவ்வபூர்வ சம்பவத்தை விவரித்து, கீழ்கண்ட குறிப்பிட்டச் செய்தியைக் கூறினர். 'லாகிரியிடம் சொல்லுக. இவ்வாழ்க்கையின் சேமிப்பு சக்தி குறைந்துவிட்டது; கிட்டத்தட்ட முடிந்துவிட்டது.' புதிர் போன்ற இவ்வார்த்தைகளைக் கேட்டதும் மாபெரும் நிஷ்காமிய கர்மயோகி உலக இணைப்புகள் யாவற்றையும் துண்டித்து வெளுத்தச் சிலைபோன்ருகி விட்டார். நீண்ட, கவலைக்கிடமான, மூன்றுமணி நேரத்திற்கும் மரண நிசப்தம் எங்கும் நிலவியது; பின்பே லாகிரி மகாசாயா பழைய முகமலர்ச்சியைப் பெற்ருர். மகாசமாதி அடையும் நேரம் இன்னும் கிட்டவில்லை; 'பிராணச் சக்தி **கிட்டத்தட்ட** முடிந்துவிட்டது' என்றுதானே கூறினர்.

அதற்குள் கும்பமேலா சாது தீர்க்கதரிசி பாபாஜி என்பதைக் குரு சொல்லகேட்டு ஸ்ரீ யுக்தேஸ்வர் பேராச்சரியமுற்று சேராம்பூர் இல்லத்திற்கு விரைந்து சென்ருர். " 'தெய்வ விஞ்ஞானம்' (தி ஹோலி சையின்ஸ்) என்றப் புனிதப் புத்தகத்தை எழுதுவதற்கு முதல் இனிய சமஸ்கிருத துதியுடன் துவங்கி வேதங்கள், பைபிள் இவற்றின் சாரத்தை ஒப்பிட்டார். இவ்வினிய கர்மத்தை முடித்தபிறகு, அன்று காலை கங்கா ஸ்நானத்தை முடித்துக் கொண்டு வீடு திரும்பும்போது நிசப்தம் எங்கும் நிலவியது; ஈரத்துணி தேயும் சப்தம்கூடக் கேட்டது. யாதோ ஒன்று அவரைத் தூண்டியது; திரும்பி பார்த்தார்; கண்கொள்ளாக் காட்சி: ஆற்றங் கரையோரம் பெரிய ஆலமரத்தடியில் அமர பாபாஜியும் அவரது கூட்டாளிகளும் அமர்ந்திருந்தனர். பரபரப்புடன் பாதத்தில் விழும்போது தீர்க்கதரிசி அவரை வரவேற்ருர். சேராம்பூர் ஆசிரமத்திற்கு வரும்படி கேட்டுக்கொண்டார்; நல்ல முறையில் வர இயலாதென கூறப்பட்டது. சீரிய விருந்தாளிகளுக்கு இனிப்பு பட்சணங்கள் எடுத்துவர ஸ்ரீ யுக்தேஸ்வர் வீட்டிற்கு அவசரமாகச் சென்ருர் ஆனல் மீண்டதும் எங்கு தேடியும் அக்கூட்டம் காணப்படவில்லை. மாயமாக மறைந்துவிட்டனரோ ?

சில மாதங்கள் கழித்து காசிக்கு லாகிரி மாகாசாயாவைக் காணச் சென்ற போது அவர் அறைக்கு அருகில் சூரிய வெளிச்சத்தில் மறைந்திருந்த கிரியா மூலகுரு பாபாஜியைக் கண்டறிய முடியவில்லை. குரு நெற்றியைத் தட்டினர் நோக்கு சற்று சுத்தியடைந்தது; சிரஞ்சீவி பரம்—குருவைக் கண்டார். பழங்குறை ஞாபகத்திற்கு வர நமஸ்கரிக்கவில்லை; பெருமை அடையமுடியாத காரணங் கூறவே, அதனை ஏற்று, மண்டியிட்டு பாதங்களில் தலையை வைக்க, அன்பு நிறைந்த குரு தோளில் தட்டிக்கொடுத்தார்.

இச்சம்பவம் நிகழ்ந்து சிலகாலத்திற்குள் 1895-ல் குறிப்பிட்ட நேரத்தில் லாகிரி மகாசாயா உடலை உகுத்தார். கிரியா நியோகத்தின் பெரும் பாரத்தைச் சுவாமி யுக்தேஸ்வர் ஏற்கவேண்டியதாயிற்று. பல ஆண்டுகள் பொறுமையாகக் காத்திருந்து, தவிர்க்கமுடியாத காந்தசக்தியால் தம்மிடம் இழுக்கப்பட்டப் பரமஹம்ஸ யோகானந்த கிரியைக் களிப்புடன் வரவேற்றார். இவரே கிரியா பாபாஜி குறிப்பிட்டச் சீடர். உக்கிரமான யுக்தேஸ்வர் அற்புத முறையில் அவரைக் கலாசாலை பட்டம் பெறும்படி செய்து மேற்கத்திய நாடுகளில் பிரசாரஞ்செய்ய தகுதியுடையவராக்கினார். பல வருடக்கள் குருகுல வாசமும், சாதனமும் செய்து யோகானந்நர் குருவின் கிருபையால் விஞ்ஞான, சகஜ சமாதியை யடைந்து, காரண, சூக்ஷும, ஸ்தூல தேக அபிவிருத்திக்கு ஏதுவான தமது யோகதா கல்வி முறையைப் போதிக்க 1918–ல் பீகார் ராஞ்சியில் பெரியதொரு யோகப்பாடசாலை ஸ்தாபித்தார். இடையில் சுவாமி யுக்தேஸ்வர் பல சாது சபைகளை ஏற்படுத்தி அவைகளின்மூலம் உன்னதச் சீடரின் உதவியைக்கொண்டு கிரியா தூண்டாமணி விளக்குகளைப் பல விடங்களில் ஏற்றினார்.

1920–ம் ஆண்டில் யோகானந்தர் வாழ்க்கையில் ஒரு முக்கியமான கட்டம் முடிவடைந்தது. ஆத்மீக அனுபவத்தின்போது பல அமெரிக்கச சீடர்களின் உருவங்களைக் கண்டார். அமெரிக்கா செல்லுங்காலம் கிட்டி விட்ட தென்பதைக் காட்டுகிறது. பாஸ்டன், ஐக்கிய அமெரிக்க நாடுகளில் ஒரு முக்கியமான ஊர்; அங்கு நடக்கப்போகும் மதச் சுதந்திரவாதி உலக மகா நாட்டிற்குப் பிரதிநிதியாகச் செல்ல யோகானந்தருக்கு அழைப்பு வந்தது. குருவின் அனுமதியும் எதிர்பாராத விதத்தில் கிடைத்தப் பண உதவியும் கொண்டு அயல்நாடு செல்ல முஸ்திப்புகள் செய்தார். புறப்படும் தருவாயில் மேற்கத்திய லௌகிகத்தில் மயங்காதிருக்கத் தெய்வ அனுமதி கோரி தீவிர திடச்சித்தியுடன் மணிக்கணக்காகப் பிரார்த்தனை செய்தார் மண்டை உண்மையாகவே வெடித்துவிடும்போல் இருந்த தருவாயில் யாரோ தாளிட்டிருந்த கதவைத்தட்டும் சப்தம் கேட்டது; திறந்தால். கிரியா மூலகுரு. உள்ளே நுழைந்து சூக்ஷும சித்தியுடன் பேசலுற்றார்: "உம்முடைய பிரார்த்தனை தெய்வ அப்பனின் காதிற்கு எட்டியது. உம்மிடம் இவ்வாறு கூறும்படி கட்டளை யிட்டுள்ளார்: 'குருவின் ஆணைப்படி அமெரிக்கா செல்லுக. அஞ்சேல்! காப்பாற்றப்படுவாய்." சாஷ்டாங்கமாக நமஸ்கரித்த மகானைத் தூக்கி அவரது (யோகானந்தரின்) வாழ்க்கை, கிரியா நியோகத்தின் வருங்காலத்தைப் பற்றி பேசினார். பாபாஜியின் புத்திமதிக்கு மாறாக உணர்ச்சி மிகுதியில் யோகானந்தர் மீண்டும் மீண்டும் அவரைத் தொடர முயற்சித்தார்; பயனில்லை, ஏனெனில் ஏதோவொரு அசரீரி சக்தி அவரது பாதங்களைத் தரையில் ஒட்டச் செய்தது. வேறொரு சமயம் அழைத்துச் செல்வதாக வாக்குறுதி தந்து பாபாஜி அன்புள்ள ஆசியுடன் அவ்விடத்தைவிட்டு அகன்றார்,

நவீனகாலத்தில் முதல் கிரியா பிரசாரகராகப் பரமஹம்ஸ யோகானந்த கிரி ஆகஸ்ட் மாதத்தில் சந்தோஷத்துடன் கடல்கடந்து சென்றார். பல நாட்டில் மத விஞ்ஞானத்தைப்பற்றி பேசிய பின்னர் எளியமுறையில் பல ஆண்டுகள் அரும்பாடுபட்டு நவீன கிரியா ஸ்தாபனத்தை எழுப்பினார். இதன் விளைவாக இப்போது உலகில் 89 கிளைகள் இருக்கின்றன—ஐக்கிய அமெரிக்க நாடுகளில் 26; கனடாவில் 3; கியூபா, ஹவாய், தென் அமெரிக்காவில் ஒவ்வொன்று; தென் ஆப்பிரிக்காவில் 7; மெக்ஸிகோவில் 6; பிலிப்பைன் ஸில் 2; இந்தியாவில் 22, ஐரோப்பாவில் 16, இங்கிலாந்து தீவுகளில் 4. வாஷிங்டன் மலை எஸ்டேட், 3880, சான் ரபேள் அவின்யூ, லாஸ் ஏஞ்சிலிஸ், கலிபோர்னியா, அமெரிக்காவிலுள்ள உலகத் தலைமை ஸ்தாபனம் 'ஆத்ம—அனுபவ' பத்திரிகையும், கல்கத்தா அருகாமையிலுள்ள தக்ஷிணேஸ்வரம் யோகதா சத்-சங்கம் (கிழக்கு மூலஸ்தாபனம்) மாணுக்கர்களுக்கு மாதமிருமுறை யோகதா பாடங்களும் அனுப்புகின்றன. மூன்றுலக்ஷ சீடர்களுக்கு மேல் கிரியா தீக்ஷை இதுவரை பெற்றுள்ளனர்.

1935-ல் சுவாமி யுக்தேஸ்வர் தியானத்தின்போது அழைக்க, அதன்படி யோகானந்தர் உலக யாத்திரையை முடித்துக்கொண்டு இந்தியா வந்து சேர்ந்தார். தாய்நாட்டிலும் பல விடங்களுக்குச் சென்று யோகதா வசனுமிர்தத்தைப் பிரசாரஞ்செய்து, அத்துடன் அவரது சுயசரிதைக்கு வேண்டிய விசேடங்கள் சேமிக்கப்பட்டன, மகாத்மா காந்தி சீடரானார். பாபாஜியை மீண்டும் காணவேண்டுமென்ற ஆவல் இருந்தது; ஆனல் தீர்க்கதரிசி இமயத்தில் சஞ்சாரம் செய்துகொண்டிருந்த சுவாமி கேஸபானந்தர் மூலம் மற்றொரு சமயம் சந்திப்பதாகச் செய்தி அனுப்பினார்,

1936, மார்ச்சு 9-ம் தேதி சுவாமி யுக்தேஸ்வர் 81-ம் வயதில் காலமானார். பொறுப்பு யாவும் பரமஹம்ஸ யோகானந்த கிரியைச் சார, அவர் பூலோக கிரியா இயக்கத்தைப் புனர் நிர்மானஞ் செய்தார்; இக்காரியத்தை ஹிரண்யலோகத்தில் செய்தது அவரது குரு. 1936 இறுதியில் அமெரிக்காவிற்குத் திரும்பி பன்னிரண்டு வருடங்களுக்கு மேல் சளைக்கா ஆர்வத்துடன் யோகதா இயக்கத்திற்குப் பாடுபட்டார். 1951 கடைசியில் இரண்டாம்முறை இந்தியாவிற்கு வரக்கூடுமென்ற பேச்சிருந்தது. ஆனல் 1952, மார்ச்சு 7-ம் தேதி யோகதா இயக்கத்திற்குப் பெரும்நஷ்டம் ஏற்பட்டது; சிலமாதங்களாகவே ஏகாந்த சாதனவாழ்க்கை நடத்திய யோகானந்தர் அமெரிக்காவிலுள்ள இந்திய தூதருக்கு அளிக்கப்பட்ட உபசரிப்பில் கலந்துகொள்ள சென்றார். விரும்பியபடி கடவுள், இந்தியா இவற்றைப்பற்றி பேசிக்கொண்டிருந்தபோது திடீரென விழுந்து மகாசமாதியடைந்தார். இருபது தினங்களுக்குமேல் அவரது உடல் கெடாதிருந்தது; அமெரிக்கா இன்னும் மற்ற நாடுகளில்

இச்சம்பவம் பெரிய அமளியை யேற்படுத்தியது. ஸ்ரீ அரவிந்தர், அர்ச்சய சிரேஷ்டர் பெர்னடெட் போன்ற மகான்களின் திருச்கூட்டத்தைச் சேர்ந்தவர்.

இப்பெரும் நஷ்டத்தைச் சரிகட்டவும் நேரடியாகக் காரியங்கள் செய்யவும் பாபாஜி புறக்கணிக்கப்பட்ட ஆனால் திறனில் குறைவில்லா, அனுபவம் நிறைந்த பத்திரிகையாளரை மகாசாயாவாக்கத் தீர்மானித்தார். முடியா தென்ற சொல் அவரது அகராதியில் இல்லைபோலும்.

**வீ. டி. நீ**லகண்டன் எழுதிய 'நம்பர் 9, போக் ரோடு' சத்குரு ரமா தேவியைப்பற்றிய புத்தகம். இதற்கு மணியார்டர் அனுப்ப கையொப்பமிடும் சமயம் ஓர் எண்ணம் மனதில் உதித்தது: "மற்றவர் களுடன் உமது ஆத்மச் செல்வங்களைப் பங்கிட்டுக்கொள்ளும் நாள் வந்து விட்டதல்லவா?" அதனை ஏற்றுக்கொண்டு 'அன்புடையீரு'க்குப் பதிலாக 'அன்புள்ள ஆத்மன்' என்றும் 'இப்படிக்கு'ப் பதில் 'எப்போதும் உமது ஆத்மன்' என்றும் எழுதப்பட்டது.

**வீ. டி. நீலகண்ட மகாசாயா**

இக்குறிப்பின் முடிவுரை மனதைக் கவர்ந்தது; வீ. டி. என் (ஸ்ரீ வீ. டி. நீலகண்டன்) மதராஸ், மைலாப்பூர், செந்தோம் நம்பர் 1-1, அருளானந்த முதலி தெரு வீட்டிற்கு நேரில் வந்தார். ஒரு நூதன அசரீரி சக்தி எங்கள் இருவரையும் ஒன்றுகூட்டியது. பலச் சந்திப்புக்கள்; மணிக்கணக்காக ஆத்ம—விசேட விளக்கமும் செய்யப்பட்டது. மரியாதையுடன்கூடிய அன்போடு நடக்கலானார்.

ஓர் தினம் ஆத்மார்த்தப் புத்தகங்கள் வேண்டுமெனக் கேட்க, பரமஹம்ஸ் யோகானந்தரின் 'யோகியின் சுயசரிதை' கொடுக்கப்பட்டது. இது அவர் மனதில் சிறு புரட்சியை யேற்படுத்த, கிரியா பாபாஜியின் அன்பராகி சதா அவர் நாமத்தை உச்சரிக்கலானார்.

முன்னனி ரணவைத்தியர் ஒருவர் வீ. டி. என்னின் ரணகாயத்தை இலவசமாகத் தம் ஆஸ்பத்திரியில் கவனித்து வந்தார்; ஆனால் அவருடைய வறுமையைப் பொருட்படுத்தாது தேகாரோக்கியத்தைக் கவனிக்கவில்லையென நித்தியம் கண்டித்து வந்தார். ஓர் தினம் வைத்தியரின் 'லலிதா சஹஸ்ரநாமாவளி' தாங்கமுடியாது போயிற்று; இனி காயத்தைக் கட்டுவதற்கு வருவதில்லையென அருவருப்புடன் வீ. டி. என் எழுந்து சென்றார்.

ஆத்மீகசம்பாஷணை, படிப்பு, கூட்டுதியானத்திற்காக எழும்பூரிலிருந்து செந்தோமிற்கு (சுமார் 7 மைல்கள்) ஆழமான ரணகாயத்தைப் பொருட் படுத்தாது கிட்டத்தட்டதினமும் நடந்தே வந்தார். எவ்வளவு ஆர்வம்! ஒரு நாள் களைப்புற்று மரிஞ கடற்கரை நீண்ட செமண்ட் ஆசனத்தில் அமர்ந்து பிரார்த்தனை செய்தார்: "பாபாஜி! இந்த யாத்திரையைப் பூர்த்திசெய்ய போதியளவு பலம் தர மாட்டீர்களா?" வேண்டுகோள் நிறைவேறியது. எப் படியோ உடலில் தெம்பு ஏற்பட்டது; குறிப்பிட்ட இடத்தை யடைந்தார். பாபாஜிக்கு ஜே!

வீ. டீ. என்னின் வறுமை உச்சநிலையை யடைந்துவிட்டது. திடீரென ஈர்சுடன் ரணவைத்தியர் தோன்றி காயத்திற்குச் சிகிச்சை செய்ய விரிவான ஏற்பாடுகள் செய்தார்! பிரபல எழுத்தாளர் திகைத்துபோனர். எரியும் நெருப்பில் நெய்வார்ப்பது போல் வைத்தியர் இலவச உணவிற்கும் ஏற்பாடு செய்தார்!! பாபாஜியின் கருணைப்பிரவாகத்தை என்னென்று புகழ்வது!!!

ஒவ்வொரு நாளும் அவரது உற்சாகம் அதிகரித்துவர யோகதா சத் சங்கத்தில் அங்கத்தவராகும் தினத்தை ஆவலாக எதிர்பார்த்திருந்தார். அப்போது குடும்பததைச் சேர்ந்த ஒரு நபரின் லௌகிகமனப்பான்மை இடைஞ்சலாயிருப்பதை அகற்ற இயலாது குறித்து அடிக்கடி வருந்துவார். அவருடைய சாதனத்திற்கு அது தடையாக யிருந்தது. 17—7—52ல் ஆசிரியன் கீழ்கண்டவாறு நிவர்த்தி கூறினன்: "யாத்திரிகர் ஒருவர் பத்திரிநாத்தை நோக்கி தடுமாறி செல்கிறர்; குறிப்பிட்ட இடத்தைச் சேர்வரோ எனச் சந்தேகிக்கவேண்டியிருந்தது. இத்தருணத்தில் தயாள யாத்திரிகர் இன்னும் இருவரை முதுகில் தூக்கிச் செல்லலாமா என யோசித்தாராம்! அதுபோல லக்ஷியத்தையடையும் முன்னர் பிறரைச் சீர்திருத்தவும் அவர்களுடைய சுமையை யேற்க்கவும் சிந்திக்கலாகாது. கவர்ச்சியுள்ள தேஜஸ் மகானகப் பரிணமித்தப் பிறகு பிறர் அவர்களாகவே ஆத்மீக காந்தத்தை உணர்ந்து, வசப்படுவர்."

**1952,** ஜூலை 18, வெள்ளிகிழமை இரவு, மணி சுமார் 1-30; மதறாஸ், எழும்பூர், சுரம்மாள் தெரு 9-ம் நம்பர் வீட்டின் சிறிய பூஜை அறையில் வீ. டீ. என். மல்லாந்து தியான மனப்பான்மை யுடன் படுத்திருந்தார். உருவம் புலப்படவில்லை. தெளிவான இனிய குரல் பேசிற்று: "விழித்திருக்கிறயா? விழித்திருக் கிறயா?"

**தென்னட்டு விஜயம்.**

வீ. டீ. என்: "ஆம்."

குரல்: "கேள். அயல்நாட்டிற்கு நீர் சென்றதுண்டு. கப்பலில் செல்லும்போது சாமான்கள் இருவகையாகப் பிரிக்கப்படுகின்றன—ஒன்று

'வேண்டியவை' என்ற சீட்டுடன், மற்ருென்று 'வேண்டாதவை'. வேண்டாச் சாமான்களைக் கப்பல் மாலுமிகளிடம் ஒப்படைக்கிருேம். அவை மீண்டும் நமக்குக் கிடைக்காதென்று கொள்ளுதலாகாது; வேருெருவர் பொறுப்பு ஏற்றுக்கொள்கிருர், அவ்வளவுதான். அதேபோல உமது குடும்பம் 'வேண்டாச்'சாமான். அதைப்பற்றி கவலைபடாதே. கடற் பிரயாணத்தைக் கவனி.

"ஆத்மீகத்துறையில் நீர் முன்னேறியவர்; சங்கத்திற்கு மனுபோட வேண்டிய அவசியமில்லை. எங்கள் நியோகத்திற்கு நீர் சாதகமாகச் செய்யக் கூடியது எவ்வளவோ உளது........ஹூம்." சம்பாஷணை முடிந்தது.

மத்தியானம் செங்தோமிற்கு விரைந்தோடி உணர்ச்சி மிகுதியுடன் வீ. டீ. என் இவ்வபூர்வ அனுபவத்தை விவரித்தார். கண்ணிற்குப் புலப்படா நபர் கிரியா கோஷ்டியைச் சேர்ந்தவர் என்பதைச் சரியாக யூகித்து, யோகானந்தராக யிருக்கக்கூடுமோ என வியந்தார். ஆசிரியன்: "பாபாஜி யாக இருக்கலாம்."

மறுநாள் வேதகிரிக்குத் திடீரென மயக்கம் வந்தது. வீ. டீ. என்னின் அருமை ஆத்மீகச் செல்வனுக்கு அபாயம். மலச்சிக்கல் என்பதை விசாரித்து அறிந்து, விளக்கெண்ணெய் மூலம் மரணமடைந்த பையனுக்கு உயிர் பிச்சை அளித்த லாகிரி மகாசாயாவின் அற்புதத்தை மனதிலேகொண்டு, ஏழு விளக்கெண்ணெய் சொட்டுகளை மகன் வாயில் ஊற்றியவண்ணம்: "ராமய்யா, உமது வேதகிரிக்கு நெருக்கடி," என்று சிந்தித்தார். என்ன விந்தை! குமாரன் திடீரென மயக்கம் தெளிந்து ஒரு விபத்தும் நடவாதது போல பள்ளிக்குச் சென்ருன்! யாவும் கிரியா பாபாஜியின் கிருபையால் நடப்பது.

இதற்கிடையில் வீ. டீ. என்னின் தியானம் மும்மரமாக நடந்துவந்தது. 20—7—52ல் ஔம் என்ற பிரணவத்தை மத்தியில் கொண்ட ஜோதி பிழம்பு தெரிசனம் மீண்டும் கிடைத்தது. ஒரு ஜோடி கண்கள் அவரை நோக்கி ஊசலாடின. பிறகு நொய்ப்பு யோகச்சித்தி அனுபவம்; விநோதமான முறையில் காற்றில் மிதந்தார். கனவோ என சந்தேகித்து கையால் தரையைத் தொட்டுப்பார்த்ததுண்டு. சிறிதுநேரங்கழித்து கீழே இறங்கினுர்.

"தென்னிந்தியாவில் கிரியா வசனுமிர்தம் நன்கு பரவவில்லை. அதற்கு நீங்கள் தேர்ந்தெடுக்கப்படலா"மென 1952, ஜூலைமாதம் 17உ செவ்வாய் கிழமை மாலை தற்செயலாக ஆசிரியன் கூறினுன். அன்றிரவு நடுநிசியின் போது அதே தெய்வீக குரல் பேசிற்று. பரவசமடைந்த வீ டீ. என் செய்தி யினின்று பாபாஜிதான் பேசுகிருர் என்பதை நிச்சயமாக யூகித்தார்.

" விழித்திருக்கிருயா?........கேள். நேற்று தென்னிந்தியாவில் கிரியா நன்கு பரவவில்லை என்று கூறப்பட்டது. உண்மையில் அது எங்குமே போதியளவு வியாபிக்கவில்லை. பத்து வருடங்களாக உம்மை யாட்கொள்ள முயற்சித்தேன் ; இப்போதுதான் வசப்பட்டுள்ளாய் ", இனிய அன்பு உணர்ச்சியோடு குரல் பேசிற்று. " உமது பேனுவை நியோகத்திற்குப் பயன்படுத்தத் தீர்மானித்துள்ளேன். நீர் இரண்டு புத்தகங்கள் எழுத வேண்டும் : முதலாவது " மிஸ்டிஸிஸம் அன்லாக்ட்," இரண்டாவது 'கிரியா, மாஸ்டர்கி டு ஆல் இல்ஸ்'. இத்தலைப்பு பத்திரிகையாளனுகிய உமக்குப் பிடிக்கும். அல்லது 'மாஸ்டர்கி டு ஆல் இல்ஸ் (கிரியா)' என்று மாற்றி கொள்ளலாம்.

" மற்றவர் சீடர்களைமட்டும்தான் தூண்டமுடியும். நான் அயலாரையும் தூண்டக்கூடும். உமக்காக இருகிரியா சாதகர்களைத் தூண்டியுள்ளேன்' ஒருவர் உமக்குத் தெரியும் ; மற்ெருரு நபர் நிரம்ப பணம் வைத்துக் கொண்டு யாது செய்வதென அறியாதிருக்கும் அடையார் மாது........"

வீ. டி. என் குறுக்கிட்டார : " அவளுடைய பெயர் யாது?" கண்டிப் பாக ஆள்காட்டிவிரலைமட்டும் தூக்கி காட்டினுர் ; ஆனுல் தெய்வ குருவின் முற்ருன உருவம் இன்னும் புலப்படவில்லை. மீண்டும் பேசினுர் :" அம்மாது இப்போதும் தாந்திரிக அனுஷ்டானங்களைச் செய்து வருகிருர். செய்தியை நன்கு கிரஹிக்கவில்லை. ஹிகின்பாதம்ஸில் கிடைக்கக்கூடிய உமது புத்த கங்கள் யாவையும் வாங்கக்கூடிய யளவிற்கு செய்தி கிட்டியிருக்கிறது. சிவானந்தர் சம்பந்தமான உமது புத்தகங்களுக்குத் தபால் கார்டு எழுதி யிருக்கிருள், ஆனுல் பெட்டியில் இன்னும் போடவில்லை."

வீ. டி. என். னின் புதுவை நண்பர் ஒருவர் நோயுற்று சாகும் தருவாயி லிருந்தார். தெய்வக் கிருபையால் ஆசிரியன் கூறியது : " மறு பிறவிக் கொத்த பெரும் மாறுதல், அதாவது லௌகிகத்தைக் கைவிட்டு ஆத்மீக வாழ்க்கை நடத்துவேன் என்ற தீர்மானம் ஏற்பட்டால் இங்நெருக்கடியைச் சமாளிக்கமுடியும்," வியப்புறுமாறு நடு நிசியில் தெய்வக் குருவின் குரல் இதைக் குறிப்பிட்டது : " பிறரை நேசிப்போரை நான் நேசிக்கிறேன். உமது நண்பருக்கு மற்ெருரு சாண் கால அளவு உயிர்ப்பிச்சை கிடைக்கும் இவ்வாறு........"

வீ. டி. என் : " எனது சாண் 7¾ அங்குலம் ; அப்படியெனில்............"

" இல்லை. இங்கு சாண் கால அளவென்பது மறு ஜன்மத்தைக் குறிக் கிறது. அதாவது உமது நண்பர் விஷயத்தில் அது ஐந்து ஆண்டுகள்," ஐந்து விரல்களைக் காட்டினுர் ; அவைமட்டும் புலப்பட்டன. " நீர் மட்டும் இருதினங்கள் அவருடன் இருந்து, பிரார்த்தனைசெய்து, ஒரு வாரம் மௌனம்,

4

பால்—பழம் உபவாச மிருக்கச்செய்தால் அவரது உயிருக்கு அபாயமில்லை." அடுத்தது ஆசிரியன் குடும்பத்திற்குப் பயன்படக்கூடிய நிவர்த்தி யொன்று கூறினார், அன்புமய பாபாஜி ஆத்மீகப் பிணிகளை மட்டுமன்றி ஸ்தூல நோய்களையும் நிவர்த்திக்கவல்ல தெய்வ குரு.

வீ. டீ. என் : " குருபிரானே, நினது முகத்தைப் பார்க்கலாமா?"

"ஹூம்," ஆள்காட்டிவிரல் புலப்பட்டது. அவ்வளவுதான் ; சம்பாஷணை முடிந்தது.

காலையில் புதுவை நண்பர்களுக்குக் கடிதம் எழுதிவிட்டு செந்தோமிற்கு வந்தார், " குரு ஆள்காட்டிவிரலைக் காட்டுவதின் பொருள் என்ன?" என்று வினவ, " கப்சுப். கேக்காதே என்பது அதன் கருத்து" என பதிலுரைக் கப்பட்டது.

**1952, ஜூலை மாதம் 26உ, சனிக்கிழமை** ஓர் நன்னாள். அன்று காலை தியானத்தின்போது ஆத்மீகஜோதி வீ. டீ. என் புருவத்திற்குமேல் சஹஸ்ராரத்திற்குச் சென்றது. " மத்தியானம் வழக்கம்போல் பத்திரிகை யாளர் கிழக்கு முகமாகவும் ஆசிரியன் தெற்கு முகமாகவும் அமர்ந் திருந்தோம். அடுத்தருச் சில தொட்டிச் செடிகளும் அதற்கப்பால் உயரமான சிவப்பு பூஜைமலர் செடியும் இருந்தன. ஆசிரியன் தியானத்தை முடித்த போது ஏற்கெனவே கண்களைத் திறந்த வீ. டீ. என் மீண்டும் பரவசநிலையை யடைந்துவிட்டார் ; பார்வை வெறிச்சென்றிருந்தது. ஆசிரியனை ஏதோ வொன்று மானஸிகமாக இடைவிடாது பாபாஜியின் இனிய நாமத்தை ஜபிக்கச் செய்தது.

ஸ்ரீ வீ. டீ. நீலகண்ட மகாசாயா முதன்முறையாகச் சீரிய குரு பாபாஜி யின் முற்றின உருவைக் கண்டு களிப்புற்றார். பழக்கமான இனிய குரலில் பேசினார். அவருக்கு அருகாமையில் நின்றது ஆசிரியனின் உருவம், பின்னாகத் தோள் உயரம் மறைவாக ஸ்திரீ ஒருவர் காணப்பட்டார். " சீடன் குருவின் கருவியாக விரும்புகிறான். அவனது பெயரை வழங்கவைக்க வாரிசு வேண்டு மென அச்சீடனிடம் குரு கூறினால் யாது செய்யவேண்டும்?" என்று பாபாஜி திடீரெனக் கேட்க திடுக்கிட்ட வீ. டீ. என் பளிச்சென்று பதில் அளித்தார் : " ஏன்? எனக்கு ஏற்கனவே நான்கு பிள்ளைகள் உண்டே." வழக்கம்போல் ஆள்காட்டிவிரலை உயர்த்தி " உம்மைச் சொல்லவில்லை." ஆசிரியனைச் சுட்டிக் காட்டினார். 'பாருங்கோ, பாருங்கோ" எனக் கூவயிருந்த வீ. டீ. என். எப்படியோ சமாளித்துக்கொண்டார்.

இப்புனித தினமே **பாபாஜி விஜயம்** எனக் கொண்டாடப்படும். கிரியா சத்குருவின் கிருபையால் பல ஆங்கில, தமிழ் புத்தகங்கள் மின்னல் வேகத்தில் பிரசுரிக்கப்பட்டு வருகின்றன. நாங்கள் செய்வதில் கிஞ்சித்தேனும் நன்மை இருப்பின் அது சத்குருவின் கிருபையால் நடப்பது; தவறுதலுக்கெல்லாம் நாங்களே பொறுப்பாளி.

**கிரியா பாபாஜி சங்கம்**

சத்குரு பாபாஜியின் கிரியாவை எழுத்து, பிரசங்கம், அனுஷ்டானத்தின் மூலம் உலகெங்கும் பரப்ப ஆசிரியன் கிரியா பாபாஜி சங்கம் ஏற்படுத்த கருதியபோது சர்வக்கிய சத்குரு **1952, அக்டோபர் 17உ வெள்ளிகிழமை** மத்தியானம் 12 மணிக்குமேல் 3 மணிக்குள் புனித **தீபாவளி** (தீப ஒளி) யன்று **இச்சங்கத்தை ஸ்தாபிக்**கும்படி கட்டளையிட்டார். இதன் அடுத்தக் கூட்டம் எங்களைத் தடுத்து ஆட்கொண்ட **கிரியா பாபஜியின் ஜயந்தி** தினமாகிய **கார்த்திகை அண்ணாமலையார் தீபத்**தன்று. 1952, நவம்பர் 30உ, ஞாயிற்றுகிழமை, அனைவரும் வருக!

# உபதேசமொழிகள்

## 1. நான் யார்?

உண்மையான இன்பமே அஞ்ஞான உலகில் இல்லை. யாவும் அநித்தியம், கடவுளே நித்தியம். ஒவ்வொருவரும் கடவுளைத் தீவிரமாக நாடவேண்டும். கடவுள் சச்சிதானந்தம். கடவுளுக்கு மற்றொரு பெயர் கிரியா பாபாஜி.

ஆவேச நிலையில் மகான்கள் ஆற்றும் பிரசங்கங்களில் துவைதம் நீங்கி கடவுளுடன் ஒன்றுபட்டு விடுகிறார்கள். சத்குரு ரமாதேவி, பஜனையின்போது அடிக்கடி இந்நிலையை யடைவதுண்டு இத்தகைய அத்வைத நிலையில் பாபாஜி நிகழ்த்திய ஆவேச பிரசங்கம் :—

"நான் சத்து—சித்து—ஆனந்த பரப்பிரம்மன். எமது சுபாவமே அது. அதுவன்றி வேறாக யிருக்கமுடியாது ஏனெனில் எமக்கு அந்தம் இல்லை. அது எமது உண்மை, இயல்பான சுபாவம். நான் பரப்பிரம்மன்; வரம்பிற்குள்ளும் புறமும் பரமாத்மனே. நான் நித்திய நிரந்தர சத்தியம். யாவும் தம்முள்ளே கொண்ட ஒரே ஒன்று நான்தான். சகல பொருள்களிலும் அவற்றின் மூலமும் ஜீவிப்பது நான்; நான் அன்றி வேறு ஒன்றுமிலலை. நான் எப்போதும் சகலமும்; ஜீவியமே நான்தான். எல்லா மாறுதல்களுக் கிடையிலும் இருக்கும் மாறாத ஒன்று நான். எல்லா உருவங்களிலும் உருவமற்றது நான் உருவத்துடன் இணைந்திருப்பது மாறுதல்; மாறுதல் உருவத்தின் பட்டம். ஆனால் நான் இவ்விரண்டிற்கும் அப்பாலுளேன்; உருவம், மாறுதல் பாதத்தில் சுருண்டு கிடக்கும் ஊன் பிணிகள் எம்மைப் பாதிக்கா. இங்கு, அங்கு, எங்கும் : எக்காலமும்—ஏன், வருங்காலத்திலும்—நான் அத்வைத ஒற்றுமை. இரண்டற்ற ஒன்றைப் பூர்ணமாக அனுபவத்தில் அறிவதிலன்றி வேறு எங்கு சந்தோஷமுளது? நான் சந்தோஷ மயமென்பதை உணர்கின்றேன். நான் பேரின்பமயம், களிப்புமயம். அறிந்தோ அல்லது அறியாதோ, அதிகம் அல்லது குறைவான அளவிற்கு ஒவ்வொருவரும் உணர்ந்து அனுபவிப்பது எமது பேரின்பத்தைத்தான். பேரின்பம் எல்லையற்றது; எல்லையற்றது பேரின்பமயம். பிரபஞ்சம் முழுவதும் பிரம்மனாகிய மூலத்தத்துவத்தினின்று தோன்றியது, நிச்சயமாக நான் அந்தப் பிரம்மன். ஒவ்வொன்றிலும் எல்லாவற்றிலும் நான் வேறுபடாதுளேன்.

என்னுள் நான் சாந்தி, அமைதிமயம். எமது குணம் முற்றுன சத்தியம் பிரகாசம், பேரின்பம். இதில் கிஞ்சித்தேனும் ஐயமில்லை. இது எமது நித்திய உண்மை. மித்யா பொன்னின் மினுமினுப்பு, மாறத்தக்க நிலையற்ற விகாரங்கள், பிரமை—இத்துண்டுகளாலாக்கப்பட்ட இவ்வுலகில் ஒரே அத்வைத நித்திய வியக்தி நான்........மரணம் எமக்கு ஒரு விளையாட்டு, நான் **மரணத்தின் மரணம்.** நான் எல்லையற்ற, நித்திய, சாஸ்வதமான ஆத்மன். எம்மை தீ எரிக்காது நீர் கரைக்காது, காற்று உலர்த்தாது, வாள் வெட்டாது.....உள்ளிருந்து பொங்கும் நித்திய பேரின்ப அமிர்த வெள்ளத்தில் உலகை நீராட்டுகிறேன்; 'எமது', 'உமது' என்ற பாகுபாடுகள் அகற்றப்படுகின்றன".

## 2. பிரார்த்தனை

1952, ஆகஸ்டு 9, சனிக்கிழமையன்று பாபாஜி திடீரென தோன்றி கீழ்கண்ட பிரார்த்தனையைச் சிந்தித்து தியானிக்குமாறு கட்டளையிட்டார் :—

"பாபாஜி! பெரும் இமயக் குருவே! சர்வமத ஜீவனே! நாதனே! புவியெக்கும் தங்கள் சக்தியும் சௌந்தரியமும் ஜவலிப்பதற்கு ஏதுவான தங்கள் பூலோக பிரதரிசனத்தை நாங்கள் களிப்புடன் வரவேற்கிறோம். எங்களை அறியுமாறு எங்கள் கண்களைத் திறக்க வேண்டும்; தங்களை சுத்தி செய்க. தங்களை வெளியே காணுமாறு நீங்கள் உள்ளே ஜனிக்கவேண்டும். களைபுற்ற தேசங்கள் நினது இராஜ்ஜியத்தில் இடம்வகிக்கவும் நினது உலகில் நீதியும் சாந்தியும் பரவவும் வேண்டும்; இதற்கு ஏதுவாக தங்கள் இன்ப வசனமிர்தத்தை பரப்ப எங்களைப் பலப்படுத்துக".

தீவிரமாகக் கசிந்துருகி தினமும் பிரார்த்தனை செய்தால் கிரியா பாபாஜியையே சத்குருவாகப் பெற்று கிரியா மார்க்கத்தில் துரிதமாக முன்னேறக்கூடும்

## 3. சத்குரு

குரு கடவுள் அனுபவத்தைப் பெற்றவர்; வழியைக் காட்டுவார். ஆனால் சத்குருவோ மார்க்கத்தைக் காட்டுவது மட்டுமன்றி கடவுளேயே ஒரு க்ஷணமேனுங் காட்டக் கூடியச் சத்தியுடையவர். சீடனுக்குப் போதிய பக்குவம் இருப்பின் இவ்வனுபவம் நீடித்திருக்கும்.

கிரியா பாபாஜி ஒரு சத்குரு. அன்பு நிறைந்தவர். நோயுற்ற அன்பருக்குப் பகர்ந்த மொழிகளாவன ;

"நான் பலரைத் தூண்டுகிறேன், சிலருக்கு செய்தி அனுப்புகிறேன், வெகு சிலருடன் பேசுகிறேன்.....நீ என் அருமை குழந்தை ஓய்வு

எடுத்துக்கொள்............எனக்கு ஏதுவாக நீ மனம் உவந்து கருவி யாக அமைந்துள்ளாய் உன்னை உபயோகிக்கும் முன்னர் உமது குடும்பச் சிக்கல்களை நீக்குவது எமது கடமையன்றோ. விரைவில் செய்கிறேன்.

* * *

"சத்குரு தூண்டலாம் அல்லது, கடமை பொறுப்பை ஏற்கலாம்".

* * *

"எமது கிருபையால், அன்பால், பிரேமையால் நீ எளிதில் பீரங்கி குண்டையும் எதிர்த்து உயிரையும் அங்கங்களையும் துச்ச மென கருதுவாய். என் குழந்தாய், புன்முறுவல் பூத்து வாழ்க்கை யின் பெரும் வெற்றிகளைப் பெறுவது அதனினும் கடினமென்பதை அறிக"

## 4. கிருபை

"இடைவிடாது எமது கிருபை பொழியும் ஆனால் நீ நன்கு விழித்திருக்க வேண்டும். எப்போதும் உசாராகயிருந்து, செவி சாய்த்து, அளிக்கப்படும் சிறு குறிப்பையும் சிந்திக்கவேண்டும்".

## 5. ஜபம்

"நித்திய ஜபம் : 'ஔம் தத் சத்'; 'ஔம் சாந்தி.'"

* * *

"ராமா, ராமா'; 'கிருஷ்ண, கிருஷ்ண என்று சொல்வது போல் 'பாபாஜி, பாபாஜி' என்று ஜபம் செய்யலாம்"

## 6. தியானம்

கடவுளில் மனதைக் குவித்துச் செலுத்துவது தாரணை. இடைவிடாது கடவுளை எண்ணெய் தாரைபோன்று சிந்திப்பது தியானம்,

1952, ஆகஸ்டு 17, ஞாயிற்று கிழமையன்று சிந்திக்கச் சத்குரு அன்புடன் அளித்த உபதேசம் :—

"குருவின் வார்த்தைக்குக் காத்திரு.
மறை ஜோதியைக் காண்க.
அவரது கட்டளைகளை ஏற்றுக்கொள்ள செவி சாய்க்கவும்
போருக்கு இடையிலேயே.
கூட்டத்தின் சிரசுகளுக்குமேல்
அவரது சிறு சைக்கினையும் கண்டறிக.
புவியின் இரைச்சலுக்கிடையில்
அவரது மிக மெல்லிய குரலைக் கேள்".

"நிசப்தத்துடன் வசதியுள்ள சௌகரியமான ஆசனத்தில் அமரவும். மனத்தினின்று வேகத்துடன் எண்ணங்கள் வெடித்து மலரட்டும். அவைகளைத் தடுக்க வேண்டாம். மௌனமாக, பற்றில்லாது கவனிக்கவும். அவைகளைப் பின் தொடர வேண்டாம்; விரட்டி, சீர்குலைக்காதே. கவனித்து சாட்சியாக இரு."

## 7. மௌனம்

"சாந்தி, சக்தி, ஆக்கத்தைத் தரும் இரட்டை கருவிகள்: மௌனம், மனனம்".

வியாழன்தோறும் (குருவாரம்) மௌன மிருப்பது நலம் "புதன் இரவே துவக்கி வெள்ளிக்கிழமை காலை வரை நீடித்திருப்பின் 32 மணி நேரமாகும்........கூடுமாயின் அத்தினங்களில் பாலும் பழமும் மாத்திரம் சாப்பிடலாம். தேக ஆரோக்கியம் இடங்கொடா விட்டால் உப்பு, மிளகு இல்லாது தயிரும் சாதமும் சாப்பிடலாம்".

"வியாழக் கிழமை மௌனம் சகாக்களுடன் கூடிய காலனையும் 96 கலைகள் கொண்ட மாயையையும் விரட்டியடிக்கும்.

## 8. கிரியா

கிரியா (யோகம்) பஞ்சேந்திரியங்களை ஸ்தூல உலகத்தினின்று மனதிற்குத் திருப்புகிறது. மனிதனைத் தெய்வமயமாக்குகிறது. நித்திய பேரின்ப நிதிக்குச் சாவி கிரியா.

கிரியா தீக்ஷையைக் குருமுகமாகப் பெற்று கிரியாபென் (கிரியா குரு) கண்காணிப்பின்கீழ் அனுஷ்டானம் செய்ய வேண்டும்; இல்லையேல் தீமை விளையும்.

"நன்றாக மூச்சு இழுக்கவும்; கொண்டமட்டும் சுத்த, புது காற்றை நிரப்புக; பிரபஞ்சமெங்கும் வியாபித்திருக்கும் எல்லையற்ற சக்தியும்தானும் ஒன்று எனத் திடமாகக்கூறுக. மூச்சை உள்ளிழுக்க எவ்வளவு நேரமாயிற்றோ அதேயளவு நேரம் மெதுவாக மூச்சை விடவும். நாளடைவில் இவ்வப்பியாசம் சகஜமாகி விட்டால் எந்த ஸ்துல, சுக்கும காரணமும் உமது சாதாரண சுவாஸத்தைப் பாதிக்காது; அதற்கு மாறாக அதைச் சக்தி, இசை, சீர்ப்பிரமாணமுள்ள ஜீவ சலனமாக்கிவிடுகிறது. உடலுக்கும் மனத்திற்கும் சாந்தியைத்தரும்"

* * *

**"ஒரு நாளாவது கிரியாவை மறவாதே."** கிரியா சாதனம்தான் நாம் கிரியா பாபாஜிக்குச் செலுத்தவேண்டிய காணிக்கை.

## 9. பக்தி

(கடவுளிடம்,) கிரியா பாபாஜியிடம் கொண்டிருக்கும் அன்பு பக்தி "எந்த அளவிற்கு நீங்கள் குருவைப் பிதா, கடவுள், சகலமுமென்று பாவித்து அன்பு, **பக்தி**, சரண்புகுதல், சேவை செய்கிறீர்களோ அவ்வளவிற்கு நீங்கள் உரிமை கொண்டாடலாம்."

* * *

மோட்சத்திற்குச் சிறந்த மார்க்கம் அன்பு, சேவை—அதாவது கடவுள் பக்தி, சத்குரு சேவை.

## 10. ஆன்ம விசாரணை

ஒவ்வொரு ஜீவாத்மனும் தாய்வயிற்றில் படும்துயரம் சொல்லி முடியாது. கிஞ்சித்தேனும் நகரமுடியாது கற்பப்பையில் கடுங்காவல் அனுபவிக்க வேண்டியிருக்கிறது இத்துயரை நீக்க யார் தான் பிறவி — இறப்பு சுழலினின்று தப்பியோட விரும்பார்? பாபாஜி நிவர்த்தி கூறுகிறார்: "மீண்டும் பிறப்பு — இறப்பாகிய கண்ணியில் சிக்கவேகூடாது. எப்போதும் இருதய 'நானிற்கு' அருகாமையில் இருத்தல், மனச்சிதைவுகள் இல்லாது எந்நேரமும் காத்தல் அவசியம். அல்லும்பகலும், ஒவ்வொரு மணிநேரமும் அகநானை இலங்கச் செய்யவேண்டும்; அதுதான் மதிப்புள்ள புருஷார்த்த வியக்தியைத் தரும். இறுதி காலத்தில் அல்லது லௌகிக வாழ்க்கைக்குத்தடை ஏற்படும்போது நீ திடுக்கிட்டு எழுந்து தனிமையில் நானிலிருக்கும் நானைத்தேட முற்படுகிறாய். அப்போது, வழி தவறிவிட்டோம், தவறான வண்டியில் ஏறி விட்டோம், இறுதி இடம் தூரத்திலுளது போன்ற அச்சங்கள் நீங்கும். தனிமை உணர்வை அகற்ற சத்சங்கத்தை நாடுக; மமகார வியக்தியிலிருக்கும் புருஷார்த்த வியக்தியை அபிவிருத்தி செய்க. பெரிய நானிலிருக்கும் இச்சிறு நான் மேலும் மேலும் வளர்ந்து மமகார வியக்தியைச் சிறிதாக்கி துடைக்கவேண்டும். அப்போது சுற்றுபுறப்பற்று நீங்கும்................"

**வீ. டி.** என் : "அவ்வாறு செய்வது எப்படி?"

பாபாஜி, "உமது புருஷார்த்த வியக்தியை ஒன்றுபடுத்தி மமகார வியக்தியைத் துண்டுபடுத்துவதே அதற்கு வழி. நான் அல்லது நீ என்று சொல்லப்படுவது ஜீவனும் மனமும்கொண்ட வெறும் ஸ்துலஉடல் அல்ல. 'நான் அல்லது 'நீ' என்பது ஐந்து கோசங்களாலாயது என்று கூறுவர்; சாதாரணமாக இவ்வைந்தில் இரண்டைக் கவனியாது நாம் ஜீவித்து வளர்கிறோம். நாளடைவில்

மேலும் மேலும் இவ்விருகோசங்களை முதற் மூன்றுபோல் அதே அளவு பிரகாசிக்கச் செய்யவேண்டும்............புத்தி, ஒப்பு, தூண்டுகை—இவைகளுக்குப் பதில் பிரதிபை, நுன்னறிவின் மூலம் குணத்தையும் நடத்தையும் உருவாக்க வேண்டும். உணர்ச்சி, புத்திக்குப் பதில் இருதயம், இருதய அந்தரங்கவாசி உமக்கு வழி காட்டட்டும்................'நானி'லிருக்கும் 'நானை' அணுகி அதில் உறுதியாக நிற்க முயற்சி செய்க. வீட்டிலோ, டிராமிலோ, பஸ்ஸிலோ, தனிமையில் அல்லது பிறரோடு கடற்கரை பூங்காவனம் முதலிய இடங்களில்—எங்கிருப்பினும் சரி' நானி'லிருக்கும் 'நானில்' உறுதியாக நிற்றல் வேண்டும்............உமது புருஷார்த்த வியக்தியை மெதுவாகவும், நிச்சயமாகவும் அபிவிருத்தி செய்க........வேண்டியது ஆத்ம—தந்திரம்; ஸ்வதந்திரம் அன்று. சுதந்திரம் மட்டும் போதாது. ஆண்—பெண், நகரவாசி—கிராமவாசி, இரா—தொழிலாளி பகல்—தொழிலாளி, சதாகால வேலையாள் சிறுதுகால வேலையாள் போன்ற பால், தொழில் வேற்றுமையுள்ள வியக்தியுடன் வளரலாகாது. உமக்கு நீயே எசமான், நீயே வேலைக்காரன் என்பதை மறவாதே; அனுபவப்பூர்வமாக உணர்க. முற்றான முறையில் அபிவிருத்தியடைய வேண்டும்; பற்பல பகுதிகளாக வளர்ந்து ஒன்றுபட்டு முற்றுவது சரியல்ல............இவ்வாறு செய்வீரேல் சமத்துவம் நிலவும்; உயர்ந்தோன்—தாழ்ந்தோன், உபாத்தியார்—மாணுக்கன், குரு—சீடன் முதலிய பேதங்களுக்கு இடமிராது. தர்க்கம். பாவனை, தெய்வமாக்குதல்—இவற்றிற்குச் சந்தர்ப்பம் வாய்க்காது. ஒவ்வொருவரும் அவர்தம்மையே பிடித்துக்கொள்ளவேண்டும், அதாவது திருத்தி அபிவிருத்தி செய்தல் வேண்டும். ஓளம் தத் சத். ஓளம். ஓளம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!."

விரிந்த அகந்தை 'நான்' ஒழியும் வண்ணம் அதிலிருக்கும் தெய்வ 'நான்' வித்தைப் பேணிவளர்க்கும் ஆத்ம விசாரணை மார்க்கத்தை இங்கு கிரியா பாபாஜி நன்கு விளக்கியுள்ளார். இவ்வாறு செய்வோமாயின் பிறவி பிணி நீங்கி தெய்வ, அமர சமத்துவ நிலை எங்கும் நிலவும்.

*　　　*　　　*

"அக மனிதனுக்குச் சரண்புகுந்தால் எம்மனிதனையும் எங்கும் எப்போதும் சமாளிக்கலாம். **அசை போட** உள்ளே செல்லாதே; உட்சென்று **ஆதிக்கம் செலுத்து.**"

*　　　*　　　*

"**ஊன் கூட்டை விட்டு வெளியே வா. நீ சாஸ்வத ஆத்மன், அதுவே நீ. உணர், வற்புறுத்து, காண், அனுபவத்தில் அறி.**"

## 11. வெற்றி

ஆத்மீக துறையில் வெற்றிகாண கிரியா பாபாஜி உபாயம் கூறுகிறார் :—

" சுத்த நேர்மை இருதயத்துடன் இரு. அதுவே மதவெற்றி ரகசியம், வாழ்க்கையின் முக்கிய பிரச்சினைகளை எளிதில் ஆராய முடியும். குருட்டு பந்தங்களையும் கணக்கிடும் மனப்பான்மையும் நீக்கி பேரின்ப, அமரத்துவ தேக்கத்தை வடிக்கும் கால்வாயை யமைத்துக் கொடுக்கும்."

## 12. கர்மம்

பாபாஜியின் கிருபையைப் பெறவும், ஆதாரத்தைக் கர்மசுத்தி செய்யவும் சேவை வேண்டும். கௌதம புத்தர், ஏசுநாதர் போன்று உலகங்களின் துயர்கண்டு மனமுருகும் கிரியா பாபாஜி பல நூற்றுண்டுகளாகத் தம உருவத்தைக் கலைக்காது இச்சேவைலட்க்ஷியத்தை அனுஷ்டித்துக் காட்டுகிறுர்.

" உண்மையன்றி உமது குழந்தைகளைக் கடவுளாகப் பாவித்து சேவை செய்வது சரி ; அதுவே உமமிலிருககும் நரேந்திர அம்சம்."

* * *

" வேண்டியது மனப்பூர்வமான பூர்ண அளவு சரண்புகுந்த உழைப்பாளிகளின் பெரும்படை, நிசப்தமாகவும, அடக்கமாகவும். ஆடம்பரமில்லாது அல்லும் பகலும் பாடுபடுபவர்கள் ; அவர்களது நோக்கம் மனிதனிலிருக்கும் கடவுளுக்குத் தொண்டு செய்வது."

* * *

காலத்திற்கேற்ப மக்களை மேன்மைபடுத்த உலகின் பல்வேறு பகுதிகளுக்குக் கிரியா பாபாஜி தம் தூதர்களை அனுப்புகிறுர்.

* * *

" சத்குரு நியோகத்திற்கு எத்துயரையும், ஹிம்சையும் ஏற்கத் தயாராக யிரு."

## 13. ஞானம்

" சுத்த இருதயக் கோயிலில் பிரகாசிப்பது ஞானம். இந்த ஞானமே வாழ்க்கை கட்டிடத்தின் சிரசு. ஆதலால், என் குழந்தாய், எழுத்து, புத்தகம், முக்கியமாக அன்றுட வாழ்க்கையில் சந்தேக மற்ற எல்லையற்ற தெய்வ ஞான சோதியைத் தோற்றுவிக்க வேண்டும் ".

## 14. பிரம்மச்சரியம்

பெண்களைத் தெய்வத்தாயாகக் கருது.

* *

தேக ஆரோக்கியத்தையும் உடல்—கோயிலையும் பராமரிக்கவும்.

## 15. சம்பூர்ணம்

" எண்ணங்கள் நீரோட்டமும் நந்திரோபாயமும் உள்ளவை. அவைகளைப் பிடித்து சிறைபடுத்த வேண்டும் அமைதியாக இருக்குவி, மனதை ஒரு முகமாக ஓரிடத்தில் செலுத்து........காத்திரு. சிந்தனை ஊற்றினின்று சச்சிதானந்த ஜோதி எண்ணங்கள் வழிந்து ஓடும்........இவை வன் பொருள்போன்று திண்மையானவை; ஸ்திரமுண்டு. ஒருவனில் ஏதேனும் இருக்க வேண்டும். அந்த ஏதேனும் மதிப்புக்குரிய தத்துவமாவதற்கு தமக்கோ, கூட்டாளிக்கோ, சார்ந்தோனுக்கோ அல்லது உறவினருக்கோ, இன்பமளிக்க வேண்டும்; இறுதியில் கடவுளுக்கு ஆபரணமாக அமையவேண்டும். இது சம்பூர்ணம்; அது சம்பூர்ணம். இச் சம்பூர்ணம் அச் சம்பூர்ணத்தினின்று வருகிறது; இச் சம்பூர்ணத்தை அச்சம்பூர்ணத்தினின்று அகற்றினால் எஞ்சியிருப்பதும் **சம்பூர்ணம்** தான்."

## 16. பதிபக்தி

கணவன்மார் "**ஏகப்பத்தினி விரதம்**" அனுஷ்டிக்க வேண்டும்.

* * *

மனைவிகளுக்குக் "**கணவனன்றி வேறு தெய்வம் இல்லை**"

* * *

காலையில் "**எமது பர்த்தா எமது பிரதான குரு**" என ஜபித்துக் கொண்டே மும்முறை வலம் வந்து பாத பூஜை செய்க.

* * *

மாலையில் ஸ்திரீகள் துளசியில் விளக்கேற்றி வைத்து ஒன்பது முறை பிரதட்சிணம் வரவேண்டும் அப்போது ஜபிக்கவேண்டியது।

**" தீபம் ஜோதி பரப்பிரம்மம்**
**தீபம் சர்வா தமோ பகம்!!**
**தீபேனு சத்யதே சர்வம்,**
**சந்தியா தீபம் நமஸ்துதே!! "**

## 17. நன்னடத்தை

" இன்று செய்யக்கூடியதை நாளைவரை தள்ளிபோடாதே "

*　　　　*　　　　*

" நித்தியமும் சிலமணிநேரம் தனிமையில் இரு "

*　　　　*　　　　*

" பேசும் முன்னர் இரு முறை சிந்திக்கவும் ; செய்யும் முன்பு மும்முறை சிந்திக்க வேண்டும் ".

*　　　　*　　　　*

" மற்றவர்களிலுள்ள நல்ல அம்சங்களையே கவனி "

*　　　　*　　　　*

" வாழ்க்கை குறுகியது, காலம் பறக்கிறது; விழித்திரு, எழுந்திரு, ஆத்மனை அனுபவத்தில் அறிக ; இவை கூட மறைந்துவிடும் ; இன்ப துன்பத்தில் மனம் சமமாயிருத்தல் வேண்டும் ".

## 18. சர்வமத சமரஸம்

" வகுப்பு வாதம், மதவெறியில்லா ஆத்ம அறிவை அவசியம் பரப்பவேண்டும்."

*　　　　*　　　　*

உண்மை மதம் பிரிக்காது, இணைக்கும்; காயப்படுத்தாது குணப்படுத்தும் கொல்லாது, காப்பாற்றும்.

*　　　　*　　　　*

" மதத்தின் தோற்றங்கள் மாறுபடினும் அதன் சாரம் ஒன்றே, அறியாதோர் மதத்தின் பெயரால் பூசலிடுவர், ஒருவரை மற்றொருவர் வெறுப்பர். ஆனல் அறிந்தோர் தமக்கேற்றச் சமயக் கோட் பாட்டைப் பின்பற்றி எல்லா மதங்களையும் கௌரவப்படுத்துவர். உதாரணமாக ஹிந்து மதம் எனப்படுவது பல மதங்களின் ஐக்கிய மன்றி வேறல்ல." •

*　　　　*　　　　*

"குறை கூறாதே" எல்லா மகான்களையும் மேன்மைபடுத்து ; அவர்களுக்குச் சேவை செய் ; அதே சமயம் உமது சத்குரு தேவருக்குச் சகலமும் தியாகம் செய்க.

**ஓம் ! கிரியா பாபாஜி ஓம் ! ஓம் ! ! ஓம் ! ! !**

இப்புத்தகத்தின் பதிப்புரிமை கீழ்கண்ட இருவரையும் சேர்ந்தது :

1. சா. அ. அ. ராமய்யா.

2. பிரசுரிப்பாளர், **வீ. டீ. நீலகண்டன்,**
9, சுரம்மாள் தெரு, எழும்பூர், மதருஸ்-8.

**இதழ் கிடைக்குமிடம் :—**

**சா. அ. அ. ராமய்யா,**
நம்பர் 1—1, அருளானந்த முதலி தெரு,
செந்தோம், **மைலாப்பூர்,**
**மதராஸ் – 4.**

*AWAIT RELEASE ON*

Babaji's
22-11-52—MASTERKEY TO ALL ILLS .... Rs. 7/- Nett
(Kriya)

Babaji's
17- 3-53—DEATH OF DEATH .... Rs. 11/- Nett
(Kriya)

Babaji's
15- 6-53—MAN, LIFE, DEATH & AFTER .... Rs. 16/- Nett
(Kriya)

(Babaji's)
October '53—CRUCIFIXION & RESURRECTION
(Kriya) .... Rs. 40/- Nett

பாபாஜி ஆத்ம விருந்து (மொழிபெயர்ப்பு) .... ரூ. 40/-

*READY FOR SALE*

THE VOICE OF BABAJI and MYSTICISM
UNLOCKED (Kriya) ... Rs. 5/- Nett

All by Messrs. V. T. Neelakantan &
S. A. A. Ramaiah

By S. A. A. Ramaiah :
A BLISSFUL SAINT .... Rs. 3/- Nett
(Paramahamsa OMKARA Swami)

By V. T. Neelakantan :
No. 9 BOAG ROAD ... Rs 4 - Nett
(Sathguru Rama Devi)
THE SILENT FORCES .... Rs. 2/- Nett
UNDER THE X-RAY Re. 1-8/- Nett
GUIDE, FRIEND and PHILOSOPHER Re. 1-2/- Nett

Copies from S. A. A. RAMAIAH,
No. 1-1, Arulananda Mudaly Street,
Thome Mylapore, MADRAS.

உ

பிரமாநந்தகுருவேநம:

# ஞானவியவகாரம்.

முதல் பாகத்தின் தொடர்ச்சி

இவை

திருவாரூருக்கடுத்த கல்விக்குடியிலிருக்கும்

பண்டிதர் ஸ்ரீமான்

I. S. நாராயணசாமி ஜோசியரவர்களால்

இயற்றப்பட்டு,

பல பிரபுக்களின் வேண்டுகோளின்படி

தஞ்சை

ஸ்ரீ வித்தியா விநோதினி அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1913.

இதன் விலை ] —— [ அணா 6.

Copy-Right Registered.

…AJAGOPAL PI…
12921
…KSHANDAR KOVIL.

உ

ஓம் பரப்பிரஹ்மணே நம:

# ஞான வியவகாரம்

## இரண்டாவது பாகம்

## தத்துவகண்டஞானத்வைத விவகாரம்.

ஆதியந்த மற்ற அனாதி வேதாந்த கோர்ட்டாராகிய பரமானந்த பரமகுரு ஜட்ஜியவர்கள் சமுகத்துக்கு.

பிரவர்த்தி வருஷத்திய நிவர்த்தி நம்பர்.

**வாதி.**

கருமத்தால் கட்டுப்பட்டு தாபத்திரயத்தால் துக்கமடைந்த மும்முக்ஷுவான ஆத்மநாதன்.

ஷை திரப்பு வைக்கீல்

அறிவானந்தன்

**பிரதிவாதிகள்**

அக்ஞான பாஷாண்டி 1.
அவிவேகசிதாப்ரசநாகிய பாமரபாஷாண்டி 2.
ஆவரணசக்தியிலாழ்ந்த கர்மபாஷாண்டி 3.
ஆதியந்தமறியாத பக்த சிரோமணி 4,

ஷை திரப்பு வைக்கீல்

அகம்பிடித்த அநாத்மநாதன்

**செக்ஷன்.**

அத்வைத உபநிஷத்தின்படி வாதியின் பிராது.

இந்த நானென்கிற ஆத்ம சொத்து அதாவது பேரானந்த சொத்து ஒருவருக்கும் ஒருவிதமான பாத்தியத்திற்கும் சம்மந்தப்படாமலும் அழியாமலும் நிரந்தரமாயும் நிர்மலமாயும் அஸங்கமாயுமிருக்கிற சொத்தை எதிரிகள் முன் இல்லாமலிருந்

ஞானவியவகாரம்.

தும் இப்போது அத்தியசத்துனுல் உண்டான அதாவது ஆகா சத்தில் இந்திர கேதுபோல் முதலாவது எதிரியான அஞ்ஞான பாஷாண்டி யென்பவன் தான் வெளிக்கிவாராமல் தன்னுடைய ஆவரண சக்தியால் நான் என்கிற ஆத்மாவின் அஸங்கத்தன் மையை மறைத்து தன் விக்ஷேபசக்தியைவிட்டு அதனுல் கற் பிக்கப்பட்ட வாசனையுடன் கூடின 2-வது எதிரி பாமரபாஷா ண்டி வகைரு மூன்று எதிரிகளைக்கொண்டே இந்த நான் என் கிற ஆத்ம சொத்தை கிரகித்து தங்கள் தங்கள் அனுத்ம சொத் தோடே சேர்த்து கலந்து போகும்படி ஏவுதல் செய்திருப்ப தால் இப்படிப்பட்ட மோசக்காரர்களான அவர்களுக்குள் முத லில் அக்ஞான பாஷாண்டி என்கிற 1-வது எதிரியையும் அவ னைச்சேர்ந்த கர்மபாஷாண்டி வகைரு மூன்று எதிரிகளையும் மூல தோ ஹானியாகச் செய்து இந்த நான் என்கிற ஆத்ம சொத்தா னது சொபாவமாய் ஒரு கற்பனையிலும் சம்பந்தப்படாமலும் அஸங்கமாயும் எப்படி முன் இருந்ததோ அப்படியே இருக்கு ம்படிக்கும் எதிரிமுதலானவர்கள் இனி ஒருக்காலும் உண்டா கி இப்படிக்கெல்லாம் துருகிருதமாய் பிரவேசித்தும் துர்விவ காரம் செய்ய இடம்கொடாமல் எதிரிகளால் செய்யப்பட்ட எதிர்வாதங்களையும் பொய் யென்று தீர்மானிப்பதும் தவிர எதிரிகளுக்குள் 1-வது எதிரியான அக்ஞான பாஷாண்டி என் பவன் நான் என்கிற ஆத்மாவை மறக்கடித்த மோசத்தையும் தன் ஆவரண சக்தியைக் கொண்டு அறிவான விளக்கத்தை திரு டினதையும் தன் விக்ஷேப சக்தியைக் கொண்டு இந்திர கே துவைப்போல் மத்தியில் சிருஷ்டனை செய்ததையும் மோசம் திருட்டு-சிருஷ்டனை- என்கிற 3 குற்றத்திற்காக பரமஹம்ச பரம குருவாகிய கோர்ட்டாரவர்கள் தயவு செய்து அவர்களை சிட்சிக்கும்படி தீர்மானிக்கப் பிரார்த்திக்கிறேன்.

வாதி தரப்பு சாட்சிகள்.

| | |
|---|---|
| விவேகானந்தர் | 1. |
| வைராக்கிய மூர்த்தி | 2. |
| சாத்துவிக சாந்தகுணர்கள். | 3. |
| விஸ்வாசர் | 4. |

பின்னும் இவர்களுக்கு சமானமான அநேக சாட்சிகளு மிருக்கிறது.

வாதியால் தாகல் செய்யப்பட்ட தஸ்தாவேஜுகள்

அத்துவைத தெச உபனிஷத்துக்கள் 1.
வாசிஷ்டம் முதலான சுருதிகள் 2.

இவைகள் தாகல் செய்யப்பட்டிருக்கிறது.

பிரதிவாதி தரப்பு சாட்சிகள்.

புத்திருத்மா 1.
பெண்டீருத்மா. (அதாவது பெண்டாட்டிஆத்மா) 2.

தனுத்மா ... ... 3.
தேகாத்மா ... ... 4.
பிராணாத்மா ... ... 5.
மனோமயாத்மா ... ... 6.
விக்ஞானமயாத்மா ... ... 7.
ஆனந்தமய ஆத்மா ... ... 8.
சூன்னியாத்மா ... ... 9.
சாங்கியாத்மா ... ... 10.
சாலோககாமி ... ... 11.
சாமீபகாமி ... ... 12.
சாருப்ய காமி ... ... 13.
சாயுஜ்ய காமி ... ... 14.

பிரதிவாதி தரப்பு தஸ்தாவேஜிகள்.

இகலோக காமிகளுடைய பெரியோர்கள் முதலானவர்கள் காலத்தில் நடந்திருக்கிற செய்கைப்படி எழுதிவைக்கப்பட்டிருக்கிற ஸ்மிருதிகளாகிற கணக்கு 1.

பரலோக காமிகளைச் சேர்ந்த கர்மகாண்ட வேதமும் ஆகம புராணாதிகளும். 2

இதுகள் தாகல் செய்யப்பட்டிருக்கிறது.

பிரதிவாதிகளுடைய ஸ்டேட்மெண்ட்.

(1) வாதியின் பிறாது பொய்.

(2) விவாதமான நான் என்கிற ஆத்ம சொத்தானது பொதுவாயிருமல் நாங்கள் முதலான ஒவ்வொருவருக்கும் சொந்தமாய் ஒவ்வொருவருடைய ஆளுகையில் நெடுங்காலமாயிருந்து அனுபவித்து வரப்படுகிறது.

(3) இந்த பிறுது வாதி கொண்டுவருவதற்கு அருகனுமல்ல மேலும் இந்த பிறுது கால நிரணய சட்ட தடைக்கு உட்பட்டு மிருக்கிறது.

(4) முதலில் இந்தக் கோர்ட்டாருக்கு இந்த நான் என்கிற ஆத்ம சொத்தை பிடுங்கிக்கொடுக்க அதிகாரமுமில்லை.

(5) விவாத சொத்தை நாங்கள் அக்கிரமமாய் வியாபித்துக் கொள்ளாதினுல் எங்களை தெண்டிக்க (Law) லா இடங்கொடுக்கவுமில்லை.

ஆகையால் கோர்ட்டாரவர்கள் தயவு செய்து விவாத சொத்தை எப்போதும் போலவே எங்கள் ஆளுகையிலேயே இருக்கும் படிக்கும் வாதியின் பிறுதை நிஷ்காமியமான சிலவுடனே தள்ளுபட்டி செய்யும்படிக்கும்எங்களுடைய சகாமியமான சிலவை வாதியால் கிடைக்கும்படிக்கும் தீர்ப்புசெய்ய பிரதிவாதிகள் பிறுர்த்திக்கிறுர்கள்.

இதன் பேரில் கோர்ட்டாறுல் ஏற்படுத்தப்பட்ட (Points) இஷுக்கள்.

1. விவாத நான் என்கிற சொத்தானது ஒருவருக்கும் பாத்தியப்படாமல் பொதுவாயும் அசங்கமாயு மிருக்கிறதா(அல்லது)ஒருவருக்கு பாத்தியப்பட்டு ஒருவர் ஆளுகைக்குள்படக்கூடியதா வென்பது.

2. இந்த பிறுது கொண்டுவருவதற்கு வாதி அருகனு அல்லவா வென்பது.

3. இந்தப்பிறுது கால நிரணய சட்டத்தால் பாதிக்கப்படுமா படாதா வென்பது.

4. இந்தக் கோர்ட்டாருக்கு விவாத சொத்தை எதிரிகளிடமிருந்து திருப்பிக்கொடுக்கக் கூடுமா கூடாதா வென்பது.

5. அப்படி எதிரிகள் விவாத சொத்தை அக்கிரமமாய் பிரதிவாதிகள் வியாபித்திருந்தால் அவர்களை தெண்டிக்க (Law) லா இடம் கொடுக்குமா கொடாதா வென்பது.

அசத்தாகிய லோக விவகாரத்துக்கு வாதி திரப்பு முதலில் விசாரிப்பது வழக்கமாயிருந்தாலும் இந்த விவகாரத்துக்கு தக்க படி இது விலட்சணமாயிருப்பதாலும் கோர்ட்டாரவர்கள் யுக்த மென்று (லா) இருப்பதாலும் முதலில் பிரதிவாதி தரப்பு விசா ரிக்கப்படுகிறது.

1. பிரதிவாதி முதலாவது சாட்சியாகிய புத்திருத்மா வென்பவனை சர்வ வல்லமையுள்ள சத்குரு சன்னதியில் நடத்தப் படுகிற கேசில் பிரமாணம் செய்வித்து விசாரிக்கப்படுகிறான்.

பிரதிவாதி வக்கீல்.

அகம்பிடித்த அஞத்மனுதனால் கேழ்க்கப்படுகிறது.

கே—நீ யார்.

வி.—புத்திருத்மா வென்கிற ராமா சாஸ்திரி.

கே.—பிரகிருத கேசில் நான் என்கிற ஆத்மா யாரென்று தெரியுமா.

வி.—தெரியும்.

கே.—என்னவிதமாகத் தெரியும்.

வி.—நானே புத்திருத்மா.

கே.—நீயே ஆத்மாவென்று சொல்லுகிறாயே என்னகார ணத்தால்.

வி.—நான் எப்போதும் ஆனந்த மயமா யிருப்பதால் நானே ஆத்மா வென்று சொன்னேன்.

கே.—எதினால் நீ ஆனந்த மயமாக யிருக்கிறது.

வி—அடுத்தாத்து சேஷப்பய்யர் அவருக்கு பிள்ளை யில்லா தினால் அவர் சதா துக்கித்துக் கொண்டிருக்கிறார் எனக்கு பிள் ளைகள் யிருப்பதால் ஆனந்தமாக யிருக்கிறேன்.

கே.—பிள்ளையை ஆத்மா வென்பதற்கு சுருதி-யுக்தி-அனு பவம்-என்ன.

வி.—ஆத்மாவை புத்திரனுமாசி, என்ற சுருதி வாக்கியத்தால் அதாவது ஆத்மா புத்திரனுகி ஆத்மாவே புத்திரனுகிறுன் என்ற சுருதியும் ஒரு தீபத்திலிருந்து மற்றொரு தீபத்தை ஏத்தினதுபோல(குணரூபமெல்லாம்என்னைப்போலவே புத்திரனிருக்கிறதே யுக்தியும் பின்னும் எவ்வளவு வியசனம் வந்தபோதிலும் பிள்ளைகளைப்பார்த்த மாத்திரத்தில் அந்த துக்கம்போய் ஆனந்தமடைவதே அனுபவமுமாயிருக்கிறது.

அறிவானந்தருகிய வாதிவக்கில் (cross.) கிராஸ்.

கே.—நீ. நான் என்ற ஆத்மா புத்திரனென்று சொன்னுயே அந்த புத்திரன் நான் என்று வருகிறதா என் என்புத்திரன் என்று வருகிறதா பின்னும் ஆனந்த மென்பதற்கு அடுத்தாத் துக்காரன் சாட்சியென்று சொன்னுயே அவன் பிள்ளை தனக்கில்லை யென்று ஏக தேசத்தில் அவன் விசனப்படுகிறுன் நீ பிள்ளை க்ஷேமமாயிருக்கவேண்டு மென்று சதா விசனத்தை அடைந்து கொண்டிருக்கிரு யல்லவா. பின்னும் புத்திரனே ஆத்மா வென்கிற சுருதியானது பூர்வபட்சமாய் சொன்ன சுருதி யல்லவா. பின்னும் பிள்ளையுடைய குணங்களும் ரூபங்களும்என்னைப்போலவே இருக்குமென்று சொன்னுயே, லோகத்தில் தகப்பன் சுகுணனுயிருந்து பிள்ளை துர்குணனுயும் தகப்பன் துர்குணனுயிருந்து பிள்ளை சுகுணனுயும் தகப்பன் அழகாயிருந்து பிள்ளை அவலட்சணமாயும் தகப்பன் அவலட்சணமாயிருந்து பிள்ளை அழகாயும் இருப்பதும் தவிர புத்திரனைக்கண்டால் சகல துக்கமும் போகிறதென்று சொன்னுயே, உனக்கு பசி வியாதி முதலானது வந்தால் அந்த புத்திரனைப் பார்த்தால் சந்தோஷம் வருமல் அன்னம் ஔஷதம் சாப்பிடுகிறுயா, அல்லது அந்த பிள்ளையைப் பார்த்ததே பசியும் வியாதியையும் போக்கடித்துக் கொள்ளுகிறுயா. அப்படியில்லாம லிருக்கும்போது ஏன் அப்படி சொன்னுப் பின்னும் புத்திரனே ஆத்மாவானுல் புத்திரன் பிறப்பதற்கு முன்னும் புத்திரன் அழிந்த பிற்பாடும் நீ அன்னிய விடங்களுக்குப் போனகாலத்திலும் நீ மாத்திரம் யிருக்கிறுய் அல்லவா ஆத்மாவென்பது ஏகலெட்சணமுள்ளதா யிருக்க வேண்டுமே. ஒருவனுக்கு அநேகம் பிள்ளைகளும் அநேகருண

லெட்சணங்களு மிருப்பதால் இதில் எந்தலெட்சண முள்ள பிள்ளைகள் ஆத்மாவைச் சேர்ந்ததென்று கேழ்க்கும்போது ஆடுதிருடின கள்ளனைப்போல் புத்திரஆத்மா வென்பவன் முழிக்க ஜெனன மரணமாகிற தெண்டனை விதிக்கப்பட்டு அவன் கோர்ட்டாரால் சிட்சிக்கப்பட்டான்.

பிரதிவாதிதரப்பு.

2-வது சாட்சி பெண்டாட்டி ஆத்மாவென்கிற ஸ்திரிகாமி யென்பவனை பிரமாணமூலமாய் விசாரிக்கப்படுகிறது.

பிரதிவாதி வைக்கீல் கேழ்வி.

கே.—நீயார்.

வி.—நான் பெண்டாட்டி ஆத்மாவென்கிற ஸ்திரீகாமி.

கே.—உனக்கு நான் என்கிற ஆத்மாவைத்தெரியுமா? அவர் யார்.

வி.—எனக்கு நன்றாய்த் தெரியும் என் பெண்டாட்டியே ஆத்மா.

கே.—அவள் ஆத்மா வென்பதற்கு சுருதி யுக்தி அனுபவம் என்ன.

வி.—சகல கர்மங்களுக்கும் மம, தர்ம பத்தினியா ஸகா என்கிற வசனப்படி சகல யாக எக்ஞசத்கர்மாதிகளும், பத்னி சகிதம் செய்யவேணு மென்ற வேதவாக்கியமும் இப்போது ஜெகத்தில் யாருடைய வார்த்தைக்குப் பயப்படாமல்போனாலும் ராஜாக்களுடைய ஆக்ஞைக்கு பயப்படுவது போல் பெண்டாட்டி வார்த்தைக்குப் பயப்படுகிறதே யுக்தி. பின்னும் பெண்டாட்டி முகத்தைப் பார்த்தமாத்திரத்தில் சகல விசனமும் நீங்கி ஆனந்தமாய்ப் போவதே அனுபவம்.

வாதிவக்கீல் (cross.) கிராஸ்.

கே.—நீ பெண்டாட்டியே நான் என்று சொல்லுகிறாயா. அல்லது பெண்டாட்டியே ஆத்மா வென்று சொல்லுகிறாயா:— பின்னும் அவளுக்கு நீ பயப்படுவதானது உன்னைக்காட்டிலும் பலத்தினாலா உன்னைக்காட்டிலும் அவளுக்கு அதிக வித்தையினாலா அல்லது சம்பந்தத்தினாலா, இதில் எது யுக்தி பெண்

டாட்டியைக் கண்ட மாத்திரத்தில் சகல துக்கமும் போய்விடு கிறது என்று அநுபவத்தைச் சொன்னாயே. அது எப்படி, அவ ளைக்கண்ட மாத்திரத்தில் காமவிகாரமான துக்கமும் சகல விமோசனமான துக்கமும் வியாதி வருமென்கிற துக்கமும் வஸ் திராபரண முதலியவைகள் வாங்கிக்கொடுத்து அவளைத்திருப்தி பண்ணி வைக்க முடியவில்லையே என்கிற துக்கமும் அவளைப் பிறர் அபகரித்துப் போவாரென்கிற துக்கமும் அவள் விபசாரம் செய்திருப்பாளா செய்யவில்லையா வென்பதை சோதனைசெய்ய முடியாததினால் தீராத சம்சய துக்கமும் இப்படி அனந்த துக்க மும் உண்டு பண்ணுகிற தான ஸ்திரீயை சுகமென்று எப்படிச் சொல்லுகிறாய் இப்படிக்கு வாதி வக்கிலால் கேழ்க்கும்போது பதில்சொல்ல முடியாமல் கொள்ளுக் குத்தின உலக்கைபோல் நின்ற மாத்திரத்தில் இவனையும் கோர்ட்டாரவர்கள் ஜெனனமர ணமாகிற தெண்டனையும் விதித்தார்கள்.

மூன்றாவது சாட்சி தனாத்மா என்கிற தனகாமியை பிர மாணமூலமாய் விசாரிக்கப்படுகிறது.

பிரதிவாதிகளின் வக்கீல் கேழ்வி.

கே.—நீ யார்

வி.—நான் உலகத்தில் ரொம்பவும் பெரியமனுஷியன்

கே—என்ன காரணத்தினால்.

வி—என்கையிலிருக்கிற பணத்தினால் தான்.

கே.—நான் என்கிற ஆத்மா யார் தெரியுமா.

வி.—தெரியும் என் பணம்தான் நான் என்ற ஆத்மா.

கே.—அதற்கு சுருதி-யுக்தி-அநுபவம்-என்ன.

வி.—ஙீர்தன புருஷ சஷப்ப சமானஹா: இன்னம் சர்வே ஜெனுகாஞ்சனமயம் ஜெகது இதுவே சுருதி அதாவது பணமில் லாதவன் பிணமென்று சொல்லி சர்வ ஜென்ங்களும் ஏழைகளா கிய ஜெனங்களை அவமதிக்கிறார்கள். என்னைக்கண்டு எல்லா ஜெனங்களும் பயப்பட்டு மரியாதை செய்கிறார்களே அதுவேயுக்தி என்னுடைய கையிலிருக்கிற பணத்தை சதா பார்த்துக்கொண் டே ஆனந்த மடைவதே அநுபவம்.

## வாதி வக்கீல் கிராஸ் Cross.

கே.—பணமே நான் என்று சொல்லுகிறாயா, அல்லது என்னுடைய பணமே நான் என்று சொல்லுகிறாயா பின்னும் பணமில்லாதவன் சஷ்ப்பத்துக்கு சமானமென்ற சுருதியானது மணமுள்ளவனுக்கு தன்னுடைய பெற்ற பிள்ளையிடத்தில்க்கூட பயமுண்டாகிறதே அதினால் அந்த சுருதி வசனம் அடிப்பட்டுப் போய் விட்டதல்லவா பின்னும் எல்லாரும் உன்னைக்கண்டு மரியாதை செய்வதாகச் சொன்ன யுக்தியானது உன் பணத்தை பிடுங்கிக் கொள்வதற்காக அல்லவா.

அனுபோகத்தில் பணமில்லாதவன் நிறப்பயனும் காட்டிலேயோ கரையிலேயோ எவ்விடத்திலும் சுகமாய் சஞ்சரித்து வருகிறானே நீயோ பணத்தை புதைத்து வைத்தால் பூதம் காத்துப் போய்விடுமோ வென்றும் கடன் கொடுத்தால் கடன்காறன் மோசம் பண்ணிப் போடுவானோவென்றும் சுபமாவைத்திருந்தால் கள்ளன் திருடன் கொண்டுபோவானோ வென்றும் அப்படி கள்ளன் கொண்டுபோகும் காலத்தில் நீ ஆசையினால் கொடுக்கமாட்டேனென்றாவது விடமாட்டேனென்றாவது சொன்னால் உன்பிராணனுக்கே அபாயம் வருகிறதாயுள்ள பணத்தை நீ என்னமாய் ஆனந்த அனுபவமென்று சொல்லுகிறாய் பின்னும் அந்தப்பணத்தினால் அநேகம்பேர்கள் ராகத்துவேஷாதி கெர்வங்களற்ற பெரியவாளை அவமானம் பண்ணுகிறதும் கூத்தாடி குரங்கோட்டி முதலானவர்களுக்கு கொடுத்து ருகத்துவேஷங்களை கெர்வங்கள் உண்டுபண்ணுகிறதும் இன்னம் அநேக அனர்த்தங்களை பண்ணுவது அனுபவசித்தமா யிருக்கும்போது ஆனந்தமான ஆத்மாவாக எப்படியாகும் சொல்லு இப்படி கேழ்க்கும்போது இவனும் முந்தினவன் போலவே முழிக்க கோர்ட்டாறவர்கள் இவனையும் ஜெனனமரணமாகிற சிட்சையை விதித்தார்கள்.

நான்காவது சாட்சி. தேகாத்துமா வென்கிர தேககாமியை பிரமாணத்தின்பேரில் விசாரிக்கப்படுகிறது.

## பிரதிவாதி வக்கீல் கேழ்வி.

கே.—நீ யார்.

வி.—நான் ராமாசாஸ்திரி பிள்ளை என்பேர் தேககாமி.

கே.—அவனுக்கு நீ என்னவிதமாய் பிள்ளை.

வி.—நான் அவன் பிந்துவுக்குப் பிறந்ததால் நான் அவனுக்கு பிள்ளையானேன்

கே.—உனக்கு நானென்கிற ஆத்மாவைத் தெரியுமா அவர் யார்,

வி.—இந்த என்னுடைய தேகமே நான் என்கிற ஆத்மா.

கே.—அதற்கு, சுருதி, யுக்தி, அனுபவம், என்ன

வி.—தேகமே ஆத்மாவென்கிற சுருதியும், தேகமுள்ளகாலத்தில் சகல போகபாக்கியங்களை அனுபவிப்பதாலும் தேகம் போனால் போகானுபவம் இல்லாமலும் இருக்கிறதே யுக்தி. இந்த ஜெகத்தில் எது நன்றாயிருந்தாலும் ஆனந்தம் வராமல் தேகமாத்திரம் ஆரோக்கியமாயும் அழகாயுமிருந்தால் அதினால் ஆனந்த முண்டாவதே அனுபவம்.

வாதி வக்கீல் Cross.—கிராஸ்

கே.—நீ சொன்னதானது தேகமே ஆத்மாவானால் என்னுடைய தேகமென்று சொல்லக்கூடாதே மேலும் ஆத்மா ஒருவனுக்கு பிள்ளையாய் இருந்திருக்கக் கூடாதே பின்னும் உன் பிதாவின் பிந்துவுக்கு நீ பிறந்ததாய்ச் சொல்லும்போது நீ ஜெடமாயிருக்கவேண்டுமே அப்படியில்லாமல் நீ சித்தாயிருப்பதற்கு காரணமென்ன.

பின்னும் உன்பாட்டன் பிந்துவுக்கு உன் தகப்பன் பிறந்து அவன் பிந்துவுக்கு நீ பிறந்ததால் ஜெடமாய் விட்டாயேயென்று கேழ்க்கும்போது திரும்பித் திரும்பிப் பார்த்து மொரண்டு மொரண்டு முழித்தவனை வாதிவக்கீல் பின்னும்நீ என்ன ஜாதி யென்று கேட்டார்.

வி.—நான் பிராம்மணனென்றும் எப்படி பிராம்மணனென்றால் என்பாட்டன் பிராமணனாயும் அவன் பிந்துவுக்கு பிறந்த என் தகப்பன் பிருமணனாயும் நான் என்தகப்பன் வயிற்றில்பிறந்ததால் நானும் பிரும்மணனானேன்.

கே.—அப்படி நீ பிரும்மணனுனல் உன்னுடைய தகப்பன் சரீரத்திலுண்டான மலமூத்திரம் சுக்லம் ரத்தம் ரோமம் முதலானதுகளெல்லாம் பிரும்மணனுகவே யிருக்கவேண்டும். அப்படிக்கு காணுத்தினுல் நீ எப்படி பிராம்மணன் ஆனைப் ஆனுலும் உன் தொழில் என்ன.

வி.—என் தொழிலானது பஞ்சவிஷயத்தை அதாவது பிரதிவி அப்பு, தேயு, வாயு, ஆகாசமாகிய பஞ்சபூதங்களை அனுபவிப்பதே ஜீவனம்.

கே.—இந்த பஞ்சவிஷயம் யாருல் அனுபவிக்கப்படுகிறது.

வி.—தேகரூபியான என்னுல்தான் அனுபவிக்கப்படுகிறது.

கே.—மரணத்திலும் சுஷுப்தியிலும் அதாவது நித்திரையிலும் இந்த திரேகரூபியான உன்னுல் எந்த விஷயம் அனுபவிக்கப்படுகிறதும் தவிற நீ ஜெனனமாவதற்கு முன்னும் மரணமாவதற்குப் பின்னும் நீ யிருக்கிருயா இல்லையா.

வி.—அதொன்றும் எனக்குத்தெரியாது.

கே.—நல்லது இத்தேகம் இருக்கும்போதே சுஷுப்தியவஸ்தையில் தேகம் பிணமாய்க் கிடக்குங்காலத்தில் நீ போகிறதும் வருகிறதும் முதலிய விவகாரங்களைச் செய்தையா இல்லையா பின்னும் தேகம் அறிவாயிருந்தால் உன் தேகத்திலிருந்து வெளிப்படுகிற மயிர்முதல் மலம்வரையிலுள்ள வஸ்துக்கள் எல்லாம் அறிவாயிருக்கவேண்டுமே அப்படியும் காணுமே நீ சொல்லிய தேகமானது ஆனந்தமானுல் தேகத்தில் போடப்பட்ட நல்ல அன்னம் ஜெலம் வஸ்திரம் சந்தனம் புஷ்பமாலை முதலான வஸ்துக்கள் இவைகளும் ஆனந்தமயமாகவே யிருக்கவேணுமல்லவா. அப்படிக்கில்லாமல் அன்னமானது மலமாயும் ஜெலமானது மூத்திரமாயும் வஸ்திரம் அழுக்கடைந்தும் புஷ்பமாலை முதலான வஸ்துக்கள் நாற்றமெடுத்தும் அவைகளுக்கு முன்னிருந்த சுவரூபம் கெட்டு நாசிப்போகிறதே. பின்னும் இந்த தேகத்தில் சிரசுமுதல் பாதம்வரையிலுள்ள அவயவங்களில் சுகமிருக்கிறதா பின்னும் அந்தத்தேகத்திலிருக்கிற ஒரு

மயிரை யெடுத்து அன்னம் முதலான பதார்த்தங்களில் போட்டால் சாப்பிட யோக்கியப்படுகிறதா அல்லது அந்தமயிரை அக்கினி முதலானவைகளில் எரித்துப் பாகம்பண்ணினால் அப்போதாவது வாசனையிருக்கிறதா தவிரவும் காதிலிருக்கிற குரும்பை, கண் பூளை, கண்ணீர், மூக்குச்சளி, வாய் எச்சல் கோழை, வாதநீர், பித்தநீர், வேர்வை, மலம், மூத்திரம், உதிரம், சீ, நரம்பு, எலும்பு, தோல், நாக்குப்பூச்சி முதலான இவ்வளவில் சரீரத்துக்குள்ளேயாவது வெளியிலேயாவது ஏதேனும் கடுகத்தனை வாசனை முதலான சுகமிருக்கிறதா அப்படிக்கில்லாதிருக்க நீ இந்த தேகமே ஆனந்தமான ஆத்மாவென்று எவ்விதமாய்ச் சொன்னாய் சொல்லு இப்படிக்கெல்லாம் சொன்னமாத்திரத்தில் ஒரு கேழ்விக்கும் இந்த தேகாத்மாவானவன் ஜெவாப் சொல்லமுடியாமல் முந்தினவனைப் போலவே மிரண்டு மிரண்டு முழிக்க உடனே கோர்ட்டாரவர்கள் இவனையும் ஜெனனமரணமாகிற விலங்கில் போடும்படி உத்திரவு செய்தார்கள்.

5-வது சாட்சி பிராணாத்மாவை பிரமாணமூலமாய் விசாரிக்கப்படுகிறது.

பிரதிவாதி வக்கீல் கேழ்வி.

கே.—நீ யார்.

வி.—நான் பிராணாத்மா.

கே.—நான் என்கிற ஆத்மா யார் தெரியுமா.

வி.—பிராணன் என்ற நானே ஆத்மா.

கே.—பிராணனே ஆத்மா வென்பதற்கு, சுருதி, யுக்தி, அனுபவம் என்ன.

வி.—அன்னியந்தராத்மா பிராணமய: என்கிற சுருதியும் சகலமும் லயித்த சுழுப்தியில் (அதாவது) நித்திரையில் நான்மாத்திரம் லயிக்காமலிருப்பதே யுக்தியும் நான்பேசினேன் நான் செய்தேன் நான் போகிறேன். நான் மலமூத்திர விஸர்ச்சனம் செய்கிறேன். நான் ஆனந்தமாய் ரமித்தேன் நான் பசிதாகமாக

யிருக்கிறேன் நான் பலவானாக யிருக்கிறேன் அல்லது பலஹீனனாக யிருக்கிறேன் நான் பிள்ளைகளைப் பெற்றேன் நான் வெகு பணங்களை சம்பாதித்தேன் நான் வெகு குடும்பங்களை ரெட்சிக்கிறேன் நான் நன்றாயிருந்து விளங்குகிறேன். என்று காணப்படுகிற பிரத்தியட்சமே அனுபவம்.

வாதி வக்கீல் Cross.—கிராஸ்

நீயே நான் என்கிற ஆத்மாவானால் நான் பிராணன் என்றே யிருக்கவேண்டுமே யல்லாமல் என்னுடைய பிராணனென்றும் சொல்லக்கூடாதே. வாக்குமுதலான கர்மேந்திரியங்களும் என்னுடையதென்று சொல்லக்கூடாதே அதாவது. பின்னும் நீ அறிவாயிருந்தால் சுழுப்தி முதலான நித்திராவஸ்தையில் நீ தோணிக்கொண்டிருக்கிற நாசிகாது துவாரத்திலிருக்கிற ஆபரணத்தை ஒருவன் கழட்டினால் அந்தக்களவை நீ அறிய சக்தியில்லாமலும் பின்னும கழுத்தை வெட்டவந்தால் கையைபிடிக்க சக்தியில்லாமலும் பின்னும் இது இஷ்டம் அநிஷ்டமென்றும் அறிய அறிவில்லாமலும் வெளியில் அடிக்கிற காத்துப்போல் உள்ளே அடிக்கிற காத்தாக நீ யிருப்பதாலும் க்ஷணே க்ஷணே விகாரத்தை நீ உடைத்தாயிருப்பதாலும் தன்னையும் அன்னியத்தையும் அறிந்துகொள்ள உனக்கு யோக்கியதை இல்லாமலிருப்பதாலும் நீ எப்படி நான் என்கிற ஆத்மா ஆவாய் என்றுகேட்ட கேழ்விக்கு ஊமையனைப்போல் பெப்பேயென்று விழிக்க கோட்டாறவர்கள்முன் சாட்சிகளைப்போல் இவனையும் தெண்டனை விதித்தார்கள்.

ஆறாவது சாட்சியாகிய மனோமயாத்மாவை பிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்படுகிறது.

பிரதிவாதி வக்கீல் கேழ்வி

கே.—நீ யார்.

வி—நான் மனோமயன்.

கே.—உனக்கு நான் என்கிற ஆத்மாவைத் தெரியுமா அவர் யார்.

வி.—தெரியும் மனோமயனான நானே ஆத்மா.

கே.—அதற்கு சுருதி யுக்தி அனுபவம் என்ன.

வி.—அன்னியோநதரூத்மா மனோமயா: என்கிற சுருதியும் ரூஜாவைப்போல் நானில்லாத சுஷுப்தியில் ஜெகம் தோன்றா மலும் நானுள்ள ஜாக்கிர தாவஸ்தையிலும் சுவப்னுவஸ்தையி லும் ஜெகம் தோற்றுகிறதே யுக்தி, நான்ராகி, நான்துவேஷி, நான் காமி, நான் குரோதி, நான் லோபி, நான்மோகி, நான்மதன், நான் மாச்சரியன், நான் ஈரிஷை, நான் அசூயை, நான் டம்பன், நான் தர்ப்பன் நான் கேட்டேன் நான் தொட்டேன் பார்த்தேன் தின் றேன் வாசனையறிந்தேன் என்வாக்கு என்மாடு இப்படிக்கெல் லாம் காணப்படுகிறதே அனுபவம்.

வாதி வக்கீல் Cross.—கிராஸ்

கே.—நீயே ஆத்மாவானால் என்னுடைய மனமென்று சொல் லப்படக்கூடாதே நல்லதிருக்கட்டும் நீயாருடைய பிள்ளை.

வி.—நான் நட்டுவஜாதியானதால் என் தகப்பன் பேர் தெரி யாது.

கே.—நல்லது உன்னைப்பெற்ற தாய் பேருவது என்ன.

வி.—ஜெகன்மோகன கருப்பாயி என்ற அவித்தை (மாய்கை)

கே. உன்னுடைய வளர்ப்பு தாய்பெய ரென்ன:

வி. மலைபோலுள்ள ஆனையை மறைத்து மோசம் பண்ணு கிற ஆவரணசக்தி (மாயை) என்னை வளர்த்ததாய்.

கே. உன் ஜீவனமென்ன ?

வி. சுரோத்ருதி இந்திரியங்களாகிற தாசிகளை ஆட்டிவைக் கிறதே எனக்கு ஜீவனம்.

கே. இந்த நான் என்கிற சொத்து உனக்கு எவ்விதமாய்க் கிடைத்தது.

வி. என் தாயாருகிய ஜெகன்மோகன கருப்பாயி என்ற அவித்தை(மாயை) மூலமாய் எனக்குக் கிடைத்தது.

கே. அவளுக்கு என்ன விதமாய்க் கிடைத்தது சொல்லு.

வி. அவள் தேவரடியாள் ஆனதால் அவளுக்கு கிடைத்த விதத்தை கோர்ட்டாறே தெரிந்துகொள்ள வேண்டியது.

கே. இப்போது இந்த சொத்து யாருடைய ஆளுகையி லிருக்கிறது.

வி. எங்களுடைய ஆளுகையிலேயே இருக்கிறது இப்படிக்கு சொல்லிவந்த மாத்திரத்தில் வாதிவக்கீல் கோர்ட்டாரவர்களைப்பார்த்து தெரிவித்துக்கொள்ளுகிறார் அதாவது இந்த சாட்சியானவன் கற்பனைக் கெல்லாம் காரணனாயிருக்கிறவன் ஆனதால் இவனை இன்னம் சிலகேழ்வை கேழ்க்கும்படி உத்திரவாக வேண்டியதாய் கேட்டுக்கொண்டதின் பேரில் கோர்ட்டாரவர்களும் இப்படிக்கு பொய் உண்டுபண்ணுகிறவனை விசாரணை செய்து தெண்டிக்க வேண்டியதே நம்முடைய கடமையாக யிருப்பதால் இந்த போக்கிரியை உனக்கு வேண்டியமட்டும் கேழ்ப்பதில் யாதொரு ஆக்ஷேபமு மில்லை யென்று உத்திரவு கொடுத்தார்.

திரும்பவும் மனோமயனைப் பாாத்து வாதிவக்கீல் கேழ்க்கிறார்

கே. உன்னுடைய சுரூபமானது சித்தா அல்லது ஜெடமா சொல்லு.

வி. என்னுடைய சுரூபம் சித்து.

கே. சித்தாயிருந்தால் அதற்கு விகாரமேது.

வி. இல்லை இல்லை நான் சொன்னது தவறுதல் ஜெடம் தான் நான்.

கே. நீ ஜெடமானால் மண்ணைப்போல் அசைவற்று இருக்க வேண்டுமே. நீ அசைசிறபடியால் ஏன் அப்படிச் சொல்லுகிறாய்.

வி. அய்யா அய்யா நான் சொன்னதெல்லாம் தவருதல். நானே சித்தும் ஜெடமும் சேர்ந்தவன் நானே

கே. அப்படிக்கு நீ சித்தும் ஜடமும் சேர்ந்தவன் ஆனால் இருட்டையும் வெளிச்சத்தையும் ஒன்றாய் சேர்க்கமுடியுமா சேர்க்க முடியாதல்லவா. அப்படி சேர்க்கமுடியுமென்ற ஒரு பதார்த்தத்தை ரூபித்துக் காட்டு. நல்லதிருக்கட்டும் பின்னும் நீ சதா செய்கிற தொழில் என்ன.

வி. நான எப்பவும் சப்தாதி விஷயங்களை நினைக்கிறதே என்னுடைய வேலை

கே. அந்த சப்தாதிகளை நீயா அல்லது அதற்கு நீ வேறு

வி. அந்த சப்தாதியே நான்

கே. அந்த சப்தாதியே நீயென்றால் அந்தசப்தாதி சூன்னியமாய் அறிவதுபோல நீயும் அப்படியே போகவேண்டுமல்லவா பின்னும் அந்த சப்தம் ஆகாசத்தின் குணமாயும் ஸபரிச வாயுவின் குணமாயும் ரூபம் அல்லது ரூபமான து அக்னியின் குணமாயும் ரெஜஸம் ஜெலத்தின் குணமாயும் கெந்தம பூமியின் குணமாயுமிருக்கிற பூதத்தின் அபசமான குணம் உனக்கு எப்படி. சுவரூபமாகும் பின்னும் அவைகள் ஜெடமாச்சுதே அதற்கு அறிய சக்தியேது சொல்லு.

வி. அந்த குணங்கள் நான் இல்லை அததுகளை. அறிகிறதே தவிர நானென்று சொன்னது அறியாது அறிவானது ஆத்மாவை சேர்ந்ததே யல்லாமல் எனக்கு அறிய அறிவேது எனக்கு அறிவில்லாமல் போனாலும் ஆத்மாவிஷயத்தை அறிவதற்கு நான் சாதகமாயிருக்கிறேன் தவிரவும் அநதநத இந்திரியங்களும் பிராணவாயுவும் அறிவதற்கு சாதகனேயல்லாமல் கோதனம்போலே சகல இந்திரியங்களுக்கும் நானே மேல் விசாரணையாயிருக்கிறேன்.

கே! அப்படியானால் ஒன்னை மேல்விசாரணைக்கி நேமித்து வைத்ததுயார்.

வி. என்னை ஒருவரும் நேமித்து வைக்கவில்லை நான் மேல் விசாரணையாக இருப்பது வழக்கம்

கே. உன்னை ஒருவரும் நேமிக்காமலும் ஒரு ஆதரவுமில்லாமலும் ஒருவன் சொத்தை மைத்தொருவன் திருடினதைக்

கண்டுபிடித்து ஏண்டா திருடினுயென்று கேட்டால் எனக்கு எப்போதுமே திருடுவது வழக்கமென்று சொன்னல் புதிதாய் ஒரு தடவை திருடுவதைகாட்டிலும் பழயநாள் கள்ளனுக்கு பெலமான தண்டனையை கொடுப்பதுபோல் இவனுக்கு பெலமான தண்டனையை கோறட்டாரவர்கள் கொடுக்கவேண்டியது இன்னும் நீ மேல்விசாரணையாயிருந்து செய்கிற தொழில்தான் என்ன சொல்லு.

வி. என் ஸ்திரீ என் பிள்ளை என் வீடு என் மாடு இப்படிக்கி இந்திரியங்களுடனும் விஷயங்களுடனும் சேர்ந்துகொண்டுமே சேறுமலிருந்து நினைப்பதே என் தொழில்.

கே. நீ என் பெண்டாட்டி யென்பது சொல்லும்போது தங்கத்தை கொஞ்சம வெட்டி யெடுத்தால் தங்கமாகவே வருவதுபோல் பெண்டாட்டியையும் கொஞ்சம் கொஞ்சம் வெட்டி யெடுத்தால் பெண்டாட்டியாய் தானே வரவேண்டுமெல்லாமல் ரத்தம மாமசம எப்படி வரக்கூடும் பின்னும் என் பெண்டாட்டி என்று சொல்லுகிறுயே அது ஸ்தூல பஞ்சபூதததிலிருந்து உண்டாயிருக்கிறது. நீயோ சரீரத்துக்குள்ளே இருக்கிறாய் அந்த விஷயஙகளோ சரீரத்துக்கு வெளியிலிருக்கிறது உள்ளே இருக்கிற உனக்கும வெளியிலிருககிற அந்த விஷயங்களுக்கும் என்னமாய் சம்மந்தம் வந்தது அதுகளாய் வந்து உன்னை என்னுதென்று சொல்லச்சொன்னதா, அதுகள் ஜடமாச்சுதே நீயாகவே என்னுதென்று சொல்லுகிறுயா அப்படி சொல்லும்பக்ஷத்தில் அன்னியனுடைய சொத்தை என்னுதென்று சொல்லுகிறவனுககு தெண்டனை கிடைக்குமா கிடையாதா சொல்லு, இதுபோலவே சகலவிஷயங்களையும என்னுதென்று சொல்லுவதற்கு இயாதொரு ஆதாரவும காணப்படவில்லையே இவ்விதமாகவே நீசத்தா அசத்தா, நீ துககியா ஆனந்தமா நீ விகாரியா நிர்விகாரியா யென்று இப்படி அனேகம் கேழ்விபோடவே. பரக்க பரக்க முழிக்க உடனே கோறட்டார்பார்த்து இவன் பெரிய திருடனுயிருப்பதால் இவனுக்கு ஸ்வரூபானுசந்தானமாகிற வேலையும் விஷயவைராக்கியமாகிற விலங்குடனும் கடினமான தண்டனை செய்யும்படி உத்திரவு செய்தார்.

7-வது சாக்ஷியாகிய விக்ஞானமய ஆத்மாவை பிரமாணத்தின் மூலமாய் விசாரிக்கப்படுகிறது.

விஞ்ஞானமய ஆத்மா ஆஜறானவுடனே பிரதிவாதி வக்கீல் கோறட்டாறவர்களைபார்த்து தெரியப்படுத்திகொள்ளுகிறார். இதோ வந்திருக்கிற சாக்ஷி எங்களுக்குள்ளே முக்கியருயும் றெம்பகெண்ணியமுள்ளவருயுமிருப்பதால் இவருக்கு மரியாதைகொடுத்து விசாரிக்கவேணுமென்று தெரியப்படுத்தி கொண்டபிரகாரம் கோரட்டாரும் ஹிருதயமாகிற குரிச்சிகொடுக்கும்படி உத்திரவுகொடுத்தார்.

பிரதிவாதி வக்கீல் கேள்வி.

உம்முடைய பேரென்ன

வி.—நான் விக்ஞானமயன்.

கே.—உம்முடைய தகப்பன் பேரென்ன.

வி.—தகப்பன்பேர் மகா அகங்காரரிஷி.

கே.—உமக்கு நான்யெங்குற ஆத்மாயார் தெரியுமா.

வி. நான் யென்குற ஆத்மா நான்தான்.

கே.—தாமே ஆத்மாயென்பதற்கு சுருதியுக்தி அனுபவமென்ன.

வி.—மனோமயனுக்கும் உள்ளாக அன்னியோந்தருத்மா விக்ஞானமயனெங்குற சுருதியும் றாஜாவின் ஆக்ஞைப்படி ஜனங்கள நடப்பதுபோல் சகல இந்திரியங்களும் என் அனுமதிப்படி நடந்துவருவதேயுக்த்தியும் இவடமிருக்கும் இத்தனை பேர்களுக்கும் குரிச்சி கொடாமல் எனக்கு ஹிருதயமா குறகுரிச்சி கொடுத்து உட்காறவைத்திருப்பதே அனுபவம்.

வாதி வைக்கில் கோறட்டாறைபார்த்து இந்த சாக்ஷியை விசேஷமாக விசாரிக்கும்படி உத்திரவாகவேணும் ஏனென்றால் இவர்களுக்குள்ளே முக்கிய சாக்ஷியென்று அவர்களே சொல்வதால் விசாரிக்கவேணுமாய் கேட்டுக்கொள்குறேன் அப்படியே கேழ்க்கலாமென்று உத்திரவு செய்தார்

கே.—நீ யார்.

வி.—நான் விக்ஞானமயன்.

கே.—நீ யாருடையபிள்ளை யென்று முன் சொன்னது

வி.—மகா அகங்கார ரிஷியின் குமாரன்.

கே.—அந்த மகா அகங்கார ரிஷியென்பவன் யாருடைய பிள்ளை.

வி.—ரிஷி மூலம் நதிமூலம் விசாரிக்க கூடாது.

கே.—அதிருக்கட்டும் உன் தாயின் பேரென்ன.

வி.—என் தாயார் பேர் அவிவேகி.

கே.—நீ யெப்பவும் என்ன தொழில் செய்வது.

வி.—நான் எப்பவும் பார்க்கிறது கேழ்க்கிறது ஸ்பரிசிக்கிறது ருசி அறிகிறது பேசுகிறது முதலான தொழில் எனக்கு.

கே.—உன்னுடைய கண் முதலான இந்திரியங்கள் உளனத்தை அடையுங்காலத்தில் உன்னுலிந்த தொழில் செய்ய முடியுமா சொல்லு.

வி.—அப்படியானல் என்னல் செய்யமுடியாது.

கே.—ஏன் 'இந்த தொழில் நான் செய்வதாக சொன்னய் நீயே நான் யென்ற சொல்லுக்கு அர்த்தமானல் என் வீடு யென்பது போல் என் புத்தியென்று சொல்லுகிருயே எப்படி சொல்லலாம் இப்படிக்கி கேழ்க்கும்போது கோபமாகி பதில் சொல்லுருன்.

வி.—என்னை இது வரையிலும் நீ யாரென்று கேட்டது இந்த ஜகத்தில் கிடையாது யென்குட்டை குலைத்து யென்கேணியத்தையும் கெடுக்கிறவனுயிருக்கிருய் நான் யெப்பேர்ப்பட்டவன் தெரியுமா நானே சம்பன்னன் நானேவித்துவான் கர்மகாண்டத்தில் சொன்னபிரகாரம் பவுண்டிரீகம் வரையிலும் நான் செய்த எக்ஞம் பாக்கியில்லை என்னுடைய யோக்கியதையைப் பற்றி என்னைப் போலொத்தவர்களுக்கு தெரியுமே தவிர இந்த சபையிலுள்ள எதிரிகள் முதலானபேர்களுக்கு தெரியமாட்டாது நான் எந்த விடத்தில் போனலும் எனக்கே அக்கிரதாம் பூலம் கொடுக்கவேண்டும் என்னை கண்ட மாத்திரத்தில் சகலத்திருளும் மரியாதை பண்ணவேண்டும் அப்படி செய்யாமலும் போனல்உடனேகோபித்து சாபம்கொடுத்துவிடுவேன் மேலும் நான் ஏகசந்த

கிறுகிறானே ஸறுவக்ஞன் எனக்குமேல் ஈசுவரனுங்கிடையாது. குருவுங்கிடையாது. எனக்கு இவ்வளவு யோக்கியதையும் ஸ்வயமாகவே உண்டாயிருக்கிறது நான் யெவ்வளவோ ஸோமயாகம் பண்ணியிருக்கிறேன் நானிந்த புண்ணியகருமத்தால் கொஞ்சகாலத்தக்கு பிற்பாடும் இகத்திலுள்ள சுகங்களை அனுபவித்து அதற்குமேல் திவ்விய விமானத்திலேரிக்கொண்டுதேவ லோகத்துக்கும்போய் இந்திருதிசகல தேவதைகளும் என்காலில் விழுந்து என்னை பூஜிக்கும் படியாகச்செய்து அவ்வளவு தேவதைகளுக்கும் உன்னதஸ்தானத்திருந்து தேவாமிருதத்தை குடம் குடமாக சாப்பிட்டு ரம்பை முதலான சகல அப்சரஸ்திரிகளேயும் இப்போது இவடத்தில் என் பெண்டாட்டியை எப்படி அதிகாரம் பண்ணி அனுபவிக்கிரேனே அப்படியே அவ்விடத்திலும் அந்த ஸ்திரிகளையும் அனுபவிக்கபோகிறேன் இதற்குமுன்னும் கணக்கில்லாத சுகத்தை அனுபவித்திருக்கிறேன் இனி மேலும் இப்படியே கருமங்களைச்செய்து பின்னையும் அதிக சுகத்தை அனுபவிக்கபோகுறேனென்றும் இப்படி அனந்தவிதமான தன்னுடையபிரதாபத்தை ஓயாமல் வர்ணிக்கும்போது இதை கேட்ட கோரட்டாருக்கு இவன் பேரில் றொம்ப ஆயாசமுண்டாய் அவனுக்கு உடனே நிக்கிரக விலங்குபோடும்படிசெய்து அவனுக்கு கொடுத்த மரியாதையையும் நிறுத்தி வாதி வைக்கிலே பார்த்து இந்த மூடனை மரியாதையைவிட்டு ஏகவசனமாய் கேழ்க்கும்படிக்கும் சொல்லிய இந்தகோரட்டார் முன்பாகவே இவ்வளவு அலக்ஷியமாய் பேசுவதால் இவன் எவ்விடத்திலும் அடங்காமலிருப்பவனென்பதற்க்கு கேழ்க்கவேண்டியதில்லை என்றும் இவனை மற்ற சாக்ஷிகள் ஒப்பந்தம் தெண்டியாமல் இப்பவே கர்த்திருத்துவஞைசமாகிற தூக்கில் போடவேணுமென்று தோணுகிறது ஆனாலும் விசாரணைசெய்து இவன்பேரில் குற்றத்தை நன்றாய் நிரூபித்தே தெண்டிக்கிறோமென்று கோரட்டார் நேருகவே இவனை கேழ்க்கிறார்,

கே:—அடே மூடா நீ கேட்டகேழ்விக்கி சரியான பதில் சொல்லாமல் ஏன் கோபப்படுகிறாய் இதுவரையில் இப்படி உன் பேரில் பிறாது வந்து இந்தக்கோர்ட்டார் முன்பாக உன்னையா

ரும் விசாரணைசெய்யாத்தினால் உனக்கு இவ்வளவு அகம்பாவம் ஏறிவிட்டது உன்னுடைய குட்டு இப்போது தான் வெளியாகிறது. நீ தானே குரங்கு தன் குண்டியை தான் முத்தமிட்டுக் கொள்ளுவது போல் நீயே நான் பெரியவனென்று சொல்லிக் கொள்ளுகிறாய் உன்வாக்குமூலத்தினாலேயே நீ மகாகுரோதியென்றும் துர்குணசிரோமணியென்றும் வெளியாகிறது நீ கருமங்களைச் செய்வதற்காக ஈசுவரன் உனக்கு ஸ்வர்க்காதிபோகங்களான பலன்களை கொடுத்திருக்க அவனைமறந்து ஈசுவரன் குரு ஒன்றுமில்லை யென்றுசொன்னாய் அது எப்படியென்றால் ஒரு எஜமானிடத்தில் கூலி பேசிகொண்டு ஒருவேலையும் அவனுக்கு செய்யாமல் காட்டிலே போய் ஒரு சுவர் வைத்தால் அந்தகர்மம் அவனுக்கு என்னபலனைகொடுக்கும் அப்படி ஈஸ்வரன் அன்னியில் உனக்கு ஸ்வர்க்காதிபலன் எப்படிகிடைக்கும் பின்னும் குரு இல்லாமலே வித்தையெல்லாம் வந்துவிட்டதாய் சொல்லுகிறாயே அது எப்படிப்போலிருக்கிறதென்றால் ஒரு ஸ்திரியானவள் பர்த்தா இல்லாமலே 10 பிள்ளையைபெற்றேனென்றால் அவளுக்கு விபசாரியென்றபேரேயல்லாமல் யோக்கியஸ்திரியென்கிற பேர்வரமாட்டாது. நீ கருமமாகிற வேலையைச்செய்து ஸ்வர்க்கமாகிற கூலியைபெற்றுக்கொண்டு மறுபடியும் அவர்களால் தள்ளப்பட்டு மறுபடியும் பூமியில்வந்து கருமத்தையே செய்துகொண்டுவருகிறது. குழந்தைகள் விளையாடப்போய் பக்ஷணம் ஆய்போனால் பெரியகுழந்தைகள் ஓடித்துவிட்டு அத்துக்குவந்து அம்மாவிடத்தில் பக்ஷணம் வாங்கிக்கொண்டு திரும்ப விளையாட ஓடுகிற குழந்தைக்கு சமானமாயிருக்கிறாய். பின்னும் அனேகம் கோடிஜீவர்கள் இப்படி அலைந்துகொண்டிருக்கிறார்கள் அதில் நீ ஒருவனே தவிர அதிசயமில்லை மேலும் நான் கர்த்தாவென்று சொல்லும்போது அந்த ஜடமான கர்த்திருத்துவம் அந்தக்கரணத்தைச் சேர்ந்ததாயிருக்கிறது. அதிலிருக்கிற ஜசவு பிராணனைச்சேர்ந்த அறிவு ஆத்துமாவை சேர்ந்ததாயிருக்கிறது. இப்படி பார்க்கும்போது முதலில் உன் ஸ்வரூபமே பொய்யாகபோகிறது பின்னும் முண்டையுமில்லாமல் சுமங்கலியுமில்லாமலிருப்பதுபோல நீ சத்துமல்லாமல் ஜடமுமல்லாமல் ஆர

ண்டும் கெட்டவனாய் தூலசரீரத்தையும் ஷை சரீரத்தில் மாயையினால்விகல்பிக்கப்பட்ட வர்ணாசிரமத்தையும் சரீரத்தினுடைய ஷட்பாகத்தின் விகாரத்தையும் இந்திரியங்களுடைய விகாரத்தையும் பிராணனுடைய அசைவும் அந்தக்கரணத்தினுடைய கர்த்திருத்துவத்தையும் ஆத்துமாவினுடைய அறிவையும் ஒன்றாகசேர்த்து நான் கர்த்தாவென்று சொல்லிவந்தாய் இப்போது ஆத்துமா அனாத்துமாக்களை வேறு வேறாய் பிரித்ததினால் உனக்கென்று ஸ்வரூபமில்லாமல்போனதால் உன்னை தூக்கில்போடும்படி தீர்மானித்திருக்கிறோமென்று சொன்னதை கேட்டமாத்திரத்தில் இன்னவிதமாய் இறந்தானென்று தெரியாமலே இறந்துபோய்விட்டான். இந்தஜீவத்துவமான தமப்பிள்ளை தேசமுன்போல் நாமார் என்கிற விசாரமன்றியிருக்கிற அவிசாரத்தை உபஜீவித்துக்கொண்டு இருந்தமையால் இப்போது ஆத்மா அனாத்மாக்களுடைய சித் ஜட விவேகத்தாலும் குருகடாக்ஷத்தாலும் தெய்வகிருபையாலும் சர்வசம்சாரானந்தமூலமாயிருந்த ஜீவத்துவம் நஷ்டமாய் போனதால் மற்ற மாயாகாரியங்களைப்போலே பிராதிபாசிக வியவஹாரிக அசத்துக்கள்போலே பொய்யாய் விசாரத்துக்கு வருவதுபோல் வன்றியில் விசாரமாத்திரத்தில் விஞ்ஞானமயன் அகதியந்தாசத்தாய் போவதே இறந்துபோனானென்று சொன்ன சொல்லின் கருத்து.

8-வது சாக்ஷி ஆனந்தமயனென்பவனை பிரமாணத்தின்பேரில் விசாரிக்கப்படுகிறது.

ஜெம்பசாவகாசமாகிறதென்று இந்தசாக்ஷியை கோரட்டார் ஙநமேர விசாரிக்கிறார்.

கே:—நீ யார்.

வி.— ஆனந்தமயன்

கே.—நான்யென்கிற ஆத்மாயார் தெரியுமா?

வி.—நானே ஆனந்தமயனென்ற நான்யென்கிற ஆத்மா

கே.—அதற்கு சுருதியுக்தி அனுபவம் என்ன

வி.— விஞ்ஞானமயனைக்காட்டிலும் ஆனந்தமயனே அன்னியோந்தராத்மா வென்கிற சுருதியும் சகலபிராணிகளும் சுழுப்திசுகத்துக்காக பாய்தலைவாணி முதலான சாதகங்களை தேடுகிறதே

யுக்தியும் தினம் அனுபவிக்கிற சுழுப்த்தியே ஆனந்தமும் அனு பவமென்று சொன்னதைக்கேட்டு இது அக்ஞான அவஸ்தை யைச் சேர்ந்ததாலும் ஏகதேசமாயுண்டாவதாலும் ஆனந்தவிகார மானதாலும் நிருபாதிகனும் நிர்விகாரனும் அழியாமல் சதா இருப்பவனுமிருக்கிற ஆத்மா இவனல்லவென்று தள்ளப்பட் டான்.

9-வது சாக்ஷி சூன்னியாத்மாவை விசாரிக்கப்படுகிறது.

இந்த சாக்ஷியையும் கோரட்டாருலேயே விசாரிக்கப்படு கிறது.

கே.—நீ யார்

வி.—நான் சூனியாத்மா

கே.—உனக்கு நானென்கிற ஆத்மாவை தெரியுமா

வி.—நானே சூனியாத்மா

கே.—நீயே நானென்கிற ஆத்மாவானால் அதற்கு சுருதி யுக்தி அனுபவமென்ன

வி.—சிருஷ்டிக்குமுன் அசத்தே இருந்தது என்கிற சுரு தியும் பிறகுபாவமாயிருந்து சேஷமுண்டாகிற யுக்தியும், சுழு ப்த்தியில் ஒன்றுமில்லாமலிருக்கிற அனுபவமும் பிரமாணமாக இருக்கிறது.

கே.—நீ சொன்ன சுருதியானது சிருஷ்டிக்குமுன் அசத் தே இருந்தது ஆத்மா இல்லையென்று சொல்லுகிறயா.

வி. ஆத்துமா இருந்ததெனறே சொன்னேன்.

கே.—ஆத்மா இருக்கிறதென்று சொன்னதால் கடம் சூன் னியத்திலுண்டாகாமல் மண்ணிலிருந்து உண்டாயிருக்கிறது சுழு ப்த்தியில் ஒன்றுமில்லாததை அறிந்த நீ இருக்கும்போது ஒன்று மில்லையென்று சொல்லுகிறாய் ஆகையால் நீயும் ஜனனமரண மான தண்டனைக்குள்ளானாய்.

10-வது சாக்ஷி சாங்கியனை விசாரிக்கப்படுகிறது.

கோர்ட்டாருல் கேழ்வி.

கே.—நீயார்.

வி:—நான் சாங்கியாத்மா.

கே:—உனக்கு நான்யென்கிற ஆத்மாவை தெரியுமா

வி:—தெரியும்.

கே:—அவர் சித்தா ஜடமா.

வி:—அவர்சித்து.

கே:—சித்தென்றால் ஏகமா அனேகமா.

வி:—அனேகம்.

கே:—என்னகாரணத்தால் அனேகமென்று சொல்கிறாய்.

வி:—பெந்தமோக்ஷங்கள் விவஸ்தையாகிற நிமித்தம் அனேகமென்று சொன்னேன்.

கே:—அந்த பந்த முக்தி விவஸ்தை அங்கங்கே மாயையே பண்ணுகிறது அப்படிக்கிருக்க அறிவு அனேகமென்று சொல்லுகிறாயே ஒரு அறிவுக்கும் மைத்தொரு அறிவுக்கும் பேதமுண்டா இல்லையா.

வி:—பேதமுண்டு.

கே:—பேதமானால ஜடமாய்விடுமே.

வி:—என்னைப்போலொத்த கருமிகளுக்கு பேதமாகக்காட்டும் கருமம் விலக அறிவு ஒன்றேயாகும்.

கே:—நீ கருமம் விலகாதவனானதால் உன்னுடைய சாக்ஷியத்தை எப்படி நம்புகிறது.

இப்படிகேழ்க்கும்போது அவன் முழிக்க கோர்ட்டார் இடிக்க விலகவழி இல்லாமல் மூர்ச்சிதனாய் போய்விட்டான்.

11-வது சாக்ஷி சாலோககாமியை கோர்ட்டாறாலேயே விசாரிக்கப்படுகிறது.

கே:—நீ யார்.

வி:—நான் ஸாலோக்கிய காமி.

கே:—நீ யெந்தகருமங்களை செய்யப்பட்டவன் அதற்கு எந்த சாதகங்களை செய்கிறது.

வி:—சரியை, கிரியை, யோகம், ஞானம்யென நான்கு வகைகளைக்கொண்டு செய்வது.

கே:—சரியை என்றாலென்ன.

வி:—வேதாத்தியான பரனாக இருந்து பகவத்கைங்கரிய ரூபமானதாசபாவனையை செய்துவருவது.

கே:—கிரியை என்றாலென்ன.

வி:—சிவபூஜை முதலான அக்கினிகருமங்களை செய்துவருவது.

கே:—யோகமென்றாலென்ன.

வி:—யமம் நியமமுதலான அஷ்டாங்கங்களால் பரமாத்மாவினிடம் ஜீவாத்மா ஐக்கியம் (அதாவது) பிரம்மத்துடன் கலந்து பேதமற்றிருத்தல்.)

கே:—ஞானமென்றாலென்ன.

வி:—பிரம்மசைதன்னியத்தை எங்குமாய் ஏகமாய் கண்டானந்தித்து ஐக்கிய முற்றிருத்தல்.

கே:—உன் மதத்தில் பதார்த்தம் எத்தனைவிதம்.

வி—ஜீவன் ஜகத்து ஈசுவரன் என்று மூன்றுவித பதார்த்தம்.

கே.—இதில் நித்தியமாயுள்ள ஆத்துமாயார்.

வி.—ஈசுவரன்தான்.

கே.—அவர் எங்கே இருக்கிறார்.

வி.—சூரியனைப்போல் எங்குமிருப்பவர் பக்தர்களுக்காக கைலாசாதிலோகங்களிலும் பூமியிலுள்ள ஸ்தலங்களிலுமிருக்கிறார்.

கே.—நீ நித்தியனா அனித்தியனா.

வி.—நான் கண்போலே நித்தியன் ஆனால் அவர் வாழ்வைக்குறித்து என் வாழ்வு அனித்தியன் அந்த ஈசுவரன் கிருபையால் நித்திய வாழ்வு உடையவனாக அந்தலோகத்தைபோய் சேரப்போகிறேன்.

கே. அவரும் நீயும் சித்தா ஜடமா.

வி.—சித்து.

கே.—அப்படிக்கிருக்க அவருக்கும் உனக்கும் பேதமென்ன.

வி.—அவர் பேரறிவு உடையவர் நான் சித்தறிவு உடையவன்.

கே.—நீ இயற்கையா துக்கியா சுகியா.

வி.—நான் இயற்கையாய் துக்கி

கே.—என்னகாரணத்தினால் நீதுக்கி.

வி.—நான் பாசபந்தனாயிருப்பதால் துக்கியானேன்.

கே.—அந்த பாசம் கல்பனையா வாஸ்தவமா.

வி.—வாஸ்தவந்தான்.

கே.—அந்த பாசம் போகிறதுண்டா இல்லையா.

வி.—அவர் கிருபையால் போகும்

கே.—அவர்கிருபை எப்படிவரும்.

வி.—அவரை திருகாணங்களால் வழிப்பட்டால் வரும்.

கே.—பாசம் ஸ்வபாவமானால் ஆனைத்தாலை எவ்வளவு வெள்ளாவியில் வைத்தாலும் வெளுக்காததுபோல் ஜீவனுக்கு இயற்கையாயுள்ள பாசமபோகுமா.

வி.—ஈசுவரன்கிருபையால் போகுமென்ற சாஸ்திரமிருக்கிறது.

கே.—நல்லது நீ முத்திரி சுஷுப்தியில் (அதாவது நித்திரையில்) ஜீவன் ஜகத்து ஈசுவரன் னெனகிற திருபதார்த்தங்களையும் கண்டாயா காணவில்லையா தூக்கத்தில் சுகமாயிருந்தாயா அல்லது துக்கமாயிருந்தாயா.

வி.—நான் நித்திறையில் திருபதார்த்த ரூபங்களும் தெரியவில்லை துக்கமும் காணவில்லை.

கே.—அப்படி இருக்க திருபதார்த்தம் உண்டென்றும் நான் துக்கியென்றும் எப்படிச்சொன்னாய்.

வி. சாஸ்திரத்தை கேட்டுச்சொன்னதேயொழிய அனுபவித்தவனல்ல.

கே.—அனுபவமில்லாத சாஸ்திரம் தண்ணில் கல்மிதக்குமென்கிறவசனம்போல் நீ கருமங்களையே செய்பவனானையால் நீ ஜனனமரணமான தண்டனைவிதிப்பதில் கீழானஜன்மங்களையடையாமல் வேதபாரங்கதனும் ஜனனமாவாயென்று விதிக்கப்பட்டது.

இப்படியே சாமீபகாமியும் சாரூபகாமியும் சொல்லி வந்தபடியால் மூவருக்கும் இவ்விதமே கோரட்டார் விதிக்கப்பட்டார்.

14-வது சாக்ஷியாகிய சாயுஜ்யகாமியை பிரமாணத்தின்பேரில் கோறட்டாருலேயே விசாரிக்கப்படுகிறது.

கே.—நீ யார்.

வி.—நான் சாயுஜ்யகாமி.

கே.—உனக்கு தொழிலென்ன.

வி.—முண்டகோபநிஷத்தில் 12-வது முண்டகபடி 2-வது கண்டம் 6-வது வாக்கியப்படி.

ओमित्येवम् त्यायत आत्मानं स्वस्तिवः प्रायतमसः प्रस्तात् ओंकारेणैवयतनेनान्वेति विद्वान् यतश्च मजरमामृतमभयं परञ्च ओमित्येकाक्षरं ब्रह्म अग्नदेवत ब्रह्ममित्यार्षगायत्रीश्छन्दः परमात्मस्वरूपं सायुज्यं विनियोगं

என்றால் ஓம் ஏகாக்ஷரம், பிரமவாசகம் பரமாத்மாதேவதை, பரமாத்மாவேரிஷி, காயத்திரிசந்தசு, இந்த மந்திரத்தை உச்சரிப்பதின் பிரயோஜனம் பரமாத்மாவை அடைவதேயாம் ஆகவே அவர் ஓம்என்னும் சொல்லிற்கும் விஷயர்இயார்படைத்தளிக்க வல்லபொருளோ அவரே ஈசுவரர் அவரே பிரம்மம் அவரே ஓங்காரத்தினால் விளக்கப்படுகிற மகாபுருஷர் பூமியைவிட அதிகமேலான உலகங்களில் வாழ்கிற தேவதைகள் நியதமாக அவரை ஆராதனை செய்கின்றனர் நாம் பெருமையானதும் மேலானதுமான பதவியை விரும்பிய நாமும் அந்த தேவதைகளை போல அந்த மகாபுருஷனுக்கு எப்பொழுதும் ஆதீனமாகி அவரைப் பற்றிக்கொண்டு அவரிடத்திலுள்ள அன்பைவிருத்தியும் விகஸிக்கவும் செய்து அவரது உபாசனையில் விருப்பமுடனிருப்பது எனக்கு தொழில்,

கே.—அந்த ஓங்கார சுவரூபியான பரமாத்மாவுக்கு அனேகம் பேருண்டோ.

வி. அந்தமகாபுருஷனை அனேகவிதமான நாமங்களாக பேயரிட்டு துதித்து சாயுஜ்யபதவியை யடைவதுண்டு.

கே.— அப்படிக்கொத்தபேரை விபரமாகச் சொல்லு.

வி. 1. விறாட் என்றால் அநேகவிதமான ஜெகத்தைப் பிரகாசிக்கச் செய்பவன்.

2. அக்னியென்றால் ஞானஸ்வரூபனையும் சர்வக்ஞனையும் அடைவதற்கும் அறிவதற்கும் பூஜிப்பதற்கும் தக்கவனாயுமிருப்பவன்

3. விசுவன் என்றால் ஆகாசாதி பூதங்கள் யாரிடத்திலிருந்து பிரவேசிக்கின்றனவோ அவன்.

4. ஹிரண்ணிய கெற்பன் என்றால் ஆகாசாதி பூதங்கள் யாருடைய குக்ஷியிலிருந்து பிராகாசிக்கிறதோ அவன்

5. வாயுவு என்றால் சருசரமான ஜெகத்தை பிரளயம் செய்பவன் அல்லது தாங்கிக் கொண்டிருப்பவன் பலவானுக்கெல்லாம் பலவான்.

6. தைஜஸன் என்றால் தனக்குத்தானே பிரகாசமுள்ளவன் சூரியாதிதேஜஸ்ஸுகளை தானே பிரகாசிக்கச்செய்பவன்.

7. ஈஸ்வரன் என்றால் சத்தியம் ஞானம் முதலிய சமஸ்த ஐஸ்வரியத்தையுமுடையவன் ஆளுபவன் அரசன்.

8. ஆதித்தன் என்றால் நாசமில்லாதவன்.

9. பிறக்கியன் என்றால் ஞானி பின்னும் ஞானிகளுக்கெல்லாம் சிரேஷ்டன் எல்லாப் பொருள்களையும் உள்ளபடி அறிகிறவன்.

10. மித்திரன் என்றால் எல்லாருக்கும் நண்பன்.

11. வருணன் என்றால் சிஷ்டர்களையும் முமூட்சுக்களையும் தர்மாத்மாக்களையும் ஸ்வீகரிப்பவன் சிரேஷ்டர்கள் அடையத்தக்க சிரேஷ்டன்.

12. அறியமா, யென்றால் எல்லாருடைய கர்மங்களின் உண்மையான வியவஸ்தையை அறிந்துபாபிகளுக்கும் புண்ணியவான்களுக்கும் பலன்களை நியமிப்பவன்.

13. இந்திரன் என்றால் எல்லா ஐஸ்வரியத்தோடுக் கூடினவன்.

14. பிரகஸ்பதி என்றால் எல்லாரிலும் பெரியவனும் ஆகாசாதிகளுக்கும் பிரும்மாதிகளுக்கும் குருவாயும் அதிபதியாயுமிருப்பவன்.

15. பிரஜாபதி என்றால் சமஸ்தப் பிறாணிகளுக்கும் எஜமானன்.

16. விஷ்ணு என்றால் சருசரமாகிய ஜெகத்தையெல்லாம் வியாபித்திருப்பவன்.

17. உருக்கமம் என்றால் மிகுந்த பராக்கிரமத்தையுடைய வன்.

18. பிரும்மா என்றால் எல்லாவற்றிலும் பிரகாசித்துக்கொண்டு எல்லாவற்றிற்கும் பெரியவனாகயிருப்பவன்

19. குபேரன் என்றால் ஆகாசாதிகளுக்கு ஆச்சாதிகன்.

20. ஆத்மா என்றால் எல்லா ஜெகத்திலும் வியாபத்திருப்பவன்.

21. பரமேஸ்வரன் என்றால் ஈஸ்வரர்களுக்கெல்லாம் ஈஸ்வரன் ஐஸ்வரியத்தையுடையவர்களில் எல்லாரிலும் உயர்ந்தவன்

22. பரமாத்மா வென்றால ஜீவாத்மாக்களிலெல்லாம் சிரேஷ்டன்.

23. ஸவிதா யென்றால் சமஸ்தமான ஜெகத்தையும் உற்பத்திபண்ணுகிறவன்.

24. தேவன் என்றால்சுவயம் பிரகாசனும் எல்லாஜெகத்தையும் ஜ்வலிக்கச்செய்கிறவன் பின்னும் தனது ஆனந்தத்தில் கிரீடிக்கிறவன் அல்லது ஜெகத்தின் கிரீடைக்கு ஆதாரமாயிருப்பவன் எல்லாரையும் ஜெயிப்பவன் பாபபுண்ணிய விவகாரங்களை உபதேசிக்கிறவன் எல்லாராலும் துதிக்கப்படத்தக்கவன் தான் ஆனந்தஸ்வரூபனும் எல்லாரையும் ஆனந்திப்பிப்பவன் பிரளயத்தில் எல்லாரையும் அவ்வியக்த்தத்தில் ஒடுக்குபவன் சர்வாபிஷ்டங்களும் நிறைந்தவனும் சிரேஷ்டர்களால் விரும்பப்படத்தகுந்தவன் எல்லோரையும் அடைந்து எல்லோராலும் அடையவும் அறியவும் தக்கவன்.

25. பிரதிவி என்றால் ஆகாசாதிகளில் எல்லாம் விஸ்தரித்திருப்பவன்.

26. ஜெலம் என்றால் அவ்வியக்தத்தில் நின்றும் பரமாணுக்களை ஒன்றோடொன்றாய் சேர்க்கவும் பிரளயத்தில் அவைகளை பிரிக்கவும் சக்தியுள்ளவன் எல்லாவற்றையும் தாங்குபவன்.

27. ஆகாசம் என்றால் எல்லாவிடத்திலும் எக்காலத்திலும் எல்லாவற்றையும் பிரகாசிக்க செய்பவன்.

28. அன்னம் என்றால் சராசரமான ஜெகத்தைபட்சித்து ஜீரணிப்பவன்.

29. அநந்தன் என்றால் சராசரமான ஜெகத்தைகிரஹிப்பவன்.

30. வஸு என்றால் ஆகாசாதிபூதங்கள் வசிப்பதற்கு இடமானவன் எல்லாபூதங்களிலும் வசிப்பவன்

31. ருத்திரன் என்றால் துஷ்டகாரியங்களைச் செய்பவர்களை அழச்செய்பவன்.

32. நாராயணன் என்றால் எல்லாப்பிராணிகளும்.
வசிக்கும்ஸதானம் எவனிடமிருந்து எல்லாபிராணிகளும் ஜெனிக்கின்றனவோ ஜெனித்தவன் மறுபடியும் எவனை நாடி சேருகின்றனவோ அவன்.

33. கேசவன் என்றால்நிர்வதிகசுகத்தை வசிக்கப்பட்டவன்,

34. மாதவன் என்றால் ஞானத்திற்கு பிரபுவானவன்.

35. கோவிந்தன் என்றால் வாக்கினால் ஸ்தோத்திரிக்கப்படுபவன். அல்லது ஜீவகோடிகளாகிய பசுக்களை காப்பவன்.

36. மதுசூதனன் என்றால் ஞானத்தினால் பக்தர்களுடைய காமபலாபேட்சையை போக்குபவன்

37. திருவிக்கிரமன் என்றால் மூன்று லோகங்களிலும் வியாபித்திருப்பவன்.

38. வாமனன் என்றால் மங்களஸ்வரூபத்தினால் பிரகாசிப்பவன்.

39. இந்திரன் என்றால் சர்வசம்பத்துக்களை சரித்துக்கொண்டிருப்பவன்.

40. ஹிரிஷிகேசன் என்றால் இந்திரியங்களுக்கு பிரபுவானவன்.

41. பத்மநாபன் என்றால் சர்வஜெகத்காரணசம்பன்னன்.

42. தாமோதரன் என்றால் சர்வலோகங்களையும் தனக்குள்ளாக உடையவன்

43. சங்கர்ஷணன் என்றால் சர்வஜீவர்களையும் ஆகரிஷிப்பவன்.

44. வாசுதேவன் என்றால் சர்வபூதங்களையும் தனக்குள்ளும் தான் சர்வபூதங்களுமாக விருப்பவன்.

45. பிரத்தியுமனன் என்றால் அத்தியந்தபிரகாச சம்பன்னன்.

46. அனிருத்தன் என்றால் பக்தர்களால் கிரஹிக்கப்படுவவன்.

47. நரசிம்மன் என்றால் பாவிகளை தெண்டித்து ஞானிகளுக்கு மோட்சம் தருபவன்.

48. அச்சுதன் என்றால் நாசரகிதமானவன்.

49. ஜெனார்த்தனன் என்றால் சர்வஜெனங்களால் புருஷார்த்தத்துக்கு வேண்டப்படத்தக்கவன்.

50. உபேந்திரன் என்றால் பரம ஐஸ்வரிய சம்பன்னன்.

51. ஹரி என்றால் பக்தர்களுடைய பாவங்களைப் போக்கப்பட்டவன்.

52. சூரியன் என்றால் சராசரமான ஜெகத்துக்கு ஆத்மா.

53. சந்திரன் என்றாலஜீவர்களையும் முக்தர்களையும் ஆனந்திப்பிக்கிறவன்.

54. மங்களன் என்றால் தான் சுபரூபனுகி எல்லாருக்கும் சுபத்தைக் கொடுப்பவன்.

55. புதன் என்றால் தான் ஞான (அறிவு) சுவரூபனுகி எல்லாருக்கும் அறிவைத்தர காரணுயிருப்பவன்.

56. சுக்ரன் என்றால் தான் பரிசுத்தனுகி எல்லாரையும் பரிசுத்தப்படுத்துகிறவன்.

57. சனீஸ்வரன் என்றால் தான் தைரியவானுகி உலகத்தின் தைரியத்துக்கு காரணுயிருப்பவன்.

58. ராகு என்றால் ஏகாந்தசொரூபனுகி எதனுடனும் சேராமல் துறவிகளின் துறவுக்கு காரணுயிருப்பவன்.

59. கேது என்றால் ஜெகத்துக்கு வாசஸ்தானமாகி ரோகரஹிதனுய் மும்முட்சுக்களின் ஜெனனமரணங்களை நாசிப்படுத்துபவன்

60. எக்ஞன் என்றால் பிருமாதிகளாலும் பூஜிக்கப்படுகிறவன் எக்ஞம் என்பது விஷ்ணுவுக்குப்பெயர் விஷ்ணுஎன்றால் வியாபகன் ஆகையால். எக்ஞன் என்றால் வியாபகன் என்ற பொருள்.

61. ஹோமன் என்றால் கொடுக்கவும் வாங்கவும் தக்கவன் அதாவது உபதேசத்தைக்கொடுப்பதிலும் பக்தியை கிரஹிப்ப திலும் பரமேஸ்வரனைவிட உத்தமனில்லை யாகையால் அவனுக்கு ஹோமன் என்ற பெயர் வழங்கியது.

62. பந்து என்றால் எல்லா உலகங்களையும் ஆக்கினையில் கட்டி தத்தம் மார்க்கங்களில் சுற்றுப்படி நடத்துபவன் உறவின ரைப்போல் உலகங்கள் ஒன்றுக்கொன்று சகாயமாய் இருக்கச் செய்பவன்.

63. பிதா என்றால் பிரஜைகளை தகப்பனைப்போல் கிருபை யுடனும் பிரீதியுடனும் ரெட்சிப்பவன்.

64. மாதா என்றால் தாயைப்போல் பிரஜைகளை அபிமா னித்து அத்தியந்தம் பிரீதியும் கிருபையும் செய்பவன்.

65. சத்தியன் என்றால் நித்தியனும் அழிவற்றவனுமாயிரு ப்பவன்.

66. ஞானன் என்றால் முக்காலத்தையும் அறிந்தவன்.

67. அனந்தன் என்றால் தேசகாலவஸதுக்களால் அபரிச் சின்னன் (அகண்டவானவன்)

68. ஆனந்தன் என்றால் எல்லாம் நிறைந்தவனும் சந்தோ ஷித்தனும் மும்முட்சுக்களுக்கு நித்யானந்தத்தைக் கொடுப்ப வன்.

69. சச்சிதானந்தன் என்றால்சத்தியஸ்வரூபன்ஞானஸ்வரு பன் ஆனந்தசுரூபன்,

70. சுத்தன் என்றால் தான் சுத்தனாகி ஜீவர்களின் எல்லாக் குற்றங்களையும் நீக்குபவன்.

71. புத்தன் என்றால் அறிவுக்கு எல்லையா யிருப்பவன்.

72. முக்தன என்றால் தான் முக்தனாகி எல்லாருக்கும் முக்தியைக் கொடுப்பவன்.

73. நித்தியன் என்றால் என்று முள்ளவன் எவராலும் உண்டாக்கப்படாதவன்.

74. கெணேசன் என்றால் அண்டங்களின் கூட்டங்களுக் கெல்லாம் ஈசன்.

75. விசுவேஸ்வரன் என்றால் ஜெகத்துக்கெல்லாம் ஈசுவ

76. கூடஸ்தன் என்றால் யாரிடத்தில் எல்லா விவகாரங்களும் உண்டாகின்றனவோ எவன் எல்லாவிவகாரங்களிலும் வியாப்தனுகி அவைகளுக்கு ஆதாரனுயிருக்கின்றானோ எவனுடைய சுருபத்தில் எவ்வித விகாரமுமில்லையோ அவன்.

77. சக்தி எனறால் எல்லா பதார்த்தங்களையும் ரெசிக்கும் சக்தியுள்ளவன்.

78. லெட்சுமி என்றால் எல்லா உலகங்களையும் உண்டாக்கி பார்க்கின்றவன் ஜெகத்தில் அவயவங்களை ஒன்றைப்போல் ஒன்று இல்லாதபடி படைத்து பிரகாசிக்கச்செய்பவன் வேதாதி சாஸ்திரங்களை ஞானிகளுடைய தெரிசனத்துக்கு ஏற்றவாறு செய்திருப்பவன் சகல சுகங்களையும் தருபவன்.

79. சரஸ்வதி என்றால் சகலவித ஞானங்கள் விளங்கப் பெற்றவன்.

80. நியாயகாரி என்றால் பட்சபாதமற்றவன் பாப புண்ணியங்களுக்குத் தக்க படி பலனை அளிப்பவன்.

81. தயாளு என்றால் அபயகொடுத்தல் உள்ளபடி குண தோஷங்களை அறிதல் ரெக்ஷித்தல், துஷ்ட கருமங்களைச் செய்பவரை தெண்டித்தல் எல்லாரிடத்திலும் பிரீதியுடன் கிருபை செய்தல் ஆகிய குணங்களை யுடையவன்.

82. அந்தர்யாமி யென்றால் ஜெகத்தின் உள்ளும் புறமும் எங்கும் வியாபித்து எல்லாவற்றையும் நியமத்தில் வைப்பவன்.

83. தர்மராஜன் என்றால் தர்மத்தால் எப்போதும் பிரகாசிப்பவன் தர்மத்தை எப்போதும் பிரகாசிக்கச் செய்பவன்.

84. சிவன் என்றால் எப்போதும் கல்லியாண குணங்களோடு இருப்பவன்.

85. பகவான் என்றால் ஞான வைராக்கியாதி குணங்களை நித்தியமும் உடையவன்.

86. மனு என்றால் ஜெகத்தை அறிபவன் வேதாதி சாஸ்திரங்களாலும் சிஷ்டர்களாலும் அறியப்பட்டவன்.

87. விஸ்வம்பரன் என்றால் ஜெகத்தை யெல்லாம் தறித்து போஷிப்பவன்.

88. காலன் என்றால் ஜெகத்தின் எண்ணிக்கை அளவு முதலியவற்றை உள்ளபடி அறிபவன்.

89. பிரியன் என்றால் சிஷ்டர்களையும் முமூட்சுக்களையும் தனது ஆனந்தத்தால் சந்தோஷப்படுத்துகிறவன்.

90. சங்கரன் என்றால் சுகத்தைக் கொடுப்பவன்.

91. சூட்சமன் என்றால் எல்லாவற்றிலும் இருப்பவன்.

92. சாம்பு என்றால் சுயமாக யிருப்பவன்.

93. மகான் என்றால் எல்லாவற்றிலும பெரியவன்.

94. அஜன் என்றால் பிரப்பு இல்லாதவன்.

95. கிரரிகாரன் என்றால் ரூபமில்லாதவன்.

96. நிரஞ்சனன் என்றால் மாயையும் அவித்தையுமற்றவன்.

97. அத்துவீதியன் என்றால் ஒப்பு உயர்வு இலலாதவன் சஜாதி விஜாதி பேதமற்றவன்.

98. நிர்குணன் என்றால் ஜென்மம் அவித்தை சத்துவம் முதலிய ஜெகத்தின் குணமற்றவன்.

99. நிர்ப்பயன் என்றால் யாரிடத்திலும் பயமில்லாதவன் யாரையும் பயமற்று இருக்கச் செய்பவன்.

100. அனாதி என்றால் ஆதியற்றவன் எவற்றுக்கும ஆதியானவன்.

101. அசிந்தியன் என்றால் விஷய சக்தி யுள்ளவர்களால் நினைக்கவும் அறியவும் படாதவன்.

102. அப்பரமேயன் என்றால் இவ்வளவு சக்தியுடையனென்று அளவிட்டுச் சொல்லக்கூடாதவன்.

103. அப்பிரமாதி யென்றால் பிறர்ந்தி யற்றவன்

104. ஆகாயன் என்றால் சரீரமற்றவன்,

105. அவிருணன் என்றால் புண்ணற்றவன்

106. அஸ்மாவீரன் என்றால் நாடி நரம்பற்றவன்
107. அபாபன் என்றால் பாபமற்றவன் பாவனன்
108. நிர்விகாரன் என்றால் ஜெகத்தின் பதார்த்தங்களைப் போல வளர்ச்சி தேய்வுமுதலிய மாருதல் இல்லாதவன் இவ்விதமாய் பரமாத்வாவின் குணதர்ம சுபாவங்களை அனுசரித்து பல நாமங்கள் அவருக்கு வேதங்களில் வழங்கியிருப்பதுமன்றி பிரபஞ்சசம்பந்தமான குணங்கள் அவரிடத்தில் இல்லாமல் இருப்பவன் எவனோ அவனைப்போல் நானிருக்க இன்னம் பலவிதமான பேரிட்டுத்துதித்து சாயுஜ்ய பதவியை அடையப்பட்டவன் நான்.

சே. ஆனல் தேவதைகளில் அநேகருண்டோ.

வி. தேவதைகளில் 33 தேவதைகள் தான் உள்ளது அதன் அதன் ஒட்டு அலங்காரமாய் 33 கோடி தேவதைகள் என்பார்கள் 33 கோடி தேவதைகள் பேரைச்சொல்ல விரிவாவதால் 33 தேவதைகளின் பேரைச்சொல்லி வருகிறேன்,

| | | | |
|---|---|---|---|
| அதாவது வசுக்கள் | 8. | ருதிரர்கள் | 11 |
| ஆதித்தன் | 12. | இந்திரன் | 1. |
| பிரஜாபதி | 1. | ஆ 33 க்கு வசுக்களாவது. | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அக்னி | 1. | பிரிதிவி | 2. | வாயு | 3. |
| அந்தரிட்சம் | 4 | ஆதித்தன் சந்திரன் | 5 | வருணன் | 6. |
| | | | | சொர்க்கம் | 7, |

நட்சத்திரம் 8. இது அஷ்டவசுக்கள் ஏகாதச ருத்தீரர்களாவது. பிராணன், அபானன், வியானன், சமானன், உதானன், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்செயன் இப்படி 10 ஜீவாத்மா 1. ஆக 11.

துவாதசாதித்தர்களாவன.

மாதம் 12 க்கும் 12 ஆதித்தன் இந்திரன் பிரஜாபதி ஆக 33. இப்படி 33 தேவதைகள் தான் பேதமாகச் சொல்லியிருந்த போதிலும் அந்த ஓங்கார ஏகாட்சரசுரூபியாகிய நான் என்கிற ஆத்மாவுக்கே பெயராகும்.

சே.—ஆனல் நான் என்கிற ஆத்மா நீதானா அல்லது அவர் வேறா.

வி.—நான் அவருக்குள் அடங்கினவனாகயிருந்தாலும் அவர் பேர் அறிவுடையவர் நான் சிற்றறிவுடையவன் எனக்கும் அவருக்கும் சுவல்ப்பபேதமுண்டு.

கே.—ஆனால் நீயும் ஜெனனமரணமான தெண்டனைக்குள்ப்பட்டவனாகிறாய் அப்படி உண்டானாலும் ஜெனனமாகிறதில் இப்போது அறிவுள்ள ஜென்மமாகவே ஜெனித்து சாதனசதுஷ்டயங்களைச்செய்து நான் என்கிற ஆத்மாவாக ஜெனிக்ககடவாயென்று கோர்ட்டார் உத்திரவு செய்தார்கள்.

இதன்மேல் கோர்ட்டார் இந்த 14 சாட்சிகளில் சாமீபகாமி சாருபியகாமி சாயுஜ்ஜியகாமி வரையில் கர்மத்தினாலேயே ஐக்கியம்.

ஐக்கியம் வரையிலுள்ள முக்திசித்திக்குமென்கிற வார்த்தையைக்கேட்டு அவர்களுடையவார்த்தை முழுமையும் உபயோகமில்லையென்று தள்ளுகிறார்.

அதாவது சுபாவமாயிராமல் கர்மத்தினால் சாதிக்கப்பட்ட பலனெல்லாம் ஜெலத்துக்குவந்த உஷ்ணம்போலவும் ரஸவாதத்தால இரும்புக்குவந்த சொரணத்துவம்போலவும் சுவரில் எழுதின சித்திரம்போலவும் கொப்பரையில் விட்டஜெலம்போலவும் புருஷனுக்கு கொட்டாங்கச்சியைக்கட்டினாற்போலவும் சிகப்புக்கு அரிதாரம் பூசிக்கொள்ளுவதுபோலவும் நாடகத்தில் விசுவாமித்திரன் வேஷம்பூண்டதுபோலவும் அந்த கர்மசாத்தியமான முக்திகளும் அந்தகர்மக்ஷயம் வரும்காலத்தில் அந்த முக்தியும்கூடவே அழிந்துபோய்விடுமென்று எல்லா சாட்சிகளையும் பூர்வபட்சமென்றே தள்ளிவிட்டார்கள். இனிமேல் வாதிதரப்புசாட்சிகளையும் விசாரணைசெய்து Argument ஆர்குமெண்டின்பேரில் தீர்மானிக்கிறோமென்று கோரட்டார் வாதி சாட்சிகளை ஆஜர்செய்யும்படி உத்திரவு கொடுத்தார்கள்.

வாதி தரப்பு 1-வது சாக்ஷி விவேகன்யென்பவனை பிரமாணத்தின்பேரில் விசாரிக்கப்படுகிறது. வாதி தரப்பு வைக்கீல் என் கக்ஷிசாக்ஷியை எதிரி தரப்பு வைக்கீலேயே விசாரிக்கும்படி சொல்லிவிட்டு குந்தினார்.

எதிரி திரப்பு வைக்கில் அகம்பிடித்த அனாத்மகாதனால் விசாரிக்கப்படுகிறது.

கே.—நீ யார்.

வி.—நான் விவேகன்

கே.—நீ யாருடைய பிள்ளை

வி.—விசாரனுடைய பிள்ளை

கே.—உனக்கு நானென்கிற ஆத்மாவை தெரியுமா

வி.—தெரியும் லக்ஷணையால் தெரியும்

கே.—அதை தெரிந்துகொள்ள லக்ஷணை எதற்காக

வி.—உங்களைப்போல் மூடமாய் ஜெடமாய் இல்லாமல் சித்தாயிருப்பதால் லக்ஷணையால் தெரியவேண்டியது.

கே.—சித்தையறிவதில் லெக்ஷணை வேண்டுமென்பதற்கு யுக்தி என்ன.

வி.—சப்தாதிவிஷயங்களைபோலே சுரோத்திருதி ஞானேந்திரியங்கள் ஜடமாயில்லாமல் சித்தாயிருப்பதால் லெக்ஷணையன்னியில் பிரத்தியக்ஷமாய் அறியப்படுகிற விஷயங்களைப்போல் இல்லாமலிருக்கிற ஷை இந்திரியங்கள் இதுகளை அறிகிறதென்கிற லெக்ஷணையினாலே அவ்விந்திரியங்களை அறிவென்று அறிந்துகொள்ளுவது போலவும் அக்கினியின் சூட்டை செத்தை முதலானதை தகிப்பதினால் அறிவதுபோலும் நான் என்கிற ஆத்மாவினால் பஞ்சகோசை பஞ்சவிஷயங்கள் அறியப்படுவதாலும் அவை நானில் இவர் அறியப்படாததினாலும் இப்படிப்பட்ட அறிவே நான் என்கிற ஆத்துமா வென்று லெக்ஷணையால் அறிந்தேன்.

கே.—இவருக்கு கர்த்திருதுவாதி சம்சாரம் உண்டா இல்லையா ?

வி.—இல்லவே இல்லை.

கே.—எதனால் இவர் அகர்த்தா.

வி.—அவஸ்தாதிரயங்களிலும் தோன்றி தோன்றி அழிகிற ஸ்திருஸ்திர அக்ஞானவிஷயங்களிலும் ஒன்றேடேயும் சம்மந்

தமன்னியில் அறிந்துகொண்டிருப்பதால் ஆத்மாவை அகர்த்தா வென்று அறிந்தேன்.

கே.—ஆத்மா கர்த்தாவென்றும் அவருக்கு புண்ணிய பாப கர்மங்களுண்டென்றும் அதற்கேற்ற ஜனனமரண சம்சாரம் உண்டென்றும் சுருதியும் அனுபவமுமிருக்கிறதே.

வி.—அந்த சுருதி ஸ்தூலாருந்ததி நியாயம்போல் பூர்வ பக்ஷமாய் உங்களைப்போலே யிருக்கிற அவிவேகிகளுக்காக சொன்னதேதவிர சித்தாந்த சுருதிகள் அல்ல. ஆத்மாவானவர்.

शाक्षिश्चेताकेवलो निर्गुणश्च வென்று சொல்லுகிறதனாலும் இந்த ஆத்மாவானவர் அனுபவமான சுழுப்தியிலும் பிறந்தியான மன தில்லாததினால் கர்த்திருதுவாதியாதொரு சம்சாரமன்னியில் சாக்ஷிமாத்திரமாயிருப்பதாலும் நீ சொன்ன சுருதிகளும் அனுப வங்களும் மனோபிறந்தியென்று தள்ளப்பட்டது. இன்னமொரு ரகசியம் அதாவது இந்த ஆத்மாவை முதலாவது அக்ஞானம் என்கிற எதிரிமறைத்து ஆவறணன் என்கிற லகுரிபெண்ணால் மயக்கி விக்ஷேபி என்கிற குஷ்டம் பிடித்த பெண்ணுடன் இவறை சேர்பிவைத்து கர்த்த ருதுவாதிகளாகிற வியாதியும் உண்டுபண்ணி பாமரன் கரமிபக்த்தன் முதலான பிள்ளைகளை உற்பத்திசெய்து சதாதாபத்திரய— துக்கங்களை அடையும்படி மோசமாய் அசங்கன் சங்கள்போலவே செய்து போட்டார்கள்.

இப்படிக்கி விவேகன் சொல்லிவந்ததைகேட்ட எதிரி வை க்கீல் அகம்பிடித்த அநாத்மநாதன் கோபமாய்ச் சொல்லுகி றான். சட்டத்தில் சாக்ஷிக்காரன் வைக்கீலுடைய கேழ்விக்கி மட்டும் மறுமொழி சொல்லும்படி (லா)சொல்லிஇருக்க நீ அதற் கு விரோதமாக உன்னை கேளாத சங்கதியைப்பற்றி நீ சொன்ன தால் நீ ரொம்ப அதிகப்பிரசங்கி இனி அப்படிக்கி சொன்னாயே யானால் கோறட்டாரால் தெண்டிக்கப்படுவாயென்று சொல்லி மருபடியும் கேழ்க்கிறார்.

கே.—இந்த நான் என்கிற ஆத்மா சத்தா அசத்தா

வி.—அவன் சத்தே

கே.—எதனால் சதமென்று சொல்லுகிறாய்

வி.—அவர் சர்வகாரணமாயிருப்பதால் சொன்னது

கே.—அதற்கு சுருதி என்ன சொல்லு

வி.—சிருஷ்டிக்கி முன்னே சத்துமாத்திரமாயிருக்கிற தென்று சொல்லுகிறது. யுக்திக்கி மண், இரும்பு, தங்கம் முதலான காரண வஸ்துக்கள் கடாதிகாரியங்களைப்போல் அழியாமல் நித்தியமாயிருப்பதுபோல் வென்று அறிக தான் மூன்று காலத்திலும் கெடாமலிருப்பதே அனுபவம்.

கே.—இவர் சித்தா ஜடமா

வி.—அவர் சித்து

கே.—யெதுனால் சித்து

வி.—அவஸ்தாதிரயங்களையும் அறிந்துகொண்டிருப்பதால் இதற்கு சுருதி பிரக்ஞானம் பிரமம என்பதே சுருதி யுக்தி. என்கண்ணால் அறியப்படுகிற ரூபம் ஜெடமாவதுபோல் ஆகாமல் கண் அறிவாக யிருப்பதே யுக்தி. அனுபவமேதனில் தானாக விளங்கின தூலதேகம் ஸ்வப்பனத்தில் தோற்றமல்போவதையும் சமாதியில் காரணதேகம் தோற்றமல் போவதையும் அனுசூதனாய் அறிந்துகொண்டிருக்கிறதே அனுபவம்.

கே.—இந்த ஆத்மா துக்கரூபியா சுகரூபியா.

வி. சுகரூபி.

கே.—அதற்கு சுருதியுக்தி அனுபவமென்ன

வி.—ஆனந்தமே பிரமமென்று அறியவேண்டியதென்பதே சுருதி. மாப்பிள்ளைக்காக மாப்பிள்ளை தோழனுக்கும் உபசாரம் செய்வதுபோல் ஆத்மாவுக்காக பிள்ளை முதலானவர்களிடத்தில் பிரியம்வைப்பதே யுக்தி. பணம்முதல் பிறண்ணவரை தன்னுடைய சுகத்துக்கு விக்கினம பண்ணும் வேலையில் அதுகளை வெறுத்து தன்னிடத்திலேயே அதிபிரியமாயிருப்பதே அனுபவம்.

கே.—இந்த நான் யென்கிற ஆத்மா எவ்வளவு காலமாய் இந்த அக்ஞானதிகளிடம் சேர்ந்து அக்ஞானகாரியங்களான பஞ்சகோசாதிகளால் அனுபவிக்கப்படுகிறா அதை சொல்.

வி.—இருட்டும் அதிலிருக்கிற கெடபடாதிகளும் இந்த வீட்டிலிருக்கிற புருஷனை எவ்வளவுகாலமாய் அனுபவிக்கிறதென்று கேட்கிறதுபோலவும் ஆகாசத்தில் தோற்றுகிற நீலாவதிவர்ணங்கள் எத்தனைகாலமாய் அதை அனுபவிக்கிறதென்று கேட்பதுபோலும் ஸபடிகத்தை எவ்வளவு காலமாய் சிகப்பு பூசி, கப்புவர்ணமாய் அனுபவிக்கிறதென்றும் கேழ்ப்பதுபோலவும் கண்காமாலையால் சங்கில்தோணுகிற மஞ்சள்நிறம் எவ்வளவு காலமாய் சங்கை தன்னிறமாக அனுபவிக்கிறதென்று கேழ்பதுபோலவுமிருக்கிறது இந்த அக்ஞானாதிகள் சுத்த அசத்தாயிருப்பதால் இதுகள் ஆத்மாவை எவ்வளவுகாலமாய் அனுபவிக்கிறதென்றும் கேட்டு மலடிபிள்ளை அருந்ததியைபோல் விருக்கிற கற்புடையவர்கள் எத்தனைகாலமாய் அனுபவித்து சுகிக்கிறாறென்று சொன்னசொல்லில் கேட்பதுபோலும் உம்முடைய வார்த்தையும் பரிகாசத்துக்கு இடமாயிருக்கிறதென்று சொன்னதைகேட்ட கோறட்டாரும் எதிரி வைக்கீலை பார்த்து நீ கேழ்க்க கேழ்க்க தீட்ட தீட்ட அரிசி வெளுப்பதுபோல் உங்கள் சாயம் வெளுத்துப்போவதால் கேழ்வியை நிறுத்தச் சொல்லிப்போட்டு இவர் றொம்ப யோக்கியனென்றும் இவருக்கு நிரூபகனென்ற கிதாபத்திரமும் கொடுத்து கேசு முடியும் வறைவாதிக்கி ஒத்தாசையாய் சமீபத்திலேயே இருக்கும்படி உத்திரவுசெய்தார்.

வாதி தீர்ப்பு 2-வது சாக்ஷி வைறாக்கியனை பிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்படுகிறது.

பிரதிவாதி வைக்கீல் கேழ்வி.

கே.—நீ யார்.

வி.—யென்பேயர் வைறாக்கியன்.

கே.—யாருடைய பிள்ளை

வி.—நான் விவேகியின் பிள்ளை

கே.—உனக்கு நான்யென்கிற ஆத்மாவை தெரியுமா.

வி.—தெரியும் அவர் எங்கும் விளங்குகிறார்.

இப்படிக்கிச்சொன்னவுடன் பிரதிவாதிவைக்கிலுக்கு மிகவும் கோபமாகி கோறட்டாறைபார்த்து இந்த சாக்ஷிபிரம்பமோசக்காரன் அதைகொஞ்சம் தெரிவிக்கிறேன் (அதாவது, இவன் முதலில் பிரம்மசரிய ஆசிரமத்தை எடுத்து அது பூரணமாகுமுன் அதைவிட்டு மகாயோக்கியனைபோல கிரகஸ்தாசிரமத்துக்கு வந்து அக்கினிசாக்ஷியாய் ஒரு ஸ்திரீயை விவாகம்செய்து அவளிடமாய் பிள்ளைகளையும்பெற்று றொம்ப அசக்தம்போல் அபிநயம்பண்ணிக்கொண்டிருந்த திருடன்போலே சொல்லிக்கொள்ளாமல் ஓடிபோனான் அவர்களும் இவனைவெறட்டிக்கொண்டுபோய் கண்டுபிடித்து யேன் ஓடிவந்தாயென்று கேட்டதற்கு இவன் வேலைக்கள்ளிபிள்ளையின்பேரில் சாக்குச் சொல்வதுபோல் உங்களுக்கு சம்பாதித்துபோட எனக்கு சக்தியில்லை அதனால் ஓடி வந்தேனென்று சொன்னான் அதற்கு அவர்கள் நீ சம்பாத்தியம்பண்ண தேவ இல்லை வீட்டிலேயே வந்து கிடந்து கழி என்று சொன்னதை கேட்டு இவன் மோக்ஷ சுகத்தை அதி சுலபமாயும் சுருக்காயும் இவ்விடத்திலிருந்து அடையப்போகிறேனென்று சொன்னதை அவர்கள் கேட்டு பிரத்தியக்ஷமாயும் நிஜமாயுமிருக்கிற விஷய சுகத்தை விட்டு பரோக்ஷமாயும் பொய்யாயுமிருக்கிற மோக்ஷசுகத்தை நினைப்பது உள்ளங்கையிலிருக்கிற பாயசத்தை சாப்பிடாமல் எட்டக் கூடாத முழங்கையை நக்குகிறவன் போலும் கையிலிருக்கிற பழத்தை விட்டு தொறட்டுப் பழத்துக்கு தொண்ணூந்திருப்பவனைப் போல் இருக்கிறதென்று கேவலமாய் நினைத்து சீசீ யென்று சொல்லும்போது இவன் நான் உங்களை விடவில்லை உங்களுக்கு வேண்டிய சமயங்களில் வந்து சேருகிறே னென்று ஏமாத்தி கிரகத்துக்கு போகச் சொன்னான் அதன் பிரகு வானபிரஸ்தனென்று வேஷம் போட்டுக்கொண்டு யேக தேசத்தில் கொஞ்ச வேளைக் கிறகத்துக்கு வருகிறது போலவும் வஞ்சனை பண்ணிக் கொண்டிருந்து கடைசியில் சன்னியாசி ஆசிரமமாகி இன்சால் மெண்டு பெற்று இவர்கள் யாதொரு விதத்திலும் தன்னை சேறாமலிருக்கும்படி செய்து கொண்டு அந்த சன்னியாசாசிரமத்திலும் விதித்த

கருமங்களை ஒன்றும் செய்யாமல் நீக்கும்பேபே, மீதாதக்கும் பே பே, என்று சொன்ன கோமுட்டி கதைபோல் அந்த சந்நியா ஆசிரமத்தையும் மோசம் பண்ணி அதிவரணு சிரமி என்று பே வைத்துக்கொண்டு இவனைப் போல் காக்கன் போக்கனுயிரு கிற சில போக்கிலிகளை சேர்த்துக் கொண்டு விதி நிஷேத மன்ன யில் எப்போதும் மாயாவாதமான வேதாந்தத்தை பாடிபடி துக் கொண்டு லகிரி கொண்டவனைப் போல் திரிவதால் இவனை விதிநிஷேதமாகிற விலங்கில் போட்டு குடும்பமாகிற படுகுழியில் இருத்தி போட வேணுமென்றும் ஏனென்றால் இவன் முக்தி யாகிற விலங்கையும் விதேக முக்தியாகிற குழியையும் இச்சித் திருப்பதால் இப்படிப்பட்ட குற்றம் செய்த இவனை எல்லாருக் கும் தெரியும்படியாக தெண்டிக்க வேணுமென்று எதிர் வைக் கில் சொன்னவுடன் கோரட்டாரவர்கள் வைராக்கியனை பார்த்து இதற்கு என்ன சமாதானம்? சொல்லென்று கேட்டவுடன் வைராக்கியன் சொல்லுகிறான்.

வி.—இப்போது கோறட்டாரவர்களால் கேட்டதற்கு சமா தானம் நான் சொன்னதின் மேல் தங்களால் நான்தான் தெண் டிக்கப் படிவேனே அல்லது யெதிரிகள் தான் தெண்டிக்கப்படு வார்களோ அது ஒரு நிமிஷத்துக்குள் வெளியாகும் (அதாவது) இந்த அவிவேகத்திறுதி வைக்கில் என்னிடம் வந்து மோசமாய் சம்சாறுதி துக்கங்களையும் ஸ்திரி புத்திராதிகளிடத்தி லிருக்கிற அசுத்த அனர்த்தங்களையும் மறைத்து என்னையும் மாமனார் வீடாகிற விஷயத்தில் ஆசக்தி வைக்கும் படியாக மயக்கி வெகு காலமாக வருத்தப்படுத்திக் கொண்டிருக்கும் போது தெய்வ கெதியாய் என் பிதாவாகிய விவேகன் வந்து உனக்கு ஸ்திரி முதலான விஷயத்தில் சுகமில்லை உன்னுடைய சுகத்தையே விஷயத்திலிருக்கிறதாக நினைத்து வெறும் பெலும்பை கடித்து நாய் தன் வாயிலுண்டான ரக்தத்தை எலும்பிலிருந்தே ரக்த் தம் வருகிறதாக நினைப்பது போலவே தவிற வேறில்லை அப்ப டிப்பட்ட ஸ்திரிகளினிடத்தில் என்ன சுகமிருக்கிறது அதை கொஞ்சம் தெரிவிக்கிறேனென்றும் (அதாவது) மயிறில் வாசனை

இருந்தால் புஷ்பம் சூட்டிக்கொள்ள தேவை இல்லை முகத்தில் அழகு இருந்தால் மஞ்சள் எண்ணை பூசிக்கொள்ள தேவை இல்லை கண்ணில் அழகு இருந்தால் மையிட்டுக் கொள்ள தேவை இல்லை வாயில் அழகு இருந்தால் தாம்பூலம் போட்டுக் கொள்ள தேவை இல்லை பல்லில் அழகு இருந்தால் காவியேத்த தேவை இல்லை சரீரத்தில் அழகு இருந்தால் பச்சிலைப் பொட்டு குத்திக்கொள்ள தேவை இல்லை பின்னும் ஆனைக்கி உருக்காங்கல்லுபோட்டு தேய்ப்பதுபோல் மணல்தண்ணீர் அரைப்பு முதலானது தேய்ந்து முழுகவும் தேவை இல்லை பின்னும் குஹ்ய ஸ்தானங்களில் சுவாசனை இருந்தால் அவர்கள் மல மூத்திர விஸர்ஜனை பண்ணும்போது காக்கையை போல் நாலு பக்கத்திலும் பயந்து சாய்ந்து சாய்ந்து பார்த்துக் கொண்டு கச்சேரிக்கி அவசறமாய் போகிற உத்தியோகஸ்தன் பாதி வெந்ததும் வேகாததும் பாறுமல் மேல்வாயில் போட்டுக் கொண்டு ஓடுவது போல் ஸ்திரிகளும் பாதி மல மூத்திரங்களும் போனதும் போகாததும் பாறுமல் கீழ் வாயை மூடிக்கொண்டு சொச்ச மலமும் அடைப்பதற்காகவே ஓட்ட கோமணத்தாலும் ஒரு அரசிலையாலும் மூடவேண்டிய ஸ்தானத்தை மூடி மூன்று ஏழு முழ இடலமுள்ள சேலை கட்டிக் கொள்வதென்று ஓடி வந்து மகாசுசீகரமுமாயும் ஆசாரமாயுமிருப்பது போல் அபி நயங்காட்டியும் அடை பீயை அமுக்கி வைத்து சீலை சுத்தி கொண்டு யிருக்கிறார்கள் பின்னும் இவர்களிடத்தில் சுசப்த மிருந்தால் பாட்டு கேழ்க்க தேவை இல்லை. சுஸ்பரிச மிருந்தால் மெதுவான படுக்கை முதலானது வேண்டியதில்லை சுபரூபமிருந்தால் ஆபரணாதிகளை ஆசைப்பட்டு அணிந்து கொள்ள தேவை இல்லை சுரசம் இயற்கையாக யிருக்குமானால் ஷடு ஆறு ரசங்களை புசிப்பதற்க்காக அரிசி முதலானதுகளை இடித்து காச்சி புகையிலிருந்து சுட்டு பாணியாரங்களை பண்ணி அங்க தேவை இல்லை இயற்க்கையாய சுவாசனை இருந்தால கத்தாழை நாற்றம் வேர்வை நாற்றம சிக்கு நாற்றம ரத்தம் முதலான தோடே கூடிய சாக்கடை நாற்றம போல் அனேக நாத்தங்கள் தூர்கெந்தமாக இருப்பதால் இன்ன துர்கெந்தமென்று பிரிக்கக் கூடாத துர்கெந்தத்தை போக்கடிப்பதற்க்காக புனுகு ஜவ்வாது

சந்தண அத்தர் பன்னீர் முதலான மணத்தால் மறைக்க தேவை இல்லை என்றும் இது முதலான ஸ்திரி விஷயத்தி லிருக்கிற தோஷத்தையும் சொல்லி பிற்பாடு இது போலவே திரவியத் திலிருக்கிற தோஷத்தையும, என பிதா விவேகன் காண்பித் தார் (அதாவது) திரவியமானது மகாவிசுவாசி, எதிருலென்றல் மாப்பிள்ளைபோல் என்றறிக (யெப்படியெனில) ஒரு மாப்பிள்ளை மாமனார் வீட்டுக்கு போகும்போது தன் சிநேகிதனை கூட்டிக் கொண்டு போக மாமியார் பக்ஷியாதிகளை சாப்பிட மாப்பிள்ளை யை மட்டும் ஜாடைபண்ணி கூப்பிட அவன் தன் சிநேகிதன் யெழுந்திருந்தால நான் வருவேனென்று சொனனதை கேட்ட மாமியாரும் மாப்பிள்ளைக்காக அவனையும உபசரிதது கூட்டிப் போவது போல பணம் வைததுக் கொண்டிருக்கிற புருஷ னுடைய வீட்டுக்கு கள்ளனாகிய மாமியார் வநது பணமாகிய மாப்பிள்ளையை கூப்பிடும்போது இந்த பணமாகியமாப்பிள்ளைதன் சிநேகிதனாகிய இவன் பிராணன வெளியேயிருலநான வெளியே வருவேனென்று சொல்லி பிராணனை முனனே விட்டுகொண்டே பணம் கள்ளனாகிய மாமியாரிடததில போய சேர்வதால பணத துக்கு மேல் பிராணுபகாரி இல்லை என்று இது முதலான உப தேசத்தை செயதபிறகு நான இவாகளிடததிலுள்ள தோஷங களை தெரிந்து இருந்தும அவர்களது பிழைபபு கெடுமென்று அதுகளை வெளி எடுத்து காணபிக்க வேண்டாமென்று மரி யாதையாய் மனதில்மட்டும் வெறுத்து விலககி இருக்க இப் போது இவர்களாலேயே அந்த தோஷங்களை யெடுதது கொஞ் சம் சொல்லவேண்டியதாய் வந்தது அது எதுபோலவெனறல ஒரு யோக்கியஸ்திரியிடத்தில் ஒருவிபசாரிபோய் அருவ அவளை நிருகரித்து அவள் தோஷத்தை வெளியில் சொல்லாமலிருக்கும் போது அவளாகவே இவன் என்னைப்பற்றி இழுத்தானென்று சொன்னதின் பேரில் அவள் செய்த தோஷததை எப்படிச சொல்வாளோ அப்படி போல கொஞச தோஷம் சொன்னேனே தவிற முழுமையும் சொல்வதற்கு இரண்டாயிரம் நாக்கை யுடைய ஆதிசேஷனும் மாகாது ஆகையால் கோர்ட்டாரவர்கள் தயவு செய்து நியாயத்தை யோஜிததுகொள்ள வேண்டியது.

அதை கேட்ட கோர்ட்டாரும் இந்த சாக்ஷி ரொம்ப யோக்கிய னென்றும் சத்தியவா னென்றும் (Diary) டைரி போட்டு வாதிக்கி ஒத்தாசையாய் இந்த கேசுமுடியும் வரையில் கூடவே சகாயமா யிருக்க வேணுமென்று முந்தி சாக்ஷியை போலவே உத்திரவு செய்தார்.

3-வது சாக்ஷியாகிய சமாதி ஷட்க்கர்களை ஆஜர் செய்யும் படி கூப்பிட்டு எதிரி வைக்கீலால் பிரமாணம் கேட்டு விசாரிக் கப் படுகிறது.

கே.—நீங்கள் யார் உங்கள் பேரென்ன.

வி.—சமன், தமன், உபரதி. திதீக்ஷை. சிரத்தை. சமா தனன் இப்படி பேரை அடைந்த புலலிங்கமான சமன் தமன் சமாதனன் என்பதான மூன்று பிள்ளைகளும் உபரதி திதீக்ஷை சிரத்தை என்ற ஸ்திரிலிங்கமான மூனறு பெண்களும சேர்ந் திருக்குறோம்.

கே.—நீங்கள் யாவரும் யாருடைய பிள்ளைகள்.

வி.—நாங்கள் யாவரும் வைராக்கியனுடைய பிள்ளைகள்.

கே.—முதலாவது பிள்ளையாகிய சமனை பார்த்து எதிரி வைக்கீல் கேழ்க்கிறார்.

நான் எங்கிற ஆத்மாவை உனக்கு தெரியுமா.

வி.—தெரியும்.

கே.—என்னவிதமாய் தெரியும்.

வி.—நீங்கள் எல்லோரிலும் அவர்விளங்குவதால் தெரியும்.

கே.—நாங்களிருக்கிற விடத்தில் அவர் விளங்காமல் நாங்க ளில்லாதவிடத்தில் விளங்குவதர்க்கு காரணம் என்ன.

வி.—நீங்களி ருக்கும்போது உங்களுடைய குழந்தைக ளும் ஸ்திரிகளும் உங்களம்மாள் சின்னம்மாள் முதலான கூட் டத்தார்களெலலாரும் இருப்பார்கள் அதனால் அவர் விளங்க வில்லை.

கே. அவர்களிருப்பதால் ஆத்மா விளங்குவதர்க்கு அவர் களால் என்ன கெடுதி அதைச் சொல்லு.

வி.—உங்கள் குழந்தைகளாகிய ராகம் என்பவனால் மகா புருஷனாகிய ராவணனை கொன்றதையும் துவெஷமென்ற குழந்தையால் ஹிரணியனை கொன்றதையும் காமனென்றமைந்தனால் நரகாசுரனை கொன்றதையும் குரோதனென்ற குமாரனால் பகாசுரனையும் லோபியென்றபுத்திரனால் துரியோதனனையும் மோகனென்றபிள்ளையால் தெசரதனையும் மதமென்ற குழந்தையால் கார்த்தவீரியனையும் மாச்சரியமென்றமகனால் சிசுபாலனையும், ஈருஷையென்ற சேயால் அருணாக்ஷதனையும் அசூகை என்ற செல்வனால் பவுண்டிரீக வாசுதேவனையும் டம்பமென்ற புத்திரனால் பூர்வ ராஜனையும் தர்பமென்ற புதல்வனால் தசகெர்வனையும் அகங்காரனென்ற அருமை பாலனால் மதுகைடவனையும் ஜயித்த ஒவ்வொரு குழந்தைகளும இப்படிக் கொற்ற அதிகூரர்களான அனந்தம் பேர்களை கொன்றிருப்பதாலும் இந்த மும்முக்ஷ வான ஏழையாயிருக்கிறவாதியை இவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்திருக்கும் போது இவர்கள் கெடுப்பது ஆச்சரியமென்ன இவர்கள் தவிரவும் ராஜஸதாமஸ விருத்திகளான உங்கள்ஸ்திரீகள் ஒரு விஷயத்தை விட்டு மைத்தொரு விஷயத்தில் விபசாரியைப்போல் விபசரிப்பதால் பதிவிருதையானவள் விபசாரிகூட்டத்தில் விளங்காதது போல் சித்தான ஆத்மா ஜடமான இந்த ரஜஸாதி விருத்திகளுள்ள இடத்தில் விளங்கமாட்டார். யெப்படியெனில், இருட்டா இருக்கும்போது பதார்த்தம் விளங்காதே அப்படி அவித்தை முதலான உங்கள் தாய்மார்களிருக்கும்போது ஆத்மா விளங்கமாட்டார்.

கே.—அந்த ஆத்மாவுக்கு சுகம் சுவபாவமாக இருந்தால் எல்லாவிடத்திலும் ஏன் காணப்படவில்லை.

வி.—பூமி ஜலம் முதலான வஸ்துக்களுக்கு குளிர்ச்சி சுவபாவமாக இருந்தாலும மத்தியான காலத்தில் அந்த குளிர்ச்சி ஏன் காணபபடவில்லை சொல்வதர்க்கு வெப்பலால் தோற்றவில்லை என்பதுபோல் ராகாதிகளாயிருக்குற உங்களால் தோற்றவில்லை என்றார்கள்.

கே.—நல்லது இந்த ஜீவன் அதிஷ்டானமான ஆத்மாவில் ஏன ரமிக்கவில்லை சொல்.

வி.—ஒரு விட புருஷன் தாசியை கொண்டுவந்து வைத்து ஒரு யோக்கியுள்ள புருஷனை அவளுடன் சேர்த்தால் விடனானவன் சேர்ந்த ஸ்திரியோடே எப்படி சேரமாட்டானோ அப்படி போலே நீங்களாகிய விடர்கள் விஷயங்களாகிற தாசியை கொண்டுவந்து இந்த ஜீவனை மயக்கி மோசப் படுத்தினதால் இவன் நிஜஸ்வரூபத்தால் ரமிக்கவில்லை யென்று சொன்னதை கோரட்டாரவர்கள் சரி என்று அங்கீகரித்து இவன் முக்திக்கு முக்கிய காரணனென்று (Present) பிரசெண்டு கொடுத்து பிற்பாடு அதன் பின் தமன் ஆஜராகி சொல்லுகிறான் என்னை யெதிரி வைக்கீல் உன்னுடைய கேட்பதுபோல் என்னையும் கேழ்க்கட்டுமென்று சொன்னதின்பேரில் யெதிரி வைக்கீல் கோறட்டாறை பார்த்து தெரிவிக்கிறான் (யதாவது) முதலில் ஆஜராகி வந்து சாக்ஷி சொல்லிய சமனானவன் உள்ளே யிருக்குற ருகாதி அகங்காராதி வறையிலுள்ள குழந்தைகளை கொன்றானே அப்படிப்போல் இந்த தமன் எந்த குழந்தைகளை கொல்ல வந்திருக்கிறானோ தெரியவில்லை ஆனாலும் அவன் வாய்மொழியை கேட்டபின் தெரிந்து கொள்ளலாமென்று கேழ்க்கிறான் தமனை பார்த்து நீ என்ன சொல்லுகிறாய் சொல்லு.

தமன் சொல்லுகிறான்.

உங்களில் வெளியிலிருக்கிற ஞானேந்திரியம், ஐந்து கரமேந்திரியம் ஐந்து ஆக பத்து குழந்தைகளையும் கொளுத்திவிட்டால் தான் ஆத்மா விழங்குவார்.

கே.—கொழந்தைகளை கொல்லும் கொலே பாதகா அப்படி கொல்லுவதற்கு காரணமென்ன இருக்கிறது சொல்லு.

வி.—கரோத்திரனெங்கிற பிள்ளை தன் சப்தமாகிற விளையாட்டினால் ஈஸ்வரன் முதல் எரும்பு வறையில் சகல ஜீவனையும் கெடுப்பதும் தவிற புத்துக் குள்ளிருக்கிற பாம்பையும் புதருக்குள்ளிருக்கிற மானையும் ஆகாசத்திலிருக்கிற சகலவித பக்ஷிகளையும் கொல்லுவதால் அனேகம்பேர்களை கொன்று கொண்டிருக்கிற ஒருவனை கொன்றதினால் என்ன தோஷம் இப்படியே துவக்

கிந்திரியனுடைய ஸ்பரிசமாகிற விளையாட்டினால் அவன் பாதி உடலை இழந்ததும் மகாவிஷ்ணு மகிமையும் இழந்ததும் பிரம்மாதலையை இழந்ததும் இந்திரன் சகஸ்ர பகனானதும் பின்னும் கெற்பத்தில் விழுந்து கொள்வதும் திரிலோகத்திலுமுள்ள ஜீவர்கள் எல்லாரும் இப்படியே புத்திர துக்கத்தையும் வியாதிகளையும் அவமானத்தையும் கொலை முதலான கலகத்தையும் இன்னம் அநேக அனர்த்தங்களை அடைவதால் இவனையேன் கொல்லக்கூடாது.

பின்னும் சட்சந்திரிய மென்கிற குழந்தையின் தன் ரூபமாகிற விளையாட்டினால் சகலரும் விளக்கில் விட்டில் பூச்சி நசிப்பதுபோல் நசிப்பதால் இவனையும் யேன் கொல்லக்கூடாது.

ரசனேந்திரிய என்கிற குழந்தையின் தன் ரசமென்கிற விளையாட்டினால் மீன் தூண்டியில் ரசத்துக்காக அகப்படுவது போல் சகலரும் கெட்டு போவதால் அப்படி கொத்தவனை யேன் வதை செய்ய கூடாது.

இப்படியே கிறுணேந்திரிய னென்கிற பிள்ளையால் தன்னுடைய கெந்த விளையாட்டினால் கல்லேகூட துளைக்க வல்லமையுடைய வண்டை ஒரு புஷ்ப வாசனையினால் கட்டிக் கொன்று போடுகிறான் அவனை யேன் கொலை செய்யகூடாது.

பின்னும் வாக்கேந்திரிய னென்கிற புதல்வனை தன்னுடைய உச்சரிப்பாகிற விளையாட்டினால் சிசுபாலன் தக்ஷன் முதலான அநேக மகா சூரர்களை கொன்றவனானதால் அவனை வெட்டி விட்டால் என்ன தோஷம்.

மைத்தும் பாணிந்திரிய னென்கிற பாலன் தன்கை விளையாட்டினால் பாணபக்தன் சிஷன் முகலான வர்களையும் கெடுத்திருப்பதால் அவனை யேன் கொல்லக்கூடாது.

பின் பாதேந்திரியனென்கிற புத்திரன் தன் காலின் விளையாட்டினால் சண்டே சுவறனுடைய பிதா பிரஹலாதனுடைய பிதா முதலானவர்களுடைய மகிமையை கவனிக்காமல் கொண்டிருப்பதால் யேன் அவனை ஆக்ஞைசெய்யக்கூடாது,

பின்னும் பாயுருந்திரியனென்கிற குழந்தை கெடக்குமுதலா னதுகளைகெடுத்திருப்பதால் அவனையும் நாசஞ்செய்ய வேண்கூடா து. மைத்தொரு குழந்தையான சிச்னேந்திரியனென்பவன். தன் னுடைய காமகொழுப்பாகிற விளையாட்டினால் வெகு ஸ்திரிகளை கெடுத்துவிட்டதுபோருதென்று நினைத்து சகல இந்திரியங்க ளும் அடங்கின பின் நித்திரையிலும் சுகமாக இந்திரிய சேஷ் டைகளால் பாதையில்லாமலிருக்கும் காலத்தில் சொப்பனத்தில் அவன் சேஷ்டையால் கெடுப்பவனை இப்படிக்கொத்தபிள்ளை களை மென்னியை பிடித்துதிருத்து கொண்டதனால் யென்னபா தக மிருக்கிறது என்று சொன்னவுடன்.

கோறட்டார் சரி என்று அங்கீகரித்து இவனுக்கு இந்திரி யதுஷ்ட்ட நிக்கிரகசூரனென்று சவாசுபட்டங்கொடுத்தார்.

அதன் பின் உபரதி என்கிறபெண் ஆஜருனவுடன் யெதிரி வைக்கில் கோபத்தோடு நீ சகலகருமங்களையும் கெடுக்கப்பட்ட பாதகியல்லவாவென்று கேட்டார்.

வி.—அதற்கு உபரதியானவள் சொல்வதாவது, அபோபாத கா சகலருக்கும் தொழிலாலேதுக்கம் வருவதும், தொழிலில்லாத சுழுப்தியில் தூஷணிப்பூதாவஸ்தை முதலானசமயத்தில் சுகமா யிருப்பதும்தவிர தொழில் ஆரம்பத்திலும், நடுவிலும், அந்தியத் திலும், முடிவிலும் துக்கமாயிருப்பது அனுபவமாயிருக்கும்போ து தொழிலைவிட்டு சும்மாநிற்கிற என்னை பாவியென்று சொன் னது கொலைபண்ணுகிறவன். சுகமாயிருப்பவனைபார்த்து பாவி என்று சொல்வதுபோலிருக்கிறது. இதை கேட்ட கோரட்டா ரும் இவள் சொல்வது சரியென்று அங்கீகரித்து இவள் ஆத் மாவின் அசங்கதன்மைக்கி அடுத்த பட்டமகிஷியென்று மகிமை யை கொடுத்தார்.

அதன் பின் திதிக்ஷை என்ற பெண் ஆஜருனவுடன் யெதிரி வைக்கிலுக்கு அதிககோபமுண்டாகி கோரட்டார் முன்பாகவே இவள் சண்டி முண்டி மானம், ரோசம், சூடு, சுரணை முதலான மரி யாதை கெட்டவளென்று வாயிக்கிவருதவார்த்தைகளை சொல்லி வைதவைதைக்கேட்டு திதிக்ஷை சொல்வதாவது.

வி.— அடா மூடா பரமார்த்தத்தில் தானே சாக்ஷியானதால் தனக்கொரு சுகதுக்கமுமில்லை. விவகாரத்தில் பிராரப்த்தகாமப் படி சுகதுக்கம் வந்தே தீருமென்கிற நிச்சயமன்னியில் உங்களைப்போல் சதா அழுதுகொண்டிருப்பதா லிலாக்கியம், அல்லது எங்களுடைய தன்மைப்படி இத்தனையும் மாயமயமல்லவோ உள்ளபடி முடியுமென்று தீரமாயிருக்கிறதே லிலாக்கியம் என்று சொன்னதை கேட்ட கோரட்டார் இவளுக்கு சகலசத்குணதலவி என்று நாமத்தை கொடுத்தார்.

அதன் பின் சிரத்தையென்கிற பெண் ஆஜரானவுடன் எதிரி வைக்கில் கடுங்கோபமாய் இவள் சகலவேத சாஸ்திரங்களையும் அதை யறிந்த பெரியோர்களையும் விட்டு சோர ஸ்திரீயானவள் சகலபெந்துக்களையும் சகல மானம் முதலானதுகளைவிட்டு சோர புருஷனையே தெய்வமென்று நம்பி கெட்டதுபோல் சத்குருவையும் வேதாந்த சாஸ்திரத்தையும் பிடித்துக்கொண்டு கெட்டலைகிறவளென்று சொன்னதைகேட்டு, சிரத்தையானவள் மருமொழி சொல்லுகிறாள்.

வி.— அடே அயோக்கியா கேளு, நான் ஆத்மசாஸ்திரமான வேதாந்தசாஸ்திரத்தையும் ஆத்மநாதனை கிருபையும் நம்பின நானுகெட்டவள். அனாத்மசாஸ்திரங்களையும் ஆகமபுராணாதிகளையும் அனாத்மசாஸ்திரக்ஞானிகளையும் பிடித்துகொண்டு தட்டுவாணியானவள் நாழிகைக்கி ஒரு நாயகனை கைபிடித்து கூடுவதுபோல் நீங்களும் ஆசையாகிற காசுக்காக நாழிகைக்கி ஒரு சாஸ்திரமும் நாழிகைக்கி ஒரு குருவையும் அடைந்து சாஸ்திரத்தை கேட்டு குருவும் சிஷனும் பூரி தக்ஷணை, அபிசிரவணதெக்ஷணை, கல்லெடுப்புதெக்ஷணை, ஆமசிருத்ததெக்ஷணைகள் முதலானதுகளை வாங்குவது கொடுப்பதையும் குறித்து மனஸ்தாபப்பட்டுகொண்டும் அலைந்து அழுதுகொண்டிருக்கிற நீங்கள் என்னை கேலிபண்ணுவது சம்போகம் பண்ணி இழுத்துக்கொண்டிருக்கிற நாயிகளானது சிம்மாசனத்தில் ராஜாவோடு கூடியிருக்கிற பட்டஸ்திரீயைகேலிபண்ணுவதுபோலிருக்கிறதென்று சொன்னதைகேட்ட கோரட்டார் இவள் பிரம்மசாக்ஷாத்காரம்பண்ணிவைப்பதற்கு

யோக்கியசாதகியாயிருக்கிற சிரோமணிபோல் விளங்குகிறவனெ ன்று முகார்க்கொடுத்தார்.

அதன் பிறகு சமாதானனென்கிறவன் ஆஜ்ஞனவுடன் பெ திரிவைக்கில் உக்கிறமான கோபத்தோடு நீ ஸ்திரி புருஷர்கள் கோபித்துக்கொண்டிருக்கிறதை ராஜிசெய்கிறதூதன்போல் ஜீவ னையும், சிதாக்கிரமான சித்தவிருத்தியும் ஒன்றுப்போக சமாதா னம்செய்கிற படவாபபலல்லவா? நீ யென்று கேட்டவுடன் சமா தானம் மறுமொழி சொல்லுகிறான்.

வி.—அடே நீர் மூடா கேளு! உங்களைபோல் தாய்களையும் பெண்களையும், பெண்டிகளையும், சகோதரிகளையும் கண்டபேருக் கெல்லா கூட்டிவிடுகிறதுபோல் உங்கள் தாய்களான அவத்தியா வர்க்கங்களை சுழுப்த்தியிலிருக்கிற பிறக்கியனிடத்தில் தத்சுகார் த்தமாய் கூட்டிவிடுறதும் ஜாக்கிரத்தில் பெண்டாட்டிகளானரு காதிகளையும் பெண்களான இந்திரியங்களையும் சப்தாதி விஷய விடபுருஷனிடத்தில் தத்சுகார்த்தமாய் கூட்டிவிடுகிறதும், சுவப் பனத்தில் வாசனுபுருஷர்களிடக்தில் உங்கள் சகோதரியானம னோவிருத்தியை கூட்டிவிடுகிறதும் படவாத்தனமல்லவா. பேயா பெண்ணுயிருக்கிற ஷை சித்தவிருத்தியையும் மாப்பிள்ளையாகிற ஜீவனையும் சுவரூபானுபவமாகிறரதியைசெய்ய சமாதானம் செய் வது படவாத்தனமா கோரட்டாரே உத்திரவுகொடுக்கவேணு மென்று சொன்னதும் கோரட்டாரும்.

அதை சரியென்று ஒப்புக்கொண்டு இவனுக்கு சாதுசிரே ஷ்டனென்று நாமத்தைக்கொடுத்தார்.

இதன்மேல் வாதி திரப்பு 4வது சாக்ஷியாகிய விசுவாசன் யெ ன்பவன் ஆஜ்ஞனவுடன் எதிரி திரப்பு வைக்கீல் கேழ்க்கிறார்.

கே.—நீ அக்ஞான பூமிகளை குரித்து அலைந்து ஸ்திரமான தன் வீட்டைவிட்டு எரவல்வீட்டுக்கு தொண்ணுந்திருக்கிற மூட ன்போல் நீயும் புத்திகெட்டவனென்று சொன்னவுடன்.

வி.—நரகம்போலிருக்கிற அக்ஞான பூமியை விட்டு அமு ருதம்போலிருக்கிற ஞான பூமிக்குப்போவது குறைவாக நினைப்

பதை மூடத்தனமல்லவா? எதனாலென்றால் பிறந்தது முதல் மரணம் வரையிலுள்ள மூடன் அனுபவத்துக்குச் சமானமாயிருக்கிற ஏழுவகையான அக்ஞான பூமிகளுக்குள் பிறந்து ஜாக்கிரமானது பிணம்போல் மயங்கி கிடக்கிறதும் ஜாக்கிரமானது துருத்தி மூச்சுபோல் அகம் விருத்தி மாத்திரமாய் மகா ஜாக்கிரமானது பிசாசுபோல், அகமிதமென்னும் சகல கல்பனை வசத்வமாயும் ஜாக்கிர ஸ்வப்பனமானது, பைத்தியம் கொண்டவனைப் போல் தன் போக்காய் போவதும், ஸ்வப்பனமானது பிசாசு பிடித்தவனைப்போல் தன்னை வேறு வடிவமாக பார்ப்பதாயும், ஸ்வப்பன சாக்கிரமானது. பிசாசின் பாதைவிட்டுப்போன பின் அதை பின்னாலே சொல்லுகிறவன்போலவும் சுழுப்தியானது மரணம்போல் ஒன்றும் தெரியாமையும் இருக்கிற அவஸ்தைகளையும் விட்டு அந்த அவஸ்தைகளைச் சேர்ந்த துஷ்டர்களையும் விட்டு சாதுக்களையும் சத்சாஸ்திரங்களையும் சுவேச்சை என்ற முதல் பூமியை அடைவது நீச்ச சேவையைவிட்டு இராஜசேவையை செய்வதுபோலவும் குருவை யடைந்து அவருடன் சதா ஆத்ம விசாரம் பண்ணுவதான விசாரணை என்கிற இரண்டாம் பூமியானது அந்த ராஜாவோடு மந்திரி ஸ்தானத்தில் சமனாயிருந்து வேலை பார்ப்பதுபோலவும் விஷய விர்த்தியுடன் ஏகாந்தத்தில் பிரம்மாப்பியாசம் செய்வதான தனுமானசி என்ற மூன்றாம் பூமியில் வெளி ஜனங்களை விட்டு அந்தப்புரத்தில் சுவராஜ்ஜிய பட்டாபிஷேகம் செய்துகொண்டு ராஜகாரியத்தையே இடைவிடாமல் பார்த்துவருவதுபோலவும் தன் ஆத்ம ஸ்வரூபத்தை சாக்ஷாத்காரமாய் அடைந்ததான சத்துவாப்தி என்கிற நான்காம் பூமியில் ஸ்வயம் ராஜாவாய் முக்தி காந்தையோடே கூட சிம்மாசனத்திலிருந்து செங்கோல் செலுத்துவது போலவும் சமாதியிலிருந்து பிறப்த போக மாத்திரத்துக்கு வெளியில் வருவதான அசம்சத்தி என்கிற ஐந்தாவது பூமியில் முக்தி காந்தையோடே ஏகாந்தத்தில் ரமித்துக்கொண்டிருந்து திராதிக்கிற ராஜகாரியத்தை மட்டும் வெளியில்வந்து பார்த்துப்போட்டு மறுபடியும் ஏகாந்தத்தில் ரமித்திருப்பதுபோலவும் திருட சமாதி பிரயத்தனத்தால் வெளி வருவதான ஆறாம் பூமியான

பதார்த்தா பாவனை ருஜ்ஜியத்தையே மறந்து ஜீவன் முக்தி காந்தியோடு அபேதமாய் ரமித்துக்கொண்டிருக்கும்போது பிற ருடைய பலவந்த பிரயத்தினத்தினால் வெளியில் ருஜகாரியம் க்ஷணகாலத்துக்குள் பார்த்து மறுபடியும் அந்த சுகத்துக்கே போகிறவன்போலவும் மனசுமிருப்பதுபோல் லயித்து வெளியில் வாராமலிருப்பதான துரியம் என்கிற ஏழாம்பூமியில் அந்த முக்தி காந்தியோடு ஜலத்தில் கலந்த உப்புபோல் லயித்து தன்னாலே யாவது பிறர் பிரயத்தினத்தினாலேயாவது வெளியில் வாராமலி ருக்கிற ருஜாவைப்போலவும் நித்தியானந்த பரிதமாயிருக்கிற வாழ்வை இச்சித்து பிரயத்தினம் செய்கிற நான் மூடனா கற்ப கோடி காலமானாலும் தீராத சம்சார துக்க சமுத்திரத்தில் முழு கிக்கொண்டிருக்கிற நீங்கள் மூடர்களா என்பதை சர்வக்ஞராய் சர்வஜீவ தயாபரனாய்,ஸர்வராதி பஞ்சனராய், சர்வலோகசரண்ய ராய், கருணைக்கடலாய் திருலோகத்திலுமுள்ள சகலர்களுக்கும் ஞானக்கண்ணை கொடுக்கிறவனாயுமிருக்கிற சத்குருநாதனாகிற கோர்ட்டார் சன்னதியில் நிமிஷத்தில் வெளியாகுமென்று சொ ன்னபின் கோர்ட்டாரும் அதைக்கேட்டு ரொம்ப சந்தோஷி த்து எவ்வளவு நமக்கு திருப்தியாக ருசுவாவதற்கு விசாரணை செய்யவேண்டுமோ அதற்கு ஜாஸ்தியாகவே ருசுவானதும் தவிர வாதி திரப்பு ஒவ்வொரு சாக்ஷிகளுடைய வாக்குமூலமானது சுருதி யுக்தி அநுபவங்களுக்கு ஒத்ததாகவும் இதுவரையிலும் ஒருவனாலும் கேழ்க்கப்படாத ரகசியமாயும் இதைக்கேட்ட மாத் திரத்தில் பரம மூடன் கூட பரமபதத்தை அடையத்தக்கதாயு மிருக்கிற இந்த அதிசயத்தைகோர்ட்டார்கேட்டு இவனே முக்தி அரசுக்கு அரசனாக யோக்கியனென்று விளம்பரம் செய்து போட்டு இனி சாக்ஷி விசாரணை போதுமென்று சொல்லி (argument) ஆர்ஜிமெண்டு செய்யும்படி உத்திரவு கொடுத்தார்.

அதன் பேரில் எதிரிவைக்கில் அகம்பிடித்த அனாத்ம நாத ன் (argument) ஆர்ஜிமெண்டு செய்கிறான்.

வாதிதிரப்பு சாக்ஷிகள் வைக்கில் (Cross Examination) கிறாஸ் யெக்சாமினேஷனாலும் அவர்கள் சாக்ஷிகளாலும் அசித்தி

ப்படுத்தியும் உபநிஷத்து முதலான தஸ்தாவேஜுகளால் எங்கள் தஸ்தாவேஜிகளை அசுத்தப்படுத்தி இருந்தாலும் இப்போது வாதிதிரப்பிலுள்ள தஸ்தாவேஜிகளுடைய வித்தியாசத்தையும் மற்ற அந்த சாக்ஷிகள் சொல்லியபேதங்களையும் பத்தி கொஞ்சம் தெரியப்படுத்திக்கொள்கிறேன். (அதாவது) வாதிதிரப்பிலுள்ள சுருதிகளாகிற தஸ்தாவேஜிகளில் முதலில் நிஷ்காம கர்மானுஷ்டானத்தால் ஈசுவரகிருபை வருமென்றும் அதனுல் சித்தசுத்தி வருமென்றும், அதனுல் நித்தியா நித்யவஸ்து விவேகம் வருமென்றும், அதனுல் இகபரலோகங்களில் வைராக்கியம் வருமென்றும், அதினுல் மனோநிக்கிரகமும் இந்திரிய நிக்கிரமும் விஷய வியாபாரத்தில் ஒழிவும் பொருமையும் சிரத்தையும் சமாதானமும் உண்டாகுமென்றும், அதனுல் மும்முக்ஷுத்துவமும் அதனுல் சத்குரு லாபத்தையும் நான்கு விதபணிவிடைகளையும் பெற்று அதன் பின் சிரவணமனன நிதித்தியாசனசமாதிமுதலான அனேகசாதனங்கள் சம்பாதிக்க வேண்டுமென்றும், மைற்றொருவிடத்தில் தன்னை அறிவதற்கு ஒரு சாதனமும் வேண்டாமென்றும், ஓரிடத்தில் ஆத்மா ஏகமென்றும், ஓரிடத்தில் அனேகமென்று, ஓரிடத்தில் பந்தமோக்ஷம் உண்டென்றும், ஓரிடத்தில் பந்தமோக்ஷம் இல்லை என்றும் இப்படி அந்தந்தவிதமாய் பைத்தியன் கொண்டவன்போல் உளரப்படுகிறது முதலில் ஆத்மாவுக்கு பந்தமோக்ஷமில்லை என்றால் பந்த நிவர்த்தியான மோக்ஷத்தைக்குறித்து இவ்வளவு மேல் சொன்ன பிரயாசங்கள் ஒன்றும் பண்ணதேவை இல்லை ஆத்மாவுக்கு பந்தமுண்டென்றால் காக்கைக்கி கருப்புப்போல் அது ஒரு நாளும்போகத்தக்கதில்லை இப்படி அனந்தவிரோதமிருப்பதால் வாதியின் பிறுதை தள்ளி எப்போதும்போல் எங்கள் அனுபவப்படி எங்கள் பக்ஷம் தீர்ப்பு செய்திருக்கிறபாமரன், கரமம், பக்திகனென்ற கீழ்கோரட்டார் தீர்ப்புப்படி சரியென்று இந்த கோரட்டாருக்கு தீர்ப்புச்செய்வது சுலபமாயிருப்பதால் அந்தபடியே தீர்ப்புச்செய்யகோருகிறேன் என்று கேட்டுக்கொண்டார்.

அதன் பிற்பாடு கோர்ட்டார் உத்திரவுப்படி வாதி வைக்கீல் (argument) ஆர்ஜிமெண்டு செய்கிறுர்.

பிரதிவாதிகளும் பிரதிவாதி வைக்கிலும் இப்படி நியாயாதி பதியான கோர்ட்டார் முன்பாகவே அவர்களது சாக்ஷிகளும் புஸ்தாவேஜிகளும் இவ்வளவு அசித்தியாய் போயிருக்கவும் எங்கள் சாக்ஷிகள் பூர்ணமாய் ருசுவாயிருக்கவும் இன்னமும் பயமில்லாமல் இவ்வளவு தைரியமாய் பேசுவதைப்பற்றி ரொம்ப ஆச்சரியப்படுகிறேன். ஆனால் இவர்களுடைய முட்டாள்தன்மையைப் பற்றியும் இளங்கன்று பயமறியாததுபோலிருக்கிற தைரியத்தைப் பார்த்து ஆச்சரியப்படுகிறேன். ஆகையால் கோர்ட்டாரவர்கள் தயவுசெய்து என்னுடைய ஆர்ஜிமெண்டையும் (argument) கேட்டு கோர்ட்டார் தீர்ப்பு செய்யும் வரையிலும் எதிரிகள் சுழுத்தி மூர்ச்சை முதலான காடுகள் குகைகளுக்கு ஓடிப்போகாமலிருக்கும்படி பத்மாசனம் முதலான கால் கட்டையும் சின் முத்திரையாகிற கைவிலங்கையும் நாசாக்கிர திருஷ்டியான காவலையும்போட்டு பந்தோபஸ்தாய் எதிரிகளை காவல்ப்படுத்தி வைக்கவேண்டியதாய் உத்திரவாகக் கோருகிறேன்.

பரமாத்மாவாகிய தன்னிடத்தில் ஒரு அக்ஞானமாவது ஆவரணமாவது விக்ஷேபமாவது யாதொன்றும் பரமார்த்தமாய் வரவுமில்லை போகவுமில்லை ஆனால் விவகாரத்தில் பிராந்தியினால் உண்டாயிருக்கிற சுவப்பனம்போலே பொய்யாய் ஒரு ஜகத்து இருக்கிறதுபோலவும் ஒரு மயக்கம் வந்திருப்பதால் அந்த மயக்கத்தைப் போக்கடிப்பதற்காகவே சுருதியானது முதலில் நிஷ்காமிய கர்மத்தால் ஈசுவர கிருபைவருமென்றும் அதினால் சாதன சதுஷ்டயம் வருமென்றும் அப்படி சாதன சதுஷ்டயமுள்ள அதிகாரி தாபத்திரய துக்கத்தால் தவிக்கப்பட்டவனாய் சத்குரு கடாக்ஷத்தில்போய் சம்சார தாபத்திரயத்தைகுறித்து விண்ணப்பம் செய்துகொள்ளவேண்டுமென்றும் குருவானவர் தயையால் உன்னையறிந்தால் உனக்கு ஜனனமரணாதிகள் இல்லையென்றும் சொல்லி தன்னை மறந்தால் ஜனனமரணாதிகள் வந்துநிற்கிறதென்றும் அதற்கு அத்தியாரோபமென்றும் அதை நிவர்த்தி பண்ணுகிற யுக்திக்கி அபவாதமென்கிற ஞாயத்தால் முக்திவற வேண்டுமென்றும் தன்னை மறந்ததாயிருக்கிற அஞ்ஞானம்மூன்று குணமாயிருக்கிறதென்றும் அதில் சத்துவகுணத்தில்சேர்ந்த பிர

ம்மம் ஈசுவரனென்றும் ரஜோகுணத்தைச் சேர்ந்த பிரும்மம் ஜீவனென்றும் தமோகுணமே ஆவரணம் விக்ஷேபமென்றும் இதில் ஆவரணம் ஆத்மா னாத்மாக்களின் பேதம் தெரியாமல் மறைத்ததென்றும் விக்ஷேபம் மூன்று குணத்துடன் பஞ்சபூதத்தை உற்பத்திசெய்ததென்றும் அந்த சூக்ஷ்ம பூதங்களின் சத்துவகுணவியஷ்டி சமஷ்டியிலிருந்து ஞானேந்திரியமும் அந்தக்கரணமும் உண்டாச்சுதென்றும் ரஜஸில் வியஷ்டி சமஷ்டியிலிருந்து கர்மேந்திரிய பிராணவாயுவு உண்டாச்சுதென்றும் தமோகுணத்தில் பஞ்சீகரணமான ஸ்தூலபூதமுண்டாச்சுதென்றும் அதில் நின்று உலகங்களும் சரீரங்களும் கல்பனையாச்சு தென்றும் விவேகமாயையினாலே அவிவேகமாயையைகாலில்பற்றினசேத்தை சுத்தஜலத்தால் கழுவுவதுபோல போக்கடிக்கவேண்டுமென்றும் இந்த சுத்தாசுத்தமாயையினாலேயே ஜீவர்களுக்கு ஏழு அவஸ்தைகள் பிராந்தியினாலே உண்டாயிருக்கிறதென்றும் தசம திருஷ்டாந்தத்தால் தன்னிடத்தில் ஏழு அவஸ்தைகளும் கூடுமென்றும் அந்த தசமன் தானே தசமனென்று அறிந்ததுபோல் துவம்பத விசாரத்தால் பஞ்சகோசங்களை நேதிசெய்து சச்சிதானந்தமாகிய சாக்ஷியே நீ. நீயே சாக்ஷி என்றும் அறிவுக்குவேறே அறிவில்லை என்றும் வாச்சியமான கல்பிதத்தில் பேதமேயல்லாமல் லக்ஷியத்தில் பேதமில்லை என்றும் சொன்னபிரகாரம் அவனும் கூட சத்பிரும்மங்களை ஐக்கியமாய் அனுபவித்தானென்றும் திரும்ப அக்ஞான சம்சயவிபரீதங்களாகிற பிரதிபந்தங்களால் ஞானம் ஸ்திரப்படாமலிருந்ததென்றும் சிரவண மனனதியானத்தால் பிரதிபந்தம் நிவர்த்தியாய் ஞானம் ஸ்திரப்பட்டதென்றும் அந்த ஞானிகளும் பிரம்மவித்து வரன் வரீயன் வருஷ்டன் என்று கர்மத்தால் நான்குபேதமாயிருப்பானென்றும் பிரம்மவித்து அதில் அக்ஞானிகள்போல் விவகரித்தாலும் ஆகாசம்போல் ஒன்றிலும் சம்மந்தமன்னியிலிருப்பனென்றும் சஞ்சிதம் கர்மம் தீயிலிட்ட பஞ்சுபோல் ஞானத்தால் கெட்டதென்றும் ஆகாமியகர்மம் அகர்த்திருத்துவ புத்தியால் தாமரையிலையில் ஜலம்போல் ஒட்டாதென்றும் பிராரப்தகருமம் தெசமனின்புண் நாளிலாறுவதுபோல் அனுபவிக்கவேணு

மென்றும் பிராரப்தானுபவத்திலுண்டாகிற பாபபுண்ணியத்தை தூஷனை பூஷனைசெய்கிறவர்கள்கொண்டு போகிறார்களென்றும் தத்துவஞானம் வந்தவுடன் காரணசரீரம் பிரகாசத்தைக்கண்ட இருட்டைப்போல் நஷ்டமாகிறதென்றும் ஸ்தூல சரீரம் பிராரப்தநாசத்தில் ஸ்தூலபூதத்தில் உடைந்தகடம்போல லயத்தை அடைகிறதென்றும் சூக்கும சரீரஸ்வரூபத்தில் காயவைத்த இரும்பில் ஜலம்போல் விழுந்து லயத்தை அடைகிறதென்றும் கட ஆகாசமானது கடம் உடைந்தவுடனே மகா ஆகாசமாவது போல விதேகமுக்தியை அடைவாரென்றும் சுருதியில் சொன்ன சமஸ்தமும் ஆகாசம் தெரியாதகுழந்தைக்கு கிணறு தோண்டி ஆகாசம் காண்பிவிப்பதுபோலவே தவிற வாஸ்தவத்தில் எதிரிகளும் இந்த கல்பனைகளும், (1) கானல் நீர்போலவும், (2) கிளிஞ்சல் வெள்ளிபோலவும், (3) கெந்தர்வ நகரம்போலவும், (4) ஸ்வப்பன பிரபஞ்சம்போலவும், (5) பழுதையை பாம்பு போலவும், (6) மலடிமகன்போலவும், (7) கட்டைக்கள்ளன் போலவும் காலத்திரயத்திலும் உங்கள் பாதத்தின்மேல் ஆணைப்படிக்கி அறிவைதவிறவேறு ஒருவஸ்துவும் இல்லை என்று பிரமாணம் செய்தவுடன், இதைகோரட்டார் ரொம்பசந்தோஷித்து எதிரிகளை கூப்பிட்டு நீங்கள் இந்த நான் என்கிற சொத்தை எதாபிரகாரம் சம்மந்த மன்னியில் விட்டு நீங்களும் போன இடம் தெரியாமல் ருஜியாய்போகிறீர்களா அல்லது நான் உங்களிடத்திலிருக்கிற நான் என்கிற சொத்தை உங்களை விட்டு பிரிந்து உங்களையும் உயிற்கழுவில் போடுகிறது உங்களுக்கு சம்மதமாவென்று கேட்டவுடன்.

எதிரிகளும் கோரட்டாரவர்களை பார்த்து நாங்கள் செத்தாலும்சரி நாங்கள் இந்த நான்என்கிற சொத்தை கொடுக்கமாட்டோம், ருஜியாகவுமாட்டோம். கழுவேறத்துணிந்த அறுமணைகாள்போல் எதிரிகள் சொன்னதை கேட்டு,

கோரட்டார் இவர்கள் ரொம்ப அனியாயகாரரென்று தெரிந்துகொண்டு கீழ்கோர்ட்டில் இவர்கள் கருமோபாசகருடைய கங்களென்கிற லஞ்சத்தினால் நியாயமான வாதியினுடைய வழக்

கை மோசம் செய்திருக்கிறார்களென்று செம்மையாய் தெரிந்து கொண்டு இது பார்லிமெண்டு சீமை தீர்ப்பானதாலும் இதற்கு மேல் இன்னமொரு கோறட்டு இல்லாததினாலும் சகலத்திராளுக் கும் தெரியும்படியே சகலஞாயங்களேயும் கண்டுபிடித்து சகல சித்தாந்த ரகசியமான தீர்ப்புச்செய்யப்படுகிறது.

## Judgment—ஜட்ஜிமேண்டு.

வேதாந்த மென்கிற பார்லிமெண்டு சீமை கோறட்டில் சற் குரு ஜட்ஜிமுன்பாக தாபத்திரயமுள்ள ஜீவனுன வாதிக்காக சத்குணத்தோடுகூடிய விவேகன் யென்கிற வக்கீலால் நான் யெ ன்கிற சொத்து அசங்கமாயிருக்கவேணுமென்று பிறாதுகொடு க்கப்பட்டது.

பிரதிவாதிகள் அக்ஞானபுத்திரர்களான இகலோக காண்டி யான் 1-பாமரன் பரலோக காண்டியான் 2-கர்மபக்தகாண்டியான் 3-பக்தன் அவர்கள் 4-கோரமூடபுத்தியுடைய அகம்படித்த அனுத்மநாதனுகிய வக்கீலால் (*Answer*) ஆன்சர்கொடுக்கப்பட்டு எதிரிகள் சாக்ஷிகள் முழுமையு முதலில் விசாரணை செய்திருப் பதனலேயே அவர்களும் அவர்கள் தஸதாவேஜிகளும் அவர்கள் சாக்ஷிகளும் சுத்தபிரட்டென்று வெளியானதும்தவிர வாதி திர ப்புசாக்ஷிகளின் யோக்கியதையையும் அவர்கள் வாக்குமூலங் களும் சுருதி யுக்தி அனுபவங்களுக்கு ஒத்திருந்ததையும் அவர் கள் சொன்ன உபநிஷத்து வாசிஷ்ட்ட முதலான சுருதிஸ்மிருதிக ளின்பிரமாணத்தினலும் பூர்வாசாரியாளாயிருக்கிற வசிஷ்ட்டர் முதலான சகலபிர்ம்ம நிஷ்ட்டாளுடைய அனுபவத்திற்கு ஒத்தி ருந்த விசேஷத்தைப்பத்தியும் அதற்கேற்றதிருஷ்டாந்த கதை களேயும் சொல்சாதுரியங்களேயும் ஒழுக்கங்களேயும் ஆத்மாவை குறித்துச்சொன்ன நிந்தாஸ்துதிகளேயும் அனுத்மாக்களேகுறித்து ச்சொன்ன நிந்தைகளேயும் கேட்டசுந்தோஷமும் தவிர (*Argument*) ஆர்குமெண்டில் வாதிவைக்கில்பேசின ஒவ்வொரு அதிசிய மான உண்மையின் சங்கதிகளேயும் கேட்டு வாதிபக்கம் தீர்ப்பு சொல்லப்படுகிறது.

விவாத நான் என்கிற ஆத்மசொத்து ஒருவருக்கும் பாத்தி யப்படாமல் பொதுவாய் அசங்கமாயிருக்கிறதா அல்லது ஒரு

வருக்கு பாத்யப்பட்டு ஒருவர் ஆளுகையில் இருக்கக்கூடியதா வென்கிற முதலாவது (Points) பாயிண்டுக்கு சமாதானம்.

நான் என்கிற ஆத்மா அறிவாயிருப்பதாலும் அவருக்கு அன்னியமான அக்ஞானம் முதல் தேகம் வரையிலுள்ள சகல வஸ்துக்களும் ஜெடமாயும் அனாத்மாவாயும் இருப்பதால் ஒரு புருஷனாலே கெடபடாதி விஷயங்கள் ஆளப்படுகிறதே தவிர அந்த பதார்த்தங்களால் அந்த புருஷன் ஆளப்படாதது போலவும் பின்னும் வெள்ளெரிக்காயானது நரியை சாப்பிடாதது போலவும் சொப்பனத்தில் காணப்பட்ட சகல விஷயங்களையும் தானே அறிவதாலும் அந்த சொர்பனவிஷயங்கள் தன்னை அறியாமலிருப்பதுபோலவும் இந்த நான் என்கிற ஆத்மாவும் ஒருவர் ஆளுகையிலும் பாத்தியப்படாமலும் ஒருவருக்கும் சம்ம ந்தப்படமலும் மிருப்பதால் இவர்கள் அசங்கரென்றே நிர்ண யிக்கலாச்சுது.

இந்த பிறாதுகொண்டுவருவதற்கு வாதி அருஹறா அல்லவா வென்ற (2nd point) 2வது பாயண்டுக்கு சமாதானமாவது வாதி யே அர்ஹன் அது எப்படியென்றால் க்ஷத்திரியன் வைசியன் சூத்திரன் சண்டாளன் வறையிலுள்ள ஜனங்கள் பிறும்மணத்து வத்தைகுறித்து வழக்கு பண்ண அதிகாரிகளில்லாவிட்டாலும் பிறுமணன் தன்பிறுமணத்துவத்தைகுரித்து வழக்கு பண்ண அதிகாரியாயிருப்பதுபோலவும் ஸ்திரிகள் நான் புருஷனென்று சொல்வதற்கு அதிகாரி இல்லாவிட்டாலும் புருஷன் நான் புரு ஷனென்பதற்கு அதிகாரியாயிருப்பதுபோலவும் நான் என்கிற அறிவாயிருக்கிற ஜீவனும் தேகாதிபஞ்சகோசங்களுக்கு நான் என்று சொல்ல அதிகாரம் இல்லாவிட்டாலும் அதுகளைப்போல் ஜடமில்லாமல் சித்தாயிருப்பதாலும்இந்தவாதியே இந்தவழக்கு கொண்டுவர அர்கனென்று தீர்மானிக்கலாச்சுது.

இந்த பிறாது காலநிரணயசட்டத்தால் பாதிக்கப்படுமோ பாதிக்கப்படாதாவென்ற (3rd point) 3வது பாயண்டுக்கு சமா தானம்.

சட்டத்தில் எந்தசொத்துக்கு காலநிர்ணயம் சொல்லப்பட் டாலும் தெய்வசொத்து காலநிர்ணயதோஷம் சொல்லப்படாத

தாலும் பின்னும் வாஸ்தவமாய் நேரே கொடுத்த சொத்துக்கு காலநிர்ணயமேதவிர ஒரு சொத்து உடையவனை அறியாமல் திருடி வெகு நாள்வைத்திருந்தாலும் கண்டு பிடித்தால் கால நிரணயமாய் விட்டதால் கொடுக்கமாட்டேனென்று சொன்னால் அவனுக்குதெண்டனையும்கொடுத்து சொத்தையும் எப்படி பிடுங்கி கொடுப்பார்களோ அப்படிப்போல் இந்த நான் என்கிற சொத்து அறிவாகிற தெய்வத்தினுடைய சொத்தானதினாலும் அஞ்ஞாநிகள் அறியாமல் திருடிக்கொண்டதாகையாலும் இந்த நான் என்கிற சொத்தை பிரதிவாதிகளிடமிருந்து திருப்பி கொடுப்பதில் காலநிரணயசட்டத்தால் தடை இல்லை என்று தீர் மானிக்கலாச்சுது.

இந்த கோறட்டாருக்கு விவாதசொத்தை எதிரிகளிடத்தி லிருந்து திருப்பி கொடுக்ககூடுமோ கூடாதா வென்ற (*4th point*) 4வது பாய்ண்டுக்குசமாதானம்.

இந்தகோர்ட்டாருக்கே இந்தசொத்தை திருப்பிக்கொடுக்க அதிகாரமிருக்கிறதே தவிர மற்றயாருக்குமில்லை அதெப்படி என் என்றால் (*Governor Collector*) கவர்னர்கலக்ட்டர், முதலான (*Rev enue*) ரிவினியுதர்பாருக்கு ஒருவன் ஆளுகையிலிருக்கிற சொத் தை இன்னொருவனுக்குப் பிடுங்கிகொடுக்க அதிகாரமில்லாதது போல் கரமிபக்த்தாள் யோகிகள் முதலானவர்களால்உபாசிக்கப் படுகிறமாயாதர்ப்பாறுன ஈசுவராதிகளுக்கு இந்த நானென்கிற சொத்தை திருப்பிகொடுக்கிறதற்கு அதிகாரமில்லை என்பதற்கு பிரயோஜனமென்னவென்றால் சுருதிஸ்மிருதி இதிகாசபுராணங் களில் பிரதிபாத்தியாளாக இருக்கிற அனேகஜீவர்கள் சிவன்முத லானதேவதைகளை உத்கிருஷ்ட்ட கரமோபாசனைகளால் சான்னித் தியமாகும்படியாகச்செய்து அவர்கள் மாய்கைக்குள்ச்சேர்ந்ததா யிருக்கிற தங்கள் தங்கள் லோகங்களிலுள்ள பதவிகளையும்அஷ்ட மாசித்திகளையும் கொடுத்திருக்கிறதாக சொல்லப்படுகிறதேதவிர அஞ்ஞானத்தையும் அஞ்ஞானகாரியமான அனாதிகாலமாய் முன் னிருந்த ஜீவத்துவத்தையும் அதினாலுண்டாயிருக்கிற சஞ்சிதா காமியகர்மங்களையும் அதுகளாலுண்டாகிற ஜனனமரணாதிசம்சா ரங்களையும் மாற்றிஅப்பிரதிபந்த அபரோக்ஷசாக்ஷாத்காரமாயிருக

கிற பிரம்மஞானத்தை கொடுக்கவில்லையென்றும் அப்படியாருவது அந்தஞானத்தை உபதேசிக்க வேண்டுமென்று கேட்டவர்களுக்கும் குருவைப்போய் சரணமடைந்து கேட்டுக்கொள்ளென்றும் இன்னம் முக்கிய அதிகாரிகளான சனகாதியன் ஈசுவரனை ஞானஉபதேசம் செய்யபிரார்த்தித்த காலத்திலும் ஈசுவரவடிவத்தை விட்டு தெக்ஷிணாமூர்த்தியன் குருவடிவத்தை யெடுத்துக்கொண்டே உபதேசித்திருப்பதாயும் சொல்லபடுவதாகையால் (Governor) கவர்னர் முதலானவர்களாகிய மாயாதர்பாருயிருக்கிற ஈசுவராதிகளுக்கு பிரபுத்துவமான சொத்தை எப்படிதிருப்பிக்கொடுக்க அதிகாரமில்லையோ அப்படி இல்லாமல் கோரட்டாருக்கு எப்படி ஒருவன் ஆளுகையிலிருக்கிற சொத்தை இன்னொருவனுக்கு திருப்பிக்கொடுக்க அதிகாரமிருப்பதுபோல் ஞானியாயிருக்கிற மேலானகோரட்டாராகிய சத்குருவான' ஜட்ஜிக்கிமட்டும் நானென்கிற ஆத்மாவை எதிரிகளிடத்திலிருந்து திருப்பிக்கொடுக்க அதிகாரமுண்டு என்று தீர்மானிக்கலாச்சுது.

எதிரிகள்விவாதசொத்தை அக்கிரமமாய்வியாபித்திருந்தால் அவர்களை தெண்டிக்க (Law) லா இடம்கொடுக்குமா கொடாதா வென்ற (5th -point) 5-வது பாய்ண்டுக்கு சமாதானம்.

சம்சாரகாரணமாயிருக்கிற அக்ஞானமாகிற இருட்டுக்கு ஞானமாகிற பிரசின்ட சூரியனென்று சுருதிசொல்லி இருப்பதால் சற்குருவினிடத்திலிருக்கிற அக்ஞானதி எதிரிகளை தெண்டிப்பதில் (Law) லாவுக்கு விரோதமில்லை என்று தீர்மானிக்கலாச்சுது. ஆகையால் நான் என்கிற வஸ்துவானது சகல வேதங்களாலும் சத்தென்று சொல்லப்படுகிறது எப்படி என்றால் ஜகத்தைப்போல் அசத்தல்ல வென்பதற்காகவே அப்படியே ஜெடத்தை தள்ளுகிறதற்காக (சித்தென்றும்) அனித்தியத்தைக்குறித்து நித்தியமென்றும் துக்கத்தை தள்ளுகிறதற்காக ஆனந்த மென்றும் கண்ட ரிந்ததைகுறித்து பூர்ணமென்றும் அனேகத்தை ஏகமென்றும் பொய்யாயிருக்கிற விவகாரத்தைக்குறித்து பாரமார்த்தமென்றும் அவஸ்தாத்திரயத்தைக்குறித்து துரியமென்றும் இப்படியெல்லாம் சொல்லப்பட்டகுணங்கள் இயாவற்றும் அந்த நான்

என்கிறவஸ்துவுக்கு ஸ்வரூபமாயிருப்பதாலும் சகலசுருதிஸ்மிருதி இதிகாச புராணங்கள் அங்கங்கேமாயாகாரியபலமானதுவைதங்களைபிரதிபாதத்திருப்பதாலும் அதுகளின் கருத்து அத்துவைதத்திலேயே தாத்பரியமாயிருக்கிறது அது எப்படி வெளியாகிறதென்றால் கண்டலட்டுநியாயம்போல் அத்துவைதத்தை முடிவில் அங்கங்கேஸ்தாபித்திருக்கிறதே அடையாளமென்று நிச்சயித்து அகண்டபரிபூர்ணசச்சிதானந்த பிரம்மஸ்வரூபமானது அகம்பதார்த்தமாகிற ஆத்மாவை வாதியின் பிரார்த்தனைபிரகாரம் தானாய் அசங்கனாய் வாதியையும் வாதியை சேர்ந்தவர்களையும் பரம்பரமாய் சாசவதமாய் அனுபவித்து வரும்படிக்கும் இனிமேல் இந்தநான் என்கிற வஸ்துவைகர்த்திருத்துவமுதலான ஒருவிவகாரத்திலாவது யாரும்சேர்த்து அத்தியாசப்படுத்தி அனுபவிப்பார்களேயானால் அவர்கள் ஒருநாளும் ஜனனமரணமாகிர நரகத்தைவிட்டுகரையேரபோகிறதில்லையென்றும் தீர்ப்புச்செய்ததும் தவிரமருபடிஎதிரிகள் திரும்ப உண்டாய் முன்போல் சம்சாரதுக்கங்களை உண்டுபண்ணுமலிருப்பதற்காக விசாரச்சியத்தால் ஜவலித்துக்கொண்டிருக்கிற பூர்ணஞானக்கினியால் எதிரிகளையும் கொளுத்திதக்தமடம்போலும் பொய்யாகவே எல்லாருக்கும் தெரியும்படி காண்பிவிக்கப்பட்டிருக்கிறதுஆகையால் இந்ததீர்ப்பை ஆதியோடந்தம்குருமுகமாயும்சாதுக்களுடனும் பூர்வாபரவிரோதமன்னியில் நன்றாய் பரமரிசித்து பார்த்து இந்தப்படி நான் என்கிற ஆத்மாவை கர்த்திருத்துவமுதலான ஒருதொழிலிலும் சேர்க்காமல் நானே சரீரத்திரயவிலக்ஷணன் அவஸ்தாதிரயசாக்ஷிசச்சிதானந்த ஸ்வரூபனென்றும் தோணப்பட்டதேகாதி சகலபிரபஞ்சமும் காலதிரயத்திலும் இல்லையே இல்லை என்றும் நிச்சயித்த புருஷன் இப்பவே ஜீவன்முக்தனாய் விதேக முத்தியும் அடைந்திருப்பனென்று தீர்ப்புயெழுதிசொல்லப்பட்டது.

பிரம்மாநந்தகுருவே நம:

# முகவுரை.

உலகமுதல்பொருளை யும்பர்க்குணர்வரிதாம்பொருளை
ஓதியவேதாகமத்தி னுச்சியினுட்பொருளை
பலகலையின்பொருள்முடிவின முடிவானபொருளைப்
பற்றறப்பற்றியபெரியோர் பரவியவான்பொருளை
அலைத்திவளைநுரைகடலி லுதித்தொடுங்குமாபோ
லகிலாண்டமுதித்தொடுங்கு மதின்மூலப்பொருளை
இலகியசற்குருவாகி யாளுகும்பொருளை
யெங்குமாம்பரம்பொருளை யாம்வணங்குதுமே.

நம்மால் ஏற்கனவே இயற்றப்பட்ட ஞானவியவகாரமென்னும் புஸ்தகத்தின் முடிவுசெய்யப்பட்ட ஜட்ஜிமெண்டில் காட்டிய சற்குரு சந்நிதான கோர்ட்டாரால் அஞ்ஞானிகளாகிய தத்துவங்களை சிக்ஷிக்கப்படுகிற மேல்ச்சொல்லிய ஞானவியவகாரமாகிய இந்த 2-வது பாகபுஸ்தகத்தை ஸ்ரீ பிரமாநந்தசுவாமிகளுடைய கிருபாகடாக்ஷத்தால் இயற்றப்பட்டது.

சர்வமானிடர்களும் எளிதில் நன்றாய் மனதில் பதியுமாறு. மானிடர் ஆண், பெண், இருபாலார்க்கும் படிப்பினையாயிருக்கும் பொருட்டு அமைக்கப்பட்டிருக்கிறது.

I. S. நாராயணசாமி ஜோசியர்.

# அறிவிப்பு.

இப்புத்தகம் வேண்டியவர்கள் அடியில்க்கண்ட இடங்களில் நேரிலாவது வி. பி. மூலமாயாவது பெற்றுக்கொள்ளலாம்.

வி. பி. சார்ஜ பிரத்தியேகம்.

ஒரே தடவை 10 புத்தகம் வாங்குவோர்களுக்கு ஒரு புத்தகம் இனுமாகக் கொடுக்கப்படும்.

Messrs. V. கோவிந்தன் & பிரதர்ஸ,
வடக்குவீதி தஞ்சாவூர்.

பிரம்மஸ்ரீ I. S. நாரயணசாமி ஜோதிடபண்டிதர்,
சாமந்தாங்குளம் தஞ்சாவூர்.

I. S. நாராயணசாமி ஜோசியர் அவர்கள்
புக் புரோப்ரைட்டர்.
கல்லிக்குடி.

# தைப்பூசமும்,
# தெப்ப விழாச்சிறப்பும்

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-600 090.

Srik.S

Srik.S

ஸ்ரீ கபாலீஸ்வரர் தேவஸ்தானம்

GF மயிலாப்பூர். : : சென்னை-4.

1971.

R673x1:g
L1;1